யாழ் இந்து மகளிர் கல்லூரி

75TH ANNIVERSARY

IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE

JHLC - ESTD:10.09.1943

2018

1943

# சக்தி

## SAKTHI

Jaffna Hindu Ladies' College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA HINDU LADIES' COLLEGE

75TH ANNIVERSARY

IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE

JHLC - ESTD:10.09.1943

# சக்தி

## பவளவிழா மலர்

# SAKTHI

2018 ISSUE: XXIII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : "Sakthi"

Published in : September 2018

Published by : Jaffna Hindu Ladies' College

Pages : IV + 232

Editorial Board

Ex-Officio President: The Principal

Co-ordinator : Miss. Nirmala Somasuntharam

Tamil : Mrs. S. Sebamalaithasan
Mrs. K. Thanamoorthy
Mrs. K. Anantharatnam
Mr. A. Lingaraj

English : Mrs. K. Tharmakunasingam
Mrs. S. Brihadiswaran

DESIGNED AND PRINTED BY:

JEYASRI PRINTERS. 34, BROWN ROAD, JAFFNA. 0094 21 221 9129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


கல்லூரி கீதம்........................................i
VISSION MISSION........................................ii
காப்பு........................................iii
சற்றே திரும்புங்கள்........................................iv
ஆசிச்செய்திகள்........................................1-26
அதிபர்அறிக்கை........................................27-29
இது அழகாக இருக்க வேண்டும்........................................30-32
பாடசாலை வரலாறு........................................33-50
உயிர்களிடத்தில்அன்பு வேண்டும்........................................51-52
எண்ணங்களை மேம்படுத்துவோம்........................................53-54
எப்படிப் போகலாம் இந்து மகளிர் கல்லூரிக்கு........................................55-56
நெஞ்சோடு சில நினைவுகள்........................................57-59
பிளாஸ்ரிக் பிடியில் பூமி........................................60-63
நல்லதோர் வீணை செய்தே........................................64-66
வேலியே பயிரை மேய்ந்திடும்........................................67-68
தமிழில் பிறமொழிக் கலப்பு........................................69-71
என்றும் இசை........................................72-74
ஆசானின் மகத்துவம்........................................75-76
உயர்ந்த எண்ணமும் உயர் விளைவும்........................................77-79
விடியலைத் தேடி........................................80-83
கட்டிளமைப் பருவத்துப் பிள்ளைகளும்
பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்களும்........................................84-87
தற்காப்புக் கலை........................................88
நினைவின் பதிவுகள்........................................89-91
இன்றைய காலகட்டத்தில் இரண்டாம் தேசிய மொழியின்
(சிங்களம்) அவசியம்........................................92-93
தொற்றா நோய்களும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான
வழிமுறைகளும்........................................94-98
என்மனவானில்........................................99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உயர்தரத்தில் கணித விஞ்ஞானக் கல்வி ....................................100-101
பசுமை நிறைந்த நினைவுகள் ..............................................................102-106
கணித இயல்பும் பாடசாலைக் கல்வியும் ..............................................107-113
கண்ணன் உபதேசித்த கீதை அதன்வழி நடந்த கர்ணன்..........................114-117
மாணவர்களுக்கு 13 வருட உத்தரவாதக் கல்வி.......................................118-119
Organic Farming and its important.............................................120-121
Future Inventions......................................................................122
Water Crisis.............................................................................123
Realization ..............................................................................124
My First Day at School...............................................................125
Good bye My Dear Friend ..........................................................126
Global Warming.........................................................................127
Declining Educational Standard in Jaffna over the years.........128-129
Metabolism...............................................................................130-131
Promoting English Speaking Skill ..............................................132-136
கல்லூரியின் செயற்பாடுகள்
மன்றங்கள்,கழகங்கள், அறிக்கைகள்
பரீட்சைப் பெறுபேறுகள்
Awards and Medals
Staff List
நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

திருமிகு மெங்கள் யாழ் நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடும் கல்லூரி - எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்
பிறங்கிடும் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடும் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி - இயல்
சிந்தை வளம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சியமனைத்தும்
நல்கிடும் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூர நோக்கு

"கல்வி படைப்பாற்றல், உடல்,உள ஆன்மீக மேம்பாட்டினூடாக எதிர்கால சவால்களை எதிர்கொள்ளத்தக்க ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்கும் ஒரு உன்னத இடமே யாழ் இந்து மகளிர் கல்லூரி"

## Vision

"JHLC is the place of excellence where children can achieve full potential in their academic, creative, personal, physical, moral and spiritual development to meet the challenges of their life in the globalizing world,

## பணிக்கூற்று

பல்பரிமாணச் செயற்பாடுகள் ஆளிடைத் தொடர்புகளினூடாக அறிவு, நன்னடத்தை, விழுமியங்கள் சார் கல்வியை வழங்கல்

## Mission

To Provide education that will impart knowledge, moral and ethical values through multi dimensional activities and interpersonal relationship



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு







ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழி மூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சக்தி
## (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 75ஆவது ஆண்டுவிழா மலர்)

மலர் XXIII

## சற்றே திரும்புங்கள்!

ஏன் என்கிறீர்களா?ஆம்!நீங்கள் கேட்பதில் நியாயம் இருக்கின்றது. இதே கேள்வியை இன்றைக்கு 75 வருடங்களுக்கு முன்பு கேட்டிருந்தால் யாருமே ஏன் என்றே கேட்க மாட்டார்கள். திரும்பி வருகின்றோம் என்ற வார்த்தை வருமுன்பே தாம் வந்து விடுவார்கள். ஆனால் இன்றோ விஞ்ஞான அறிவு முன்னேறி யாவரும் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் காலம். இதில் ஒரு மயிரிழைத் தூரமேனும் பின்னோக்கும் எண்ணம் எழுவதற்கு இடமில்லை. இச்சுபாவம் நன்றேயாயினும் எமது கல்லூரித் தாயின் வளர்ச்சிக் கட்டங்களை, அவ்வளர்ச்சிக்கு வளம் சேர்த்த வள்ளல்களை அவர்களின் அர்ப்பணிப்புக்களை, தியாகங்களை, வகுத்த வாழ்விற்கான ஒழுங்கு முறைகளை எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியமல்லவா?

இந்து சமூகத்தவர்களை அந்நியர்கள் தங்கள் மொழியாலும், மதத்தாலும் அடிமைப்படுத்திய போது கிளர்ந்தெழுந்த ஒரு சில சைவத்தமிழபிமானிகளால் உருவாக்கப்பட்டு உயர்ந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குகின்ற எங்கள் இந்து மகளிர் கல்லூரி அன்னை இவ்வாண்டு தனது 75ஆவது அகவையைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் இம்மலர் ஆன்மீகப் பெரியார்கள், கல்விப்புலம் சார்ந்தோர், பேராசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள் போன்றோரின் ஆதரவோடு மணம் மிகப் பரப்பி மலர்ந்துள்ளது.

இளவேனிற் காலத்தில் இதழ் விரிந்து மலரும் பூக்களின் சோபையைப் பன்மடங்கு கூட்டுவதற்காக எழுந்த ஆதவனைப் போல, எமது கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவைப் பலவித விழாக்களினால் கொண்டாடிப் பூரிப்பும், பெருமையும், அடைந்திருக்கும் இவ்வேளையில் எமது கல்லூரிச் சஞ்சிகையான ' சக்தி ' யின் பவளவிழா மலர் எமது மகிழ்வைப் பன்மடங்காக்குவதற்காக வெளிவந்துள்ளாள். இம்மலரை வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் கலைச்செல்வியின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம். இதனை ஏற்றுக் கொண்டு 75 வயது பூர்த்தியடைந்துள்ள எமது கல்லூரித்தாயை ஆசீர்வதித்து அருள்பாலிக்குமாறு கலைச் செல்வியின் பதமலரைப் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.


இணைப்பாளர்
செல்வி.நிர்மலா சோமசுந்தரம்
ஆசிரியை, பழைய மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் ஸ்தாபகர்



## திருமதி. விசாலாட்சி சிவகுருநாதர்

இந்துப் பெண்களின் தனித்துவம் பேணவும்
பங்கம் இல்லாமலே பாவையர் கற்கவும்
மங்கையர் திலகம் விசாலாட்சி அம்மையாரால்
மாண்புறவே எங்கள் கல்லூரி உருவானதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை

நங்கையர் வாழ்வின் இலட்சியமனைத்தும் நல்கிடும் கல்லூரியாம் எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி அன்னை 1943ம் ஆண்டிலிருந்து பெருவளர்ச்சியடைந்து பவளவிழாப் பொலிவு காணும் இவ்வேளையில் கல்லூரியின் ஆலய குருவாகிய நான் ஆசியுரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

எத்தனையோ அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஆகியோரின் ஒத்துழைப்போடும், தளராத முயற்சிகளாலும் போற்றி வளர்க்கப்பட்ட எமது கல்லூரித்தாய் இன்று பவள விழா காண்கின்றாள் என்ற செய்தி அனைவருக்கும் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அளிப்பதாகும். இவ்வேளையில் கல்லூரி ஸ்தாபிப்பதற்கு வித்திட்ட தூயமனம் கொண்ட பெண்மணியான திருமதி. விசாலாட்சி சிவகுருநாதர் அவர்களை நன்றியோடு நினைவு கூரவேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரதும் கடமையாகும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி இன்று யாழ்மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குவது யாழ்ப்பாணத்து இந்துப் பெருமக்களுக்கு பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும். தன்னுடைய வளர்ச்சிப்பாதையில் 75 வருடங்கள் நிறைவுசெய்து பொலிவு பெற்றுள்ள எமது கல்லூரி சகல வளங்களும் நிறைவாகப்பெற்று நூற்றாண்டு விழா நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடைந்து சீலமிகு பெரும் சிறப்புப் பெற்று ஓங்கக் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகர் அருள் புரிய வேண்டும் என்று ஆசி வழங்குகின்றேன்

சுபம்

பிரம்ம ஸ்ரீ .பா.நகுலேஸ்வர குருக்கள்
ஆலயப்பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

கல்விப் பெருந்தகையீர்!

## அருளாசிச் செய்தி

யாழ்ப்பாண வரலாற்றில் தமிழர்களின் நீண்டகால கல்விப் பாரம்பரியத்தை சமய ஒழுங்குடன் மகளிருக்கு வழங்கும் இந்து மகளிர் கல்லூரி இன்று பவளவிழாக் காண்பது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. பல வரலாறுகளிற்கு தன்னை ஆளாக்கிய பாடசாலை அன்றும், இன்றும், என்றும் ஒழுக்க விழுமியங்களிலும், கல்விச் செயற்பாட்டிலும் ஏனைய துறைகளிலும் தனக்கென இடத்தை வகித்துக் கொண்டு செயலாற்றி வருவது அனைவரது உள்ளத்திலும் கவனத்திற்குரியது. "சக்தி சஞ்சிகை" ஊடாக பல தகவல்களைத் தந்து கொண்டிருக்கின்ற பாடசாலை இன்று பவளவிழாவினூடாக பல சிந்தனைகளை வெளிப்படுத்தி இருப்பது மாணவர்களிற்கும், பெற்றோர்களிற்கும் பெருவிருந்தாக அமைகின்றது. இப்பணியைச் சிறப்பிக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் மற்றும் மலர்க்குழுவினருக்கும் அன்போடு சேர்ந்த இறையாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இனிய அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI : NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : + 94 11 259 1344
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org



சின்மயா மிஷன்
இல9, செட்டித்தெரு ஒழுங்கை
நல்லூர்

## ஆசிச் செய்தி

உயரிய எண்ணங்கள் ஒன்றுகூடும்பொழுது அதன் விளைவு மிகவும் பயனுள்ள வெளிப்பாடாக அமையும் .அந்தவகையில் இற்றைக்கு எழுபத்தைந்து (75) ஆண்டுகளிற்கு முன்பே யாழ்ப்பாண இந்துப் பெண்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு திருமதி. விசாலாட்சி சிவகுருநாதரின் பூதானத்தில் இந்துக்கல்லூரி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட யாழ் இந்துமகளிர் கல்லூரி ஓங்கி உயர்ந்து பவளவிழா கொண்டாடுவது போற்றுதற்குரியதாகும்

இன்றைய காலகட்டத்தில் பெண்சிறார்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமான தொன்றாகக் காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு யாழ் இந்துமகளிர் கல்லூரி பெண்களின் விடிவெள்ளியாக கல்வி. கலை. பண்பாடு ஆன்மீகம். தலைமைத்துவம் என இன்னோரன்ன ஆளுமைப்பண்புகளை உள்வாங்கி. நிமிர்ந்த நன்நடையும் நேர் கொண்டபார்வையும் உடையவர்களாக மகளிரை உருவாக்குவது வரவேற்கத்தக்கது. இவ் இந்துப் பெண்கள் பாடசாலை. இல்லம் தோறும் இந்துப்பாரம்பரியம் வளர வழிசெய்து மென்மேலும் வளர்ச்சி அடையவும்.பவள விழா இனிதே நிறை வேறவும். அதனை முன்னிட்டு வெளிவர உள்ள மலர் சிறப்பாக அமையவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல பரம் பொருளையும் பூஜ்ய குருதேவரின் பாதார விந்தங்களையும் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியில்.
சுவாமி. சிதாகாசானந்தா.
சின்மயா மிஷன்.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
T.P No : 021 - 3213151
திகதி 01 - 08 - 2016
Fax:- 021 2241909
தலைவர்
செஞ்சொற் செல்வர்
கலாநிதி ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN
E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511



## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கிய ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்து சைவ மகளிருக்காக உருவாக்கப்பட்ட யாழ் இந்து மகளிர் கல்லூரியின் 75 வது நிறைவையொட்டிய பவளவிழா குறித்து ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1890ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அக்கல்லூரி நிர்வாகத்தினால் தற்போதுள்ள கல்லூரியின் விளையாட்டு மைதான வளவில் தமிழ்மொழி மூலமான கற்கைகளுக்காக இந்துக் கல்லூரி தமிழ்ப் பாடசாலை அமைக்கப்பட்டது. இப்பாடசாலை 1915ம் ஆண்டு அமைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இப்பாடசாலையில் பெண்களும் கற்றார்கள். அக்காலத்தில் பெண்கள் ஓரளவு கற்ற பின் பெற்றோர் பாடசாலைக்கு செல்வதை நிறுத்தி விடுவார்கள். இந்நிலையில் சில பெற்றோர்கள் பெண் பிள்ளைகளின் கல்வியில் காட்டிய அக்கறை காரணமாக யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களுடன் இணைத்து சிறிய பெண் பிள்ளைகளுக்கு இடைநிலை வகுப்பில் ஆங்கிலக் கல்வி வழங்கத் தொடங்கினர். இதனைக் கேள்விப்பட்டு மாணவிகளின் தொகை அதிகரித்த காரணத்தினால் தனியானதொரு மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி முகாமைத்துவ சபையினால் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நிலையில் இந்துக்கல்லூரி விருத்திக்காக நடத்திய காணிவல் நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட தீ விபத்தினால் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்த தமிழ்ப் பாடசாலையின் வகுப்பறைக் கொட்டில்கள் யாவும் முற்றாக எரிந்து தீக்கிரையானது. இதன் விளைவாக இந்துக் கல்லூரி தமிழ்ப்பாடசாலை தனியானதொரு இடத்தில் கஸ்தூரியார் வீதியில் கட்டப்பட்டது. அப்பாடசாலையே இன்று யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையாக விளங்குகிறது. இதே காலப் பகுதியில் யாழ் இந்துப் பெண்களுக்காக விளையாட்டு மைதானத்து முன் வளவில் அமரர் பொன்னுச்சாமி என்பவர் வீட்டில் யாழ்இந்து மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையாரின் பரோபகாரத்தால் இன்று இந்து மகளிர் கல்லூரி அமைந்திருக்கும் வளவில் புதிய கல்லூரி நிரந்தரமாகக் கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இந்துக்கல்லூரி முகாமைத்துவ சபையே இக்கல்லூரியின் நிர்வாகத்தை கண்காணித்து வந்தது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவியும் பட்டதாரியுமான திருமதி காயத்ரி கணேசன் அவர்கள் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்துப் பெண்கள் உயர்ந்த சமயப் பண்பாட்டுடன் ஆங்கில மொழி மூலமான கற்கையை தொடர யாழ் இந்து மகளிர் கல்லூரி வரப்பிரசாதமாக அமைந்தது. இக்கல்லூரியின் துரித வளர்ச்சி காரணமாக பல ஊர்மாணவிகளும் கல்லூரியை நாடத் தொடங்கினர். இதனால் இக்கல்லூரி வளாகத்தில் விடுதிச்சாலை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அன்று முதல் கல்லூரியின் வியத்தகு சாதனைகள் எழுச்சி பெற்றன.

இன்று யாழ்குடாநாட்டில் உன்னதமான ஓர் இந்து மகளிர் கல்லூரியாக இக்கல்லூரி விளங்குவது சைவத் தமிழ் மக்களுக்கு பெருமை தரும் விடயமாகும். கடந்த 75 ஆண்டு காலமாக கல்லூரியை வளர்த்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள் என்றுமே நன்றிக்குரியவர்கள். இன்று பவளவிழா காலத்தில் சிறந்த ஆளுமையோடு கல்லூரியை ஆற்றுப்படுத்தும் திருமதி.மி.விமலநாதன் அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கல்லூரியின் பழைய மாணவிகள் பல நாடுகளில் - உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் சங்கம் அமைத்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்வது கண்டு, அவர்கள் பணி குறித்தும் இவ்வேளையில் வாழ்த்துகிறேன். கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் திருவருளால் பவளவிழா சிறக்க பிரார்த்தித்து அமைகிறேன்.

**ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




No: 5162

Office 021 221 9378

Fax 021 221 9374

Web www.np.gov.lk

My No G/NPC/HG/A2

රෙජිනෝල්ඩ් කුරේ
ரெஜினோல்ட் குரே
**Reginald Cooray**
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
Governor, Northern Province

Governor's Secretariat

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

Date 17/05/2017


## Northern Province Governor's message to 75th anniversary celebration of Jaffna Hindu Ladies College.

It gives me great pleasure to offer this message to the magazine being published to mark the 75th anniversary celebration of Jaffna Hindu Ladies' College, one of the distinguished schools in Northern Province of Sri Lanka.

I learn that on 10th September 1943 , the Board of Management of Jaffna Hindu College and Affiliated Schools established a separate girls school - Jaffna Hindu Ladies' College. This was the first girls "Hindu"school. On 7th September 1945 Jaffna Hindu Ladies College moved to the present location.

The great service and participation of the Jaffna Hindu Ladies' College - community including past and present principals and teachers, past and present pupils, parents and well-wishers in its long history to bring up the school to its upliftment as an academically effective institution should be admired during this 75th anniversary celebration .

It is widely known that Jaffna Hindu Ladies' College has a proud record of achievements that will certainly place it among the schools of excellence in the country. This school has produced a number of distinguished citizens, who have made significant contributions to the country in general and to the Northern Province in particular.

During the last decades Jaffna Hindu Ladies' College has achieved a number of academic successes. Dedicated leadership of the past and present Principals and commitment of their teaching staff have enabled the school to accomplish their Mission goals.

On this happy occasion of their 75th anniversary celebration, I wish them continued success in the future.
Thanks.

Reginald Cooray,
Governor,
Northern Province

Reginald Cooray
Governor
Northern Province


9/1, Lily Avenue, Jayanthipura, Battaramulla
Telephone : 0112863371
Fax : 0112885436
e-mail: hongovcol@gmail.com

Sub Office :
9/1, Lily Avenue, Jayanthipura,
Battaramulla.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

**Justice C.V.Wigneswaran**

**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்துறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்

[illegible]

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration


எனது இல / මගේ අංකය / My No } NP/CM/media/02/08/2017

திகதி / දිනය / Date } 02.08.2017

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 75 ஆண்டுகள் சிறப்பான கல்வி சேவையை நிறைவு செய்து பவள விழாக்காணவிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படவிருக்கின்ற பவள விழா சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அமெரிக்க மற்றும் தென்னிந்தியத் திருச்சபைகளின் வருகையினால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் யாழ்ப்பாண சைவசமய பெண் சிறார்கள் கல்வி கற்பதன் மூலம் சைவ சமய பாரம்பரியங்களில் இருந்து அந்நியப்பட்டுப் போவதைத் தவிர்க்கும் நோக்கில் சைவசமய தமிழ்ப் பண்பாட்டுடன் கூடிய ஆங்கில மொழிக் கல்வி அறிவையும் பெண் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் உருவாக்கப்பட்டதே யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகும்.

1935 இல் யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்த பாடசாலையாக இப் பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போதும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க 1943 இல் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பொன்னாலயம் என்னும் வீட்டில் தனியாக பெண்களுக்கான பாடசாலை இயங்கத் தொடங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன.

கல்வி, படைப்பாற்றல், உடல், உள, ஆன்மீக மேம்பாட்டினூடாக எதிர்கால சவால்களை எதிர்கொள்ளத்தக்க ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்கும் ஒரு உன்னத நோக்குடன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்ற இக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசியப் பாடசாலைகளின் தரங்களிற்கு ஒப்பாக வளர்ச்சி கண்டிருப்பதும் கல்வி அறிவூட்டலில் மேம்பட்டிருப்பதும் மகிழ்வுடன் நினைவு கூரப்படுகின்றது.

இந்த மகளிர் கல்லூரியானது மென்மேலும் வளர்ச்சியுற்று ஒரு தேசிய பாடசாலையாக உயர்ச்சி பெறுவதுடன் இதன் கல்விச் சேவைகள் சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வட மாகாணம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்


A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் / A9 පාර, කයිතඩි, යාපනය / A9 Road, Kaithadi, Jaffna

தொலைபேசி / දුරකථන / Telephone } 021 221 7311, 021 221 7313

தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 221 7227, 021 221 7310

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / email } cmofficenorthernpc@gmai





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
**JAFFNA MUNICIPAL COUNCIL**

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். | පේදුරුතුඩුව පාර, යාපනය. | Point-Pedro Road, Jaffna.

அலுவலகம் / කාර්යාලය / Office 021 222 2275 | தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 222 2334 | இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet www.jaffna.mc.gov.lk

2018.06.11

## யாழ் மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பவள விழா ஆண்டை முன்னிட்டு வெளிவரும் சக்தி சஞ்சிகை இதழிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாண கல்விப்பாரம்பரியத்தில் யாழ் இந்துவிற்கு என ஒரு நீண்டகாலப் பாரம்பரியம் உண்டு. யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, யாழ் இந்துக் கல்லூரி அதன் தொடர்ச்சியாய் யாழ் இந்து மகளிர் கல்லூரி இவை நான்கும் ஒரு சகோதரத்துவப் பிணைப்பில் இற்றைவரை கல்விப்புலத்தில் ஏகப்பட்ட சாதனைகளைப் படைத்துவருகின்ற பாடசாலைகள் ஆகும்.

இதன் தொடர்ச்சியாய் யாழ் இந்து மகளிர் கல்லூரி பவள விழா ஆண்டைக் கொண்டாடிக் கொண்டிருப்பது உண்மையில் மகிழ்ச்சி தருகிறது. மகளிர் பாடசாலைகளுக்கென எம் மண்ணில் மிக நீண்ட வரலாற்றுப்பின்னணிகள், பாரம்பரியங்கள் ஏராளமுண்டு. ஆயினும் யாழ் இந்து மகளிர் கல்லூரி கல்வி, கலை, விளையாட்டுத்துறை என அனைத்துத் துறைகளிலும் பன்னெடுங்காலமாக முத்திரை பதித்து வருகின்றது. இந்த நீட்சியில் பவள விழாவை முன்னிட்டு வெளிவருகின்ற இந்த சஞ்சிகை முயற்சி உண்மையில் பாராட்டத்தக்கது.

இன்று ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் ஊக்குவித்துவளர்த்த பெருமையானதுஅவரவர் பாடசாலைகளின் பெரும்பாலான சஞ்சிகைகளையே சாரும். ஆகவே இவ்வாறான முயற்சிகள் ஊடாக மாணவச் செல்வங்களின்புதிய புதிய ஆக்கங்கள் வெளிவரவேண்டும் என்ற நற்செய்தியையும் கூறிக்கொண்டு இம்முயற்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் கூறிநிற்கின்றேன்.

இ.த.ஜெயசீலன்
ஆணையாளர்
யாழ்.மாநகர சபை


Commissioner
021 222 8874 mcjaffnamailc@yahoo.com
Deputy Commissioner
021 221 6154 mcjaffnamailp@yahoo.com
PRO
021 222 2275 mcjaffnamaily@yahoo.com
Chief Accountant
021 222 5619 mcjaffnamaila@yahoo.com
MOH
021 222 2645 mcjaffnamaili@yahoo.com
Works Engineer
021 222 2019 mcjaffnamailt@yahoo.com
Water Works Engineer
021 222 3499 mcjaffnamails@yahoo.com.my
Chief Librarian
021 222 6028 mcjaffnamailm@yahoo.com
OIC, Fire Brigade
021 222 8888 mcjaffnamailg@yahoo.com
PHED
021 320 7625 mcjaffnamailk@yahoo.com
Chief Ayurvedic MO
021 221 7694 mcjaffnamailq@yahoo.com
A.O, Physical Planning
021 221 7692 mcjaffnamail3@yahoo.com
AO, Assessment Branch
021 221 7697 mcjaffnamailb@yahoo.com
OIC, Vehicle Section
021 320 2085 mcjaffnamailr@yahoo.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலாநிதி. க. சர்வேஸ்வரன்

ආචාර්ය. ක. සර්වේස්වරන්

**Dr. K. Sarveswaran Ph.D**

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்

Minister for Education, Cultural Affairs, Sports & Youth Affairs, Northern Province

අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යවරයා, උතුරු පළාත්


My No. | Your No. | Date 24.05.2018

## பவள விழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துக்கள்...!

அமெரிக்க மிசனரிமாரின் வருகையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட பாடசாலைகள் கல்வி வளர்ச்சியை முன்னெடுத்து வந்தபோதும், யாழ்ப்பாணத்தின் சைவசமயப் பாரம்பரியங்களில் இருந்தும் பெண்குழந்தைகள் அன்னியப்பட்டுப் போவதால் ஏற்படும் விளைவுகளை உணர்ந்த பெரியார்கள் சைவசமயப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணக்கூடியவகையில் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியம் சார் கல்வியுடன் கூடியதாக ஆங்கிலக் கல்வியைக் கற்கக் கூடியவகையில் ஒரு இந்துப் பாடசாலையை உருவாக்க முன்வந்தனர்.

அந்த வகையில் 1935 ஆம் ஆண்டில் இருந்து, யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவிகளும் கற்கக்கூடிய வகையில் இந்து மகளிருக்கான ஒரு பாடசாலைக்கான அடித்தளமிடப்பட்டது. பின்னர் 1943 இல் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு முன்னாலுள்ள ஒரு வீட்டில் தனியான ஒரு பெண்கள் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது.

1945 ஆம் ஆண்டு திருமதி.விசாலாட்சி சிவகுருநாதர் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட 40 பரப்புக் காணியில் இக்கல்லூரி புதிதாகக் கட்டப்பட்டு 1945 ஆம் ஆண்டில் இருந்து தற்போதைய இடத்தில் செயற்படத் தொடங்கியது.

"பல்பரிமாணச் செயற்பாடுகள்,ஆளிடைத் தொடர்புகளின் ஊடாக அறிவுநன்னடத்தை, விழுமியம்சார் கல்வியை வழங்குதல்" என்பதைப் பணிக்கூற்றாகக் கொண்டு சிறப்புடன் யாழ்ப்பாணம் மட்டுமல்லாது,ஏனைய பிரதேசங்களில் இருந்தும் வருகை தரும் இந்து மகளிர்களுக்கான ஒரு பாடசாலையாகக் கடந்த 75 ஆண்டுகளாகச் செயற்பட்டுவருகின்ற யாழ் இந்து மகளிர் கல்லூரி,அரசினால் வழங்கப்படுகின்ற நிதி உதவிகளுக்கு மேலாகப் பழைய மாணவிகள் சங்கம், பெற்றார் மற்றும் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டதாக மேலோங்கி வளர்ந்து இந்து மாணவிகளுக்கான ஒரு முதல்தரப் பாடசாலையாக இன்று உயர்ந்திருக்கின்றது.

அன்று தொடக்கம் இன்று வரை பல அர்ப்பணிப்புள்ள அதிபர்களினால் முகாமைத்துவம் செய்யப்பட்டுச் சிறந்த ஆசிரியர்களின் சேவைகளினால்,சிறப்புடன் இயங்கி வரும் இக்கல்லூரி புகழ் பெற்ற பல மாணவிகளை உருவாக்கிக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள், கலைபண்பாடுகள் மற்றும் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முன்மாதிரியான கல்லூரியாகவும் விளங்கிவருகின்றது.

1956 ஆம் ஆண்டில் இருந்து தரம் 1 பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு இன்று சுமார் 2000 மாணவர்களுக்கும் அதிகமான மாணவிகளைக் கொண்ட ஒரு உயர்தரப் பாடசாலையாகப் புகழ் பெற்று விளங்குகின்றது. இக்கல்லூரியின் அதிபர் திருமதி.மி.விமலநாதன் அவர்களின் தலைமைத்துவத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும்பிரதி உதவி அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்துவருகின்ற பெற்றோர் பழைய மாணவிகள,கல்வி சாரா அலுவலர்கள் ஆகியோரின் முயற்சிகளைப் பாராட்டுகின்றேன்.

இன்று யாழ் நகரப் பகுதியில் கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டிருக்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் 75 ஆவது வருட நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவுள்ள அதிபர்,பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள்,பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரியின் கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து பவள விழா நிகழ்வுகளும்,,அது தொடர்பாக வெளியிடப்படும் மலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

பவள

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்,

கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,

வட மாகாணம்


செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் | චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය | Chemmany Road, Nallur, Jaffna

Telephone: 021 205 4094 | Fax : 021 205 4093 | Email: ksarveswarannpc@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்துமத பாரம்பரியங்களை கட்டிக்காக்கும் நோக்குடன் சைவசமய மற்றும் தமிழ்ப்பண்பாட்டுடன் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியம்சார் கல்வியுடன் கூடிய ஆங்கில மொழிக் கல்வியையும் பெண்பிள்ளைகள் பெறத்தக்க வகையில் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி யாழ் நகரில் பெயர்பெற்ற பாடசாலையாக இன்று மிளிர்கின்றது. இக்கல்லூரி பல ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியாளர்கள், சமூக சேவையாளர்கள் போன்றோரை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்குகல்வி கற்றுசிறப்பு பெற்றமாணவர்கள் நன்றியுடன் கடல் கடந்து வாழ்ந்தாலும் பாடசாலை வளர்ச்சியில் பங்களிக்கின்றனர், என்பதனை 2010 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியா மாணவிகளால் பாடசாலைக் கென்று சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டமை , கனடா பழையமாணவிகளால் 20 கணனிகளைக் கொண்ட கணனி அறை அமைத்துக்கொடுக்கப்பட்டமை , பழைய மாணவிகளின் உதவியுடன் கட்டப்பட்ட மூன்று மாடிகள் கொண்ட பவளவிழா மண்டபம் போன்றவை எடுத்துக்காட்டுகின்றன. இன்று 2364 மாணவிகளைக் கொண்டு மேலும் பல சிறப்புக்களுடன் இக் கல்லூரி மிளிர்ந்து வருகின்றமை சிறப்பான விடயமாகின்றது.

இப்பாடசாலையினால் பவள விழாவினை முன்னிட்டு மலரை வெளியிடுவதிலும் பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக்காட்டுவதிலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர். ஆசிரியர்கள் . மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இப்பாடசாலை கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் மென்மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைக்கவும் , விழா நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் எனதுமனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்,

சி.சத்தியசீலன்
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/இந்து மகளிர் கல்லூரியினது பவளவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் "சக்தி" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன். யாழ்ப்பாணத்து சைவ சமயப் பெண்பிள்ளைகள் சைவப் பாரம்பரியத்துடன் கூடியகல்வியைப் பெற வேண்டும் எனும் நன்நோக்கில் 1943 ஆம் ஆண்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1945 இல் தற்போதைய இடத்தில் இயங்க ஆரம்பித்த இப்பாடசாலை 1962 ஆம் ஆண்டில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.

படிப்படியாக வளர்ச்சி பெற்ற இப்பாடசாலை இன்று யாழ் வலயத்தில் பெண்களுக்கான தனித்துவம்மிக்க பாடசாலையாகத் திகழ்கிறது. க.பொ.த(உ.த) இல் நான்கு பிரிவுகளையும் கொண்டதாக 2300 இற்கு மேற்பட்ட மாணவிகள் கல்வி கற்கின்ற பாடசாலையாக இப்பாடசாலை திகழ்கின்றது. இப்பாடசாலை மாணவிகள் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி வருகின்றனர்.

75 ஆண்டுகள் நிறைவினைக் காணும் இப்பாடசாலை யாழ் பிரதேச பெண்களின் கல்விக்கு அளப்பரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவிகள் உயர்தொழில் புரிபவர்களாகவும், சமூகத்தில் உயர் அந்தஸ்து மிக்கவராகவும் ,இலங்கையிலும் , பிறதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். பவள விழா காணும் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று மகளிருக்கு சிறந்த கல்வியை வழங்க வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்.**
**வடக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு சிறப்பு மலராக மலரவிருக்கும் "சக்தி" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அக மகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அதிகளவான மாணவிகளை திறம்பட உருவாக்கி இச்சமூகத்திற்கு கையளிக்கும் பொறுப்பு வாய்ந்த பணியை மேற்கொள்ளும் இக்கல்லூரியின் அளப்பெரிய சேவை போற்றுதற்குரியது.

எழுபத்தைந்து ஆண்டுகளாக பாடவிதானச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவிகளை ஈடுபடுத்தி தேசிய ரீதியில் பல சாதனைகளை ஈட்டி வருகின்றமை பாராட்டுதற்குரியது.

மேலும் இக்கல்லூரி சைவப்பாரம்பரியத்துடன் கலை, கலாசார, விழுமியங்களைப் பேணி தொடர்ந்து வரும் காலங்களிலும் தன் பணியில் பார்புகழ உயர்ந்து மிளிர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.சு.சுந்தரசிவம்
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் "சக்தி" மலரினை வரவேற்பதில் உவகையுறுகின்றேன்.

உலகஇயக்கத்திற்கு சக்தியே பிரதான காரணம் என்கிறது விஞ்ஞானம். மெய்ஞ்ஞானத்திலும் சிவனின் இயக்கத்திற்கு சக்தியே மூல காரணம். அந்தவகையில் எம் குடும்பங்களின் கண்களாக விளங்கும் பெண்களே எம் சமூகத்தின் சக்தியாகும். நல்ல ஆளுமை, அறிவு மனப்பாங்கு மிக்க பெண்களை உருவாக்கும் இந்து மகளிர் கல்லூரி எம் கல்விப் புலத்திற்கே கிடைத்த வரப்பிரசாதமாகும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிகமான மாணவர்களைக் கொண்டியங்கும் பாடசாலையாகத் திகழ்கின்றது. கடந்த காலங்களில் இதன் கல்வி மற்றும் இணைபாட விதான அடைவுகள் உயர் நிலை பெற்றுள்ளன.

கடந்த வருட க.பொ.த (உயர் தர )மற்றும் சாதாரண தரப் பெறு பேறுகள் முன்னைய வருடங்களை விட முன்னேற்றம் கண்டுள்ளன. இணைபாடத்துறையில் குறிப்பாக தமிழ் மொழித்திறன் போட்டிகளில் இக்கல்விச்சாலை நாட்டியத்துறைசார் போட்டிகளில் தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் சாதித்து வருகின்றது. இவ்வருடமும் நடனத்தில் மூன்று வெற்றிகள் தேசியத்தில் கிட்டியுள்ளன. விளையாட்டுத் துறையிலும் வெற்றிகள் பெற்றிருப்பதுடன் எமது பாரம்பரிய பண்பாட்டு விடயங்களுக்கும் முன்னுரிமையளித்து பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருவதும் மகிழ்ச்சிக்குரியது.

இக்கல்லூரியின் வெற்றிகளின் பின்புலமாகத் திகழும் அதிபர் திருமதி மி.விமலநாதன், பிரதி உதவி அதிபர்கள்.ஆசிரியர்கள்.மாணவிகளைப் பாராட்டுகின்றேன். முழு நிறைவான தமிழ் பெண்ணியத்தை உருவாக்கும் இக்கல்லூரிக்கு என் வாழ்த்துக்கள். இங்கு கற்கும் மாணவிகளின் எதிர்காலம் சிறக்க என் நல்லாசிகள்.

எப். எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Felicitation Message From Dr.Goolbai Gunasekara

It gives me much pleasure to contribute this message to the 75th year souvenir of this prestigious college which I was honoured to attend for the short time that my mother, Mrs. Clara Motwani was principal of JHLC

From the outset I loved Jaffna. The girls in my class (Grade7) were all so friendly that l never felt I was a stranger. My mother had warned me that the Tamil girls would be very hard - working and l found that this was true. While l was considered a competent student at my old school in lndia, l realized that l now had to study wonderful teachers and l wanted to please them. Studies were still in the English medium and l managed to keep abreast with the work except in mathematics which was always my weak spot. I remember with love my teachers, Miss Vijayalakshmi Pathy, Miss Leela Aiyadurai and Miss Shantha who was from lndia.

Very soon l wanted to the long skirt and top like my friends in class so my mother had three outfits made for me. I also learned the Hindu prayers which pleased my indian father very much although they were in Tamil and l did not really understand what l was singing. Nonetheless he felt the discipline of memorization was a good thing. I remember a Netball match we played against Vembadi. Miss Barker was the principal of Vembadi and she and my mother were good friends. During the match l had a bad fall (l was the shoot) and hit my head hard against the post. Miss Barker Jumped to her feet to see if I was hurt but my mother said, "Let the Netball coach handle it," because she wanted to make sure l was treated like any other player and shown no favoruritism.

Through the years l have watched the progress of JHLC with pleasure and admiration. I visited the school once with my husband during a holiday month over 35 years ago. The principal gave me permission to wander over the buildings. I was so impressed at the growth of the JHLC and l am very proud to call myself an Old Girl of one of Jaffna' s best schools.

May JHLC continue to go forward , to grow and to prosper in the years to come.

**Mrs. Goolbai Gunasekara**
**( Old girl and Daughter of our former Principal Mrs. Clara Motwani)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சைவப்பண்பாட்டுடன் கூடியதான இந்துப் பெண்களின் கல்வி தொடர்பாக சைவபரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், இந்துக்கல்லூரிகளின் சபை போன்ற பல நிறுவனங்களின் முயற்சியினால் காலத்துக்குக்காலம் பல இந்துப் பெண்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் ஓரங்கமாக இந்துப் பெண்களின் பாடசாலையொன்று யாழ் இந்துக் கல்லூரியுடன் இணைந்து இயங்கி வந்த நிலையில் ஸ்தாபகர் திருமதி விசாலாட்சி சிவகுருநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியினை நிறுவுவதற்காக செய்த அளப்பரிய பங்களிப்பின் காரணமாக 1943ஆம் ஆண்டு இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.இக்கல்லூரி செயற்படத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதிலிருந்து இம்மியளவிலும் வழுவாமல் கல்லூரி அன்னையின் பெருமையினை கல்லூரியினை அலங்கரித்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் சிரமேற்கொண்டதன் பயனாக இன்று உள்நாட்டிலும், சர்வதேசங்களிலும் புகழ்பூத்த பழைய மாணவிகளாக இருந்து தொழில் ரீதியாகவும்அந்தஸ்திலும் உயர்ந்து வாழ்ந்து வருவதை நான் பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

மதிப்பார்ந்த செல்வி ப.இராமநாதன் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து 1986-1993 ம் ஆண்டு வரையில் அதிபராகப் பொறுப்பேற்று தொடர்ந்தும் கல்லூரியின் கல்வி, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்கு என்னை அர்ப்பணித்து செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு நான் பெருமை கொள்கின்றேன். எனது அதிபர் பதவிக் காலத்தில் 1993ம் ஆண்டு செப்ரம்பர் மாதம்கல்லூரிச் சமூகத்தினரின் ஒத்துழைப்புடன் பொன் விழாவினைக் கொண்டாடியதுடன் அது தொடர்பாக மலர் ஒன்றும் வெளியிடப்பட்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தோம். அதனைத் தொடர்ந்து திருமதி சரஸ்வதி ஜெயராசா அதிபராகவிருந்த காலத்தில் மணிவிழா கோலாகலமாக கொண்டாடி மலரொன்றும் வெளியிடப்பட்டது. இன்றைய அதிபர் திருமதி M. விமலநாதன் அவர்களின் காலத்தில் பவளவிழா ( 1943-2018) வினைக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியடைவதுடன் அவ்விழாவினையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் சந்தர்ப்பத்தினை எனக்களித்த கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையாருக்கு நன்றி கூறுகின்றேன்.

கல்லூரி நிறுவப்பட்ட காலத்திலிருந்து கற்று வெளியேறிய மாணவிகள் சிறந்த கல்விப் பெறுபேறுகளுடன் அவர்கள் தம் ஆளுமை, தலைமைத்துவப்பண்பு, குடும்பம், சமூகத்தில் ஆற்றி வரும் பங்களிப்பு, தொழில் வாய்ப்பு போன்றவற்றுடன் உள்நாட்டிலும், சர்வதேசமெங்கும் உயர்வான நிலையிலிருந்து வருவதையிட்டு மகிழ்வெய்வதுடன் நிகழ்கால, எதிர்கால மாணவச் செல்வங்கள் கல்லூரியின் பெருமையை உலகறியச் செய்வார்கள் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

கல்லூரியின் பொன்விழா, மணிவிழா, என்பன உரிய காலங்களில் கொண்டாடுவதைப் போல எதிர்காலங்களில் நூற்றாண்டு விழா போன்ற சிறப்பு ஆண்டு விழாக்களை எதிர்கால கல்லூரிச் சமூகத்தினர் கொண்டாடி கல்லூரி அன்னையை மகிழ்விக்க வேண்டும் என வாழ்த்துவதுடன் பவளவிழா சிறப்புறவும், அது தொடர்பான மலர் மணக்கவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. திவ்விய சிரோன்மணி நாகராசா
ஓய்வு நிலை அதிபர் (1986-1993)
யாழ் இந்து மகளிர் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணைந்த கரங்களின் உதவியோடு நூற்றாண்டு கண்டு ஒளிர்க...

1943 ஆம் ஆண்டு புரட்டாதிமாதம் 10 ஆம் திகதி நிறுவப்பட்ட யாழ்/யாழ் இந்து மகளிர் கல்லூரி இன்று 75 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பவளவிழா கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். 1993 ஆம் ஆண்டு பொன்விழாக்கொண்டாடி புதுமணப்பெண்போல் பொலிவுடன் விளங்கிய கல்லூரியில் அடுத்தவாரமே அதிபர் பதவியை ஏற்று கல்லூரியில் காலடி வைக்கும் வாய்ப்பு எனக்குக்கிட்டியது. கல்லூரியின் முதல் அதிபராக எனக்குப் பௌதிகவியலை கற்பித்த ஆசிரியை திருமதி காயத்திரி கணேசன் அவர்கள் பணியாற்றியுள்ளதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். அன்றிலிருந்து 2006 ஆம் ஆண்டு தை மாதம் வரை கல்லூரியை பாட, இணைப் பாடவிதான ரீதியாக வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட்டார்கள் என்று கூறுவதில் பெருமையடைகிறேன். இன்று பவள விழாக் கொண்டாடும் கல்லூரியை வாழ்த்தி ஆசி கூறும் பேறு கிடைத்ததையிட்டும் மகிழ்வடைகின்றேன்.

அன்றைய காலகட்டத்தில் நிலவிய அரசியல் அசாதாரண சூழ்நிலையில் கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய பெரும்பொறுப்பு இருந்தது. அத்தகைய சவால்களையும் எதிர் கொண்டு 1995 இல் இடம்பெயர்ந்து சென்றபோதும் முக்கிய ஆவணங்கள் எல்லாம் பாதுகாக்கப்பட்டு கல்லூரியைத்தொடர்ந்தும் வளர்த்துச் செல்வதற்குக் கல்லூரிச் சமூகம் ஒத்துழைப்பு வழங்கி ஆதரித்தது.

யுத்த அனர்த்தத்தின் பின் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு எந்த நிதியுதவியும் இல்லாத சந்தர்ப்பத்தில் குண்டடிபட்டு, சிதைந்த கட்டடங்கள் எல்லாவற்றையும் புனரமைத்து கணனிக்கூடம், Audio, video அறை , பொது விஞ்ஞானக்கூடம், நூல் நிலையம், ஆங்கிலமொழிக் கற்கை அறை போன்ற செயற்திறன் மிக்க வளங்களை உருவாக்கி, அவற்றின் பயன்பாட்டால் மாணவர்களிடம் ஏற்பட்ட ஆக்கபூர்வமான வளர்ச்சியைக்கண்டு மகிழ்ந்தோம். கல்லூரி வளாகத்திலேயே ஆசிரிய வள நிலையம் அமைப்பதற்கு அங்கீகரித்ததன் மூலம் எல்லாப் பாடசாலைகளும் பயனடைய வழிவகுத்த பெருமை இந்துமகளிர் கல்லூரியையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமன்றி அமைதியான சூழ்நிலையும் முக்கியமானதாகும். அத்துடன் மாகாண கல்வியமைச்சு, கல்வித்திணைக்களம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் , பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பங்களிப்பும் மிக அவசியமானதாகும். அவ்வகையில் கொழும்பு, கனடா, அவுஸ்ரேலியா, இலண்டன் ஆகிய பழைய மாணவர் சங்கங்கள் நேசக்கரம் நீட்டி கல்லூரிக்கு அளித்த பேருதவியும் ஆதரவும் கல்லூரியைத்தளர்வின்றி வளரத்தெடுக்க உதவியது என்றால் மிகையாகாது நெருக்கடியான கால கட்டத்தில் கொழும்பு பழைய மாணவர்சங்கத்தின் குறிப்பாக திருமதி. அபிராமி கைலாசப்பிள்ளை, திருமதி. சிவகாமி அம்பலவாணர், செல்வி சற்சொருபவதிநாதன், திருமதி.தயாநிதி செல்வநாயகம் ஆகிய நான்கு பெரிய தூண்கள் கல்லூரின் வளர்ச்சியில் பக்கபலமாக நின்றுதவினர். தளர்ந்திருந்த மாணவர்கள், ஆசிரியர்களை உற்சாகமூட்டிப் பாதுகாத்து மேலும் தளர்ந்து போகாமல் வளர வழிவகுத்தனர். இத்தகைய பழைய மாணவர்கள் தங்களுக்கு இல்லையென்று பல கல்லூரிகள் சொல்லக் கேட்டு பெருமையடைந்தோம்.

கனடா, அவுஸ்ரேலியா பழைய மாணவர் சங்கங்களும் தமது பங்களிப்பினை குறைவின்றி நிறைவாக வழங்கின. இவர்கள் தாமாகவே முன்வந்து பல வழிகளிலும் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். இன்றும் அனைவரும் கல்லூரியின் வளர்ச்சிக்காக கருமமாமாற்றிக் கொண்டிருப்பது சிறப்பானதாகும் இலண்டன் பழையமாணவர்களும் தங்கள் உதவியை அளிக்கத்தவறவில்லை. இவ்வாண்டு அவுஸ்ரேலியாவின் சிட்னியில் நான் இருப்பதனை அறிந்து பழைய மாணவர் சங்கத்தினராகிய திருமதி. கீதா, திருமதி. கௌரி ஆகியோர் என்னை சந்தித்து ஒன்றுகூடல் ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அன்றைய ஒன்றுகூடலில் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும், முன்னை நாள் ஆசிரியை திருமதி. பாலசுந்தரம் அவர்களின் மகளும் சமுகமளித்திருந்தனர். அனைவரோடும் கலந்துரையாடிய போது அவர்கள் கல்லூரியில் வைத்துள்ள பற்றும், கல்லூரியை வளர்த் தெடுப்பதில் காட்டுகின்ற ஆர்வமும் என்னைப் பிரமிக்க வைத்தது. இத்தகைய உள்ளங்கள் உள்ளவரை கல்லூரி என்றும் வளர்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கனடா பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த செல்வி.நல்லம்மா அன்று தொட்டு இன்றுவரை கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகள் அனைவரும் அறிந்ததாகும். இத்தகைய சிறந்த மாணவிகளின் முன்மாதிரியைப் பின்பற்றி தொடர்ந்தும் வருங்கால மாணவிகளும் கல்லூரியை வளர்த்தெடுக்க வேண்டும். இவர்கள் அனைவர்க்கும் கடவுள் நல்ல, உடல் உள ஆரோக்கியத்தை வழங்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன். இத்தகைய பக்க பலத்துடன் இன்று மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பட்டிருப்பதுடன் பௌதிக வளங்களும் காலத்தின் தேவைக்கேற்ப கிடைக்கப்பெற்றிருப்பதனை அறிந்து அகமகிழ்வெய்துகின்றேன்.

நான் அதிபராக இருந்த பதின்மூன்று வருடகாலப்பகுதியில் நல்ல ஆசிரியர் குழாம், அவர்களின் பாசமான உறவு, மாணவ தலைவர்கள், சிற்றூழியர்கள் , பழைய மாணவர்சங்கம், கல்வித்திணைக்களம் ஆகியவற்றிற்கிடையிலான உறவு குடும்ப உறவு போன்று சிறப்புடன் இருந்தது. இத்தகைய உறவு முறை தொடர்ந்தும் பேணப்பட்டு கல்லூரி முன்னேற்றமடைந்து செல்ல வேண்டுமென வாழ்த்துகின்றேன். பவளவிழா காணும் கல்லூரி பொலிவுடன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட வேண்டுமென வருங்கால சந்ததியினருக்கும், கல்லூரித்தாய்க்கும் எனது மனமார்ந்த ஆசியைக் கூறுவதுடன், இன்றைய அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எனது அன்பையும், ஆசியையும், வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். பவளவிழா இனிதே நிறைவேற எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகப் பெருமான் அருள் புரிவாராக.

திருமதி. சரஸ்வதி ஜெயராசா
ஓய்வு நிலை அதிபர் (1993-2006)
யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னைநாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் 75 ஆண்டு நிறைவையொட்டி வெளியீடு செய்யப்படும் பவளவிழா சிறப்பு மலருக்கு முன்னைநாள் அதிபர் என்றவகையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1943 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி இந்து மகளிர் கல்லூரி அதிகாரசபையினரால் பெண் சிறார்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் இந்துக்கல்லூரி அதிகாரசபையினர், கல்லூரி அமைவிடத்திற்கான நிலத்தை உவந்தளித்த திருமதி.விசாலாட்சி சிவகுருநாதர் அவர்கள், அன்றைய காலகட்டங்களில் பணியாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான பணிகள் என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவையாகும்

மேலும் மூன்று தசாப்தகால போர்க்காலச் சூழலில் பல இடர்களையும் இடப் பெயர்வுகளையும் சவால்களையும் கல்லூரி அன்னை எதிர் கொண்டு இன்று புதுப்பொலிவுடன் வளர்ச்சியடைவதற்கு அக்காலச்சூழல்களில் பணியாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவை போற்றுதற்குரியதாகும்.

நான் 1989 ஆம் ஆண்டு சித்திரைமாதம் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராக இடமாற்றம் பெற்று இக்கல்லூரியில் இணைந்து கொண்டேன். ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக வெவ்வேறு பதவி நிலைகளில் 23 வருடங்கள் அன்னைக்கு சேவையாற்றும் வாய்ப்பு கிடைத்தமையை பெரும்பேறாகவே கருதுகின்றேன்.

2006ம் அண்டு தை மாதம் 16 ம் திகதியன்று முன்னைய அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல கல்லூரியைப் பொறுப்பேற்றேன்.

இக்கால கட்டங்களில் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பல மாணவிகளுக்கு எமது கல்லூரியில் அனுமதி வழங்கப்பட்டது. மாணவிகளுக்கான பாட விரிவாக்கங்கள் ( basket subjects ) ஏற்படுத்தப்பட்டன. இதனால் ஏற்பட்ட வகுப்பறைப் பற்றாக்குறை தளபாடப் பற்றாக்குறை என்பவற்றிற்கு நாம் முகம் கொடுக்க நேரிட்டது. அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியும் இடை நிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் பழைய மாணவிகள் சங்கங்களும் கல்வித்திணைக்களமும் வழங்கிய ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வித்திணைக்கள நிதியுதவியுடன் புதிய நீர்த்தாங்கி, விசாலாட்சி மண்டபபுனரமைப்பு, கட்டிடதிருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதோடு மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் நிதி உதவியுடன் கூடைப்பந்தாட்டத் திடலும் அமைக்கப்பட்டது

அவுஸ்ரேலியா பழைய மாணவிகள் சங்கத்தினரால் கல்லூரிக்கான சிற்றுண்டிச்சாலையும், கனடா பழைய மாணவிகள் சங்கத்தினரால் கணனி அலகு ஒன்றும் அமைக்கப்பட்டன. கொழும்பு பழையமாணவிகள் சங்கத்தினரால் விசாலாட்சி மண்டப மேடை புனரமைப்பும், இலண்டன் பழைய மாணவிகள் சங்கத்தினரால் கல்லூரி விநாயகருக்கான எழுந்தருளி மண்டபமும் கோயில் புனரமைப்பும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

மேலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் கலைவிழா ஒன்று நடாத்தப்பட்டு கணனி அலகு அமைப்பதற்கான இடம் புனரமைக்கப்பட்டதோடு சிற்றுண்டிச்சாலையின் மேற்தளத்தில் வகுப்பறைகள் அமைக்கப்பட்டன.

பௌதீகவள அபிவிருத்தி உயர்ந்ததோடு மட்டு மல்லாமல், மாணவிகளின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளும், இணைப்பாடவிதான அடைவுகளும் உயர் வடைந்தன. மாணவிகள் தொகையும் பாட விரிவாக்கமும் உயர்வடைந்தமையால் வகுப்பறை பற்றாக்குறை பெருங்குறைபாடாக இருந்த நிலையில் கல்வித் திணைக்களத்திடமும் பழைய மாணவிகளிடமும் நீண்ட காலமாக எமது கல்லூரியின் தேவையை கோரி நின்றோம் .

இன்று அனைத்து பழைய மாணவிகள் சங்கங்களின் அயராத முயற்சிகளினாலும் ஒன்றிணைந்த செயற்பாட்டினாலும் பவளவிழா மண்டபமாக பரிணமித்து கல்லூரியின் வகுப்பறைத்தேவையை ஓரளவு பூர்த்தி செய்துள்ளமை பெருமகிழ்வளிக்கிறது.

சமகாலத்தில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஆய்வு கூடம் வகுப்பறைக் கட்டிடத் தொகுதி கல்லூரிஅன்னைக்கு மேலும் வளம் சேர்த்துள்ளன. மேலும் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் இணைப்பாட விதான அடைவுகள் உயர்ந்து தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்துவதற்கான சகல தகைமைகளையும் கல்லூரி கொண்டிருப்பதனால் மிக விரைவில் தேசிய பாடசாலையாக தரம் உயர விநாயகர் அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றேன்.

வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு வாய்ப்பளித்த அதிபர், மலர்க் குழுவினருக்கு நன்றி கூறுவதோடு, பவளவிழாக்காணும் கல்லூரி அன்னை மேலும் பல வளங்கள் பெற்று அதிபர்,ஆசிரியர்கள் பணி மேலும் சிறப்படையவும் தன்னகத்தே கொண்டுள்ள மாணவிகளை கல்வி விழுமியங்களில் சிறந்த பிரஜைகளாக்கி சமூகத்திற்கு ஒப்படைக்கும் நற்பணிக்கான சகல வல்லமையும் கிடைக்க இராஜவரோதய விநாயகர் அருளாசி வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி.வேதநாயகி பேரின்பநாதன்**
**முன்னாள் அதிபர் (2006-2012)**
**யாழ் இந்து மகளிர் கல்லூரி**
**ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

சைவத் தமிழ்ப் பெண்கள் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக்காக்கவென ஒரு சைவத் தமிழ்ப் பெண்ணால் பெரியமனதோடு வழங்கப்பட்ட காணியில் சிறிதாகப் பிறந்து, தவழ்ந்து நடந்து இன்று பார்ப்போர் பரவசமடையும் நிலையில் யாழ் இந்து மகளிர் கல்லூரி காணப்படுகிறது. இதனைப் பறைசாற்றும் வகையில் உயர்ந்து வளர்ந்து பவளவிழாக் காணும் நிலையில் சக்தி சஞ்சிகை பவள விழா மலராக வெளிவருவதையிட்டுக் கல்லூரியின் பழையமாணவி என்ற நிலையில் மகிழ்ச்சிகலந்த நிறைவான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

எமது அன்னையவள் பொன் விழாக் கண்டபோது அப்பொன் விழாச்சபையில் கலந்திருந்து செயற்பட்டதை நினைவிலிருத்தித் தொடர்கின்றேன்.

சைவத் தமிழ்ப்பண்பாட்டைப் பேணிப்பாதுகாக்கும் வாழ்வியலைக்கொண்ட மகளிரை உருவாக்கும் ஒருகல்லூரி இந்து மகளிர் கல்லூரி எனலாம். தானங்களில் சிறந்ததானம் கல்வித்தானம். அதிலும் பெண்களுக்குக் கல்வியளித்தல் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் கல்வி வழங்குவதற்குச் சமமாகும். இன்று பவள விழாக்காணும் கல்விக் கூடம் மேலும் வளர்ந்து முத்துவிழா, நூற்றாண்டுவிழா போன்ற பல விழாக்களைக் கண்டு பெண்குலக் கல்வி மூலம் மானிடத்தை வளப்படுத்தும் கல்லூரியாக ஓங்கி வளரட்டும்.

எமது பாடசாலையின் ஆரம்பம், அதன் தூரநோக்கு, அதற்காக அர்ப்பணிப்போடு உழைத்த அத்தனை பேரும் போற்றப்படவேண்டியவர்கள். அதுமட்டுமல்ல அவர்களின் விருப்புக்கேற்ற வகையில் அவர்களது எண்ணங்களைச் செவ்வனே செயற்படுத்துவோராக நாம் உழைக்கவேண்டும்.

மற்றுமோர் செய்தியையும் இதில் பதிவாக்கவிரும்புகிறேன். பிறஇடங்களில் இருந்து வந்து மாணவிகள் தங்கிக்கற்க எமது பாடசாலையின் விடுதிபுனரமைப்புச் செய்யப்பட்டு முன்பு போல் மாணவிகள் தங்கிக்கற்க ஆவன செய்ய அனைவரினதும் கடின உழைப்பும் கடமை உணர்வும் அவசியமாகும். பவள விழாக் கொண்டாடும் இன்றே இதை உறுதி எடுத்துச் செயற்பட முன் வருவோமாக.

இங்கு பணிபுரியும் அனைவரும் சித்தசுத்தியும் சொல்லும் செயலும் ஒத்ததான உயர்ந்த உள்ளம் கொண்டவர்களாகவும் பணியாற்றிச் சைவ உலகத்துக்கு ஒளி விளக்காய்ப் பிரகாசிக்க வேண்டும் என்றுஅன்போடு வேண்டுகின்றேன்.

மீண்டும் ஒருமுறை சக்தி சஞ்சிகை பவள விழா மலராக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி கலந்த நிறைவான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.


உபதலைவி
பழைய மாணவிகள் சங்கம்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

செல்வி அ.கந்தையா
ஓய்வு நிலை அதிபர்
பெரியபுலம் மகா வித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றும் மாறா இளமை

பவளவிழா காணும் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சக்தி சஞ்சிகைக்கு ஒரு சிறுகுறிப்பு எழுதுவதற்கு வாய்ப்புக் கிட்டியமை எனக்கு பெருமிதம் அளிக்கிறது. என்றும் மாறா இளமையுடனும் புதுப்பொலிவுடனும் திகழும் எங்கள் கல்லூரி யாழ் நகரில் வாழும் சிறுமிகளை, குறிப்பாக இந்துச் சிறுமிகளை சமய கலாசார விழுமியங்களுடன் கல்வி அறிவு ஊட்டி வளர்த்து ஆளாக்கி ஆற்றல் மிக்க நங்கையராக வெளியேற்றி வருகின்றது.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

எங்கள் கல்லூரியில் கற்ற மங்கையர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் எனப் பல துறைகளில் சிறந்து நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியில் உள்ள நாடுகளிலும் தம் சேவையை ஆற்றி வருகிறார்கள். அத்துடன் தாம் இளமையில் கற்ற கல்லூரியை மறவாது தாம் வதியும் நாடுகளிலும் பழைய மாணவிகள் சங்கங்களை உருவாக்கி கல்லூரிக்கு உதவி வருகின்றார்கள்.

எங்கள் கல்லூரி 1993 ஆம் ஆண்டு பொன்விழாவைச் சிறப்பாக கொண்டாடியது. அச்சமயம் துடிப்பு மிக்க கொழும்பு வாழ் பழைய மாணவிகள் தம் ஆசிரியர்கள் சிலருடன் சேர்ந்து "யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு" உருவாக்கப்பட்டது. இவ்வருடம் எங்கள் சங்கம் வெள்ளிவிழாக் காண்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு, உருவாகிய காலத்தில் இருந்து தொடர்ந்து கல்லூரிக்கு பலவழிகளில் உதவி வந்தது, வருகிறது, வரும்.

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல்லெனும் சொல்"

எம் கல்லூரியில் கற்ற மாணவிகளுக்கும் அறிவு புகட்டிய ஆசிரியைகளுக்கும் தான் இயற்கை ரீதியான இளமை, முதுமை, மரணம் என்பன. ஆனால் எங்கள் கல்லூரி அன்னை என்றும் பதினாறு வயதுடைய மார்கண்டேயர் போல் என்றும் மாறா இளமங்கையாக மற்றும் அன்னையாக திகழ்ந்து தனது அரவணைப்பை யாழ் சிறுமிகளுக்கு நல்கி வருகின்றாள்.

அபிராமி கயிலாசபிள்ளை
தலைவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Aum

# Jaffna Hindu Ladies' College Old Girls Association UK

இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர்சங்கம் ஐக்கிய இராச்சியம்;
( Estd 1993 )

Suit 220, 95 Mortimer Street, London W1W 7GB, UK

**Patrons:**
Mrs P Arumugam
Mrs Y Balasuntharam
Mrs S Manoharan
Mrs P Paramanathan
Mrs P Satchithanandan
Mrs S Shanthalingam
Mrs T Yoganathan

**President:**
Mrs Vinothini Barathan

**Vice President:**
Mrs Arulambikai Pathmasrirengan

**Secretary:**
Miss Thayalini Gunaratnam

**Asst. Secretary:**
Mrs Vasanthy Yogaraja

**Treasurer:**
Mrs Annapoorani Sathiyamoorthy

**Committee Members:**
Mrs M Asokakumar
Miss S Balasubramaniyam
Mrs U Ganandran
Mrs R Ganeshalingam
Mrs S Kurumoorthy
Mrs V Mahadevan
Mrs M Mahendran
Mrs K Mylvaganam
Dr (Mrs) S Parameshwaran
Mrs C Sivarajah
Mrs R Sivayoganathan
Mrs M Rudhrakumar
Mrs S Sriskandakumar

**யாழ் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் தமிழ் ஆசிரியையும், யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (ஐ.இ)காப்பாளரும் ஆகிய திருமதி புனிதவதி ஆறுமுகம்**

**மனம் உவந்து அளிக்கும் பவளவிழா வாழ்த்துச் செய்தி**

செந்தமிழும், சிவநெறியும் செழித்து ஓங்கும்
ஈழமதில் எழிலுடன் இலங்கும் எங்கள்
யாழ் இந்து மகளிர் கல்லூரி தன் பவள விழாவினை
பாரில் உள்ளோர் பல்லோரும் பாராட்ட
விழா எடுக்கும் இந்நன்னாளில்
என் இதயமதில் எழுகின்ற பேருவகையுடன்
விழா சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.
சைவமும் தமிழும் தளைத்து ஓங்க உருவாகியது
யாழ் இந்துக் கல்லூரியும், அத்துடன் சேர்ந்த பாடசாலைகளும்
உருவாக்கிய உத்தமர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

ஆண்டு 1935ல் இந்துக் கல்லூரியின் அதிபராக விளங்கிய திருவாளர் A. குமாரசாமி பெரியார் பெண்பிள்ளைகளையும் அங்கு கல்வி கற்க மனம் உவர்ந்து இடம் அளித்தார். பெண்மக்கள் நலம் விரும்பிய பெரியார்கள் பெரு முயற்சியில் பெண்பிள்ளைகளுக்கு தனிபாடசாலை நிறுவும் வேலைதொடங்கப்பட்டது.

அவர்களது கனவினை நனவாக்கியவர் தான் இந்து மகளிர் கல்லூரியின் தாயாக விளங்கிய திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் பெருமாட்டியார். அரசடி வீதியில் உள்ள தனது காணியில் 24 LMS(V.C) நடுத்தோட்டம் என்ற நன்நிலத்தை யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு மனம் உவர்ந்து அளித்தார்.

திருவாளர் சிவகுருநாதரின் மருகி வள்ளியம்மை சிவகுருவும் 16 LMS(V.C) நிலத்தை நடுத்தோட்ட இராஜவரோதயப்பிள்ளையார் கோவிலுக்கு நன்கொடையாக்கி மனமகிழ்வுற்றார். இன்றைய யாழ் இந்துமகளிர் கல்லூரி 1945ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 7ம் நாள் தனது நிரந்தரக் கட்டடத்தில் நிறுவப்பட்டது இது ஒரு பொன் நாளாகும். அன்றைய தினமே திருவாளர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களால் விஞ்ஞான கூடத்திற்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள், நலன் விரும்பிகள் மனம் மகிழ அடிக்கல் நாட்டலும் இடம் பெற்றது. இதுவும் பொன் எழுத்துகளாற் பொறிக்கப்பட்ட நற்செய்தி. அன்று தென்னங் கிடுகுகளால் கூரையும் மண்தரையும் ஆக உருவாகிய கல்லூரி இன்று இலங்கையின் புகழ் மிக்க கல்லூரிகளில் தலைநிமிர்ந்து நிற்கும் கல்விக்கூடமாகத் திகழ்கின்றது. இது மட்டற்ற மகிழ்ச்சியல்லவா?

இந்துமகளிர் கல்லூரியில் 1951- 1986 வரை தமிழ் ஆசிரியையாகக் கடமையாற்றினேன். எனது சகோதரிகளும் இரு புதல்வியரும் கல்வி கற்றதும் இக்கல்லூரியில் தான். கல்லூரி உருவாக்கிய பலரும் இன்று வைத்தியகலாநிதிகளாக பல்துறை சார்ந்த விற்பனராக இயல், இசை, நடனக் கலைஞர்களாக, சட்டத்துறை நிபுணர்களாக, விளையாட்டுத் துறை வல்லுனர்களாக, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் எங்கும் பரந்து வாழ்ந்து இக்கல்லூரிக்கு பெருமை சேர்க்கின்றனர். தாம் இருக்கும் இடமெங்கும் கல்லூரிக்காக நிதி திரட்ட வேண்டிய யாவும் செய்து மகிழ்தற்கினிய இன்றைய பவளவிழா மண்டபமும் புலம்பெயர் மாணவிகளால் கட்டியெழுப்பப்பட்ட தென்பதனை பெருமையுடன் கூறி மகிழ்கின்றேன்.

நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் ஆலயமும் பெருவிழா எடுக்கும் திருக்கோயிலாகத் திகழ்வதும் இவர்களாலே என்பதனையும் மகிழ்வுடன் கூறுகின்றேன். மூன்று தலைமுறையினரான எனது மாணவிகளின் பெருவாழ்வினை நினைத்து உளம் பூரிக்கின்றது. அனைவரும் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பபாடசாலை 1978ஆம் ஆண்டு 1-5 வகுப்புக்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையும் கல்லூரி காணியில் தான் கட்டப்பட்டது. பாலர் முதல் பல்கலைக்கழகம் வரை கல்விக்கூடமாக திகழும் இன்றைய இந்து மகளிர் கல்லூரி என்றென்றும் மேன்மை பெற்றுத்திகழ என் மனம் உவர்ந்த வாழ்த்துக்கள். பவளவிழா பல்லோரும் பாராட்டும் விழாவாகத் திகழ இராஜவரோதயப் பெருமான் திருவருள் வேண்டி விடை பெறுகின்றேன்.

**காப்பாளர்.**
**திருமதி. புனிதவதி ஆறுமுகம்.**

P. Arumugam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கனடா போஷகரின் இனிய நல்வாழ்த்துக்கள்

"இந்து நங்கையர் வாழ்வின் இலட்சியம் அனைத்தும் நல்கிடும் எங்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரி பவளவிழா இவ்வாண்டில் காண்பதையிட்டு உள்ளம் பூரிப்படைகின்றேன்.

மாணவியாக ஆசிரியையாக பழைய மாணவிகள் சங்கம். கனடாவின் போஷகராக கல்லூரியுடன் நீண்ட காலத்தொடர்பு கொண்டுள்ளேன். கல்லூரியின் பழையமாணவிகள் சங்கங்களினால் ஒருங்கிணைந்து நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைகள் அரங்கு உள்ளடக்கிய மூன்றுமாடிப் பவளவிழா மண்டபத்திறப்பு விழாவில் செட்டெம்பர் 6.2017ல் பங்கு பற்றியதையிட்டு பெருமையடைகின்றேன்.

திருமதி விசாலாட்சி சிவகுருநாதன் அம்மையாரால் அன்பளிப்புச் செய்த விசாலமான நடுத்தோட்டக்காணியில் கொட்டில்களாக ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கல்லூரி இன்று பல மாடிக் கட்டிடங்கள் கொண்டு பல துறைகளிலும் மாணவிகள் கற்பதற்கான வசதிகளுடன்எழில்மிகு கல்லுரியாகக் காணப்படுவது மிகவும் பெருமை தருகின்றது.

பவளவிழாக் காணும் இவ்வேளையில் எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அரும் பணிபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் நன்றியுடன் நினைவு கூரவிரும்புகின்றோம்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழையமாணவிகள் தங்களால் இயன்ற உதவிகளை நல்கி கல்லூரி எல்லாத்துறையிலும் மேன்மை பெற வேண்டு மென அயராது உழைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர்களின் தயாளசிந்தையை பாராட்டும் முகமாக 'சித்தம் அழகியர்' எனும் சஞ்சிகை பவளவிழா மண்டபம் திறப்புவிழா அன்று வெளியிடப்பட்டமை அரிய செயலாகும். இச்சிறந்தமலர் கல்லூரியின் வரலாற்றில் நல்லதோர் ஆவணமாக அருமையான பொக்கிசமாக விளங்கும் என்பதில் ஐயம்மில்லை.

மேலும் பவளவிழாவினை சிறப்பாக நடாத்த முன்னின்று உழைக்கும் அதிபர் ஆசிரியர்கள் மாணவிகள்யாவருக்கும் எங்கள் பாராட்டுக்கள்.

கல்லூரியின் குலதெய்வமாகிய இராஜவரோதய பிள்ளையாரை வணங்கி அவரின் அருளால் பவளவிழா மிகச் சிறப்பாக நடைபெற எங்கள் சங்கத்தின் சார்பில் என் இனிய நல்வாழ்த்துக்கள்.

செல்வி ந.குழந்தை வேலு
ஸ்தபகர், போஷகர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழையமாணவிகள் சங்கம் - கனடா
(பழையமாணவி முன்னாள் ஆசிரியை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவுஸ்திரேலியா யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - சிட்னி போஷகரின் நல்வாழ்த்துக்கள்

நம் தாய் நாடான ஈழத்திலே, ஆல விருட்சம் போல் நிமிர்ந்து, பல கிளைகளைப் பரப்பி, ஆயிரம் ஆயிரம் மாணவமணிகளை உருவாக்கி உலகெங்கும் புகழ்பரப்பும் எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி, 75 வருடங்களை நிறைவு செய்து இவ்வருடம் பவளவிழா கொண்டாடுகிறது என எண்ணும் போது வியப்பும் பெருமிதமும் அடைகின்றேன். இவ்விழாவினைச் சிறப்பிக்கும் முகமாக வருடந்தோறும் வெளியிடப்படும் "சக்தி" சஞ்சிகை பவளவிழா மலராக வெளியிடப்படுகின்றது என அறிந்து பேருவகை அடைவதோடு, அவ்விழா சிறப்புற நிகழ என் ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும், வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்லமற்றை யவை"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றைப் போற்றி, கல்விச் செல்வத்தைப் பெரிதும் மதித்து வாழ்ந்த பெரியோர்களால் சைவத்தமிழ்ப் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்டதே யாழ் இந்து மகளிர் கல்லூரி. இன்று ஒரு கலைக் கோயிலாகத் திகழும் எமது கல்லூரியில் பவளவிழாக் கொண்டாடப்படுகின்றது என்பதை எண்ணும்போது மெய்சிலிர்க்கின்றது. யாழ்மாவட்டத்திலேயே சிறந்த இந்து தமிழ்ப்பண்பாட்டைக் கொண்டு விளங்கும் தனித்துவமான கல்லூரியாகும்.

"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற வாக்கியத்திற்கேற்ப யாழ் இந்துமகளிர் கல்லூரியில் கல்வி கற்ற மாணவிகள் பலர் உலகெங்கும் பல நாடுகளிலும் உயர் பதவிகள் வகித்து வருகின்றனர். இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவிகள் வளர்ச்சிக்காக, கல்லூரியால் உருவாக்கப்பட்ட மாணவிகள் அனைவரதும் பங்களிப்பே இன்று எமது கல்லூரியில் கம்பீரமாக பவளவிழா மண்டபமாக, காட்சியளிக்கும் மூன்றுமாடி கட்டிடமாகும். யாழ்ப்பாணம், கொழும்பு, அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் வாழும் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்கள் "ஒற்றுமையே பலம்" என்பதை அனைவருக்கும் எடுத்துக்காட்டியுள்ளனர். இவர்கள் அனைவரையும் "சித்தம் அழகியர்" எனப் பாராட்டுவது பெரிதும் பொருத்தமுடையதாகும். இவர்களது ஒற்றுமையுணர்வையும், கடமை உணர்ச்சியையும் காணும்போது ஆசிரியையாக அங்கு கடமையாற்றி ஓய்வுபெற்ற எனக்குப் பெருமிதம் உண்டாகின்றது. எனது கல்லூரியில் மாணவியாகவும் ஆசிரியையாகவும் வாழ்ந்த பொன்னான நாட்கள் என்றும் என்மனத்திரையில் நிழலாடும். என் அழகிய இனிய கல்லூரியே! நின் வளர்ச்சி கண்டு ஆனந்தமடைகின்றேன்!

பவளவிழா மிகவும் சிறப்பாக நடைபெற எமது கல்லூரியின் குலதெய்வமாகிய இராஜவரோதய பிள்ளையார் வேண்டி அவுஸ்திரேலியா பழைய மாணவிகள் சங்கத்தின் சார்பில் எனது மனம் கனிந்த நல்வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

"மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடும் கல்லூரி" (கல்லூரி கீதம்)

திருமதி கனகாம்பிகை ஜெகநாதன்
போஷகர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்,
சிட்னி -அவுஸ்திரேலியா
(பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அதிபர்



**திருமதி. மிமலாதேவி விமலநாதன்**

SLPS 1, B.A (Hons), PGDE, M.Ed.

யாழ் இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை - 2018

ஈழத்துச் சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்த ஆறுமுகநாவலரின் தோற்றத்தோடு யாழ்ப்பாணத்தின் கல்வி மரபிலே புதிய திருப்பு முனைகள் பல ஏற்படத் தொடங்கின. அதன்ஒர் அங்கமாக நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சைவத்தமிழ் பெண் பிள்ளைகளும் இணைந்து கற்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் பெண்களுக்கென தனியான கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த பெரியோர்களால் சைவசமயப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணக் கூடியவகையில் நிறுவப்பட்டதே யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகும்.

1943ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ம் நாள் நிறுவப்பட்ட எமது கல்லூரி 75ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பவளவிழாக் காண்பதையிட்டு உள்ளப் பேருவகையடைகின்றேன். தார்மீக வள்ளல் திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையாரின் அறக்கொடையால் ஓலைக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரி இன்று மாடிக்கட்டடங்கள் பலவற்றுடன் பௌதீக ரீதியாகவும் கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டி வருவது பெருமைக்குரியதாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான பெண்கள் கல்லூரிகளில் ஒன்றாக, எமது கல்லூரி திகழ்வதற்கு அவ்வக் காலங்களில் கல்லூரியை சிறப்பாக வழிநடத்திய அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் அரசாங்க கல்வித் துறை சார்ந்தவர்கள் என்போரின் ஒட்டுமொத்த பங்களிப்பும் அர்ப்பணிப்புடனான சேவையுமே என்றால் மிகையாகாது. அவர்களது வழிநடத்தல்களால் இன்று உலகின் பல பாகங்களிலும் தாய் நாட்டிலும் எமது கல்லூரி அன்னையின் புதல்வியர்கள் பல்வேறுஉயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக எமது கல்லூரி பல்வேறு தேவைப்பாடுகளை கொண்டு காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாக பல வேலைத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். அலுவலகத்தின் மேல்மாடி சிதைவடைந்து வகுப்பறைகள் குன்றும், குழியுமாக காணப்பட்ட போது, கல்லூரியின் பழைய மாணவிகள், சமூக ஆர்வலர்களின் ஒத்துழைப்பின் மூலமாக நிலம் சீராக்கப்பட்டதோடு உட்கூரை போடப்பட்டு மின்சார வசதியும் ஏற்படுத்தப்பட்டது. இதனால் கல்லூரியின் முன் புறத்தோற்றம் அழகாகக் காணப்பட்டதோடு கல்லூரியின் முகப்பு வாயிலும் புதிய தோற்றத்துடன் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாணவிகள் சிறந்த ஆய்வுகூட வசதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் புதிய தொழில்நுட்ப ஆய்வு கூடம் நிறுவப்பட்டது. அத்துடன் மழைக்காலத்தில் மாணவிகள் நடமாடுவதற்கு இடைஞ்சலாக சேறும் சகதியுமாக இருந்த எமது கல்லூரி வளாகம் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் உள்ளக வீதிகள் தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டன.

மேலும் கல்லூரித்தாயினால் வளர்த்தெடுக்கப்பட்ட பழைய மாணவிகள் பலரும் கூட்டாக ஒன்றிணைந்து பவளவிழாக் காலத்திற்கு முன்னதாக மண்டபம் ஒன்றுடன் கூடிய வகுப்பறைத் தொகுதியுடனான மூன்றுமாடிக் கட்டடம் ஒன்றை 'பவளவிழா மண்டபம்' ஆக அன்னைக்கு பரிசளிக்க விரும்பி 2015ம் ஆண்டு ஆவணி மாதத்தில் அடிக்கல் நாட்டி பணியைத் தொடங்கி 2017 செப்ரெம்பர் மாதத்தில் வேலைகள் யாவற்றையும் பூரணப்படுத்தியதுடன் திறப்பு விழாவினை வெகுவிமரிசை யாகவும் நிகழ்த்தி அன்னைக்கு கையளித்தனர்.

பழைய மாணவிகளின் நல்லெண்ணத்திற்கு மேலும் வலுச் சேர்ப்பது போல ஐக்கிய அமெரிக்க பசுபிக் கட்டளைப் பீடத்தின் நிதி உதவியுடன் 2015 டிசம்பர் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு மாணவிகள் வசதியாக இருந்து கல்வி கற்கக் கூடிய நவீன வசதிகள் கொண்ட 12 வகுப்பறைகளும் 15 அறைகள் கொண்ட நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட மலசலகூடமும் அமைத்து 2017 யூலை மாதம் கையளிக்கப்பட்டது. மூன்று மாடிகளைக் கொண்ட U.S.Aid கட்டடம் அன்னையை மேலும் அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

மேலும் எமது பிரதான மண்டபத்தின் நிலம் வெடித்துக் காணப்பட்டமையினால் அதனை திருத்தி ரெறாசோ போடப்பட்டதுடன் விளையாட்டு மைதானம், அலுவலகம் என்பனவும் புதுப்பொலிவுடன்மாற்றியமைக்கப்பட்டு 2 மண்டபங்களுக்கு உட்கூரை அமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தகவல் பரிமாற்றத்தை விரிவுபடுத்தும் முகமாக கல்லூரி முழுவதற்குமான Intercom வசதி மேற்கொள்ளப்பட்டதுடன் நவீன கல்வி முறைமைக்கேற்ப மூன்று திறன் வகுப்பறைகள் (Smart Class Rooms)அமைக்கப்பட்டன.

இவ்வாறு பௌதீக ரீதியாக பல வளங்களைப் பெற்றுக் கொண்ட எமது கல்லூரி கல்வியிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பெருமைப்படக் கூடிய பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. தமிழ்த்தினப் போட்டிகளில் தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் மாணவிகள் பல வெற்றிகளைப் பெற்று எமது கல்லூரியை முதன்மைப்படுத்தி வருகின்றனர். அத்துடன் அகில இலங்கை ரீதியாக ஆங்கில தினப்போட்டிகளிலும் சமூக விஞ்ஞானப் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் மாணவிகள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று சாதனைகளை நிலை நாட்டியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. அடுத்து சர்வதேச பாடசாலை விருதினை எமது கல்லூரி தொடர்ந்து இரு தடவைகள் பெற்று பெருமை சேர்த்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்னையின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளுக்கு மகுடம் வைத்தாற் போல் சக்தி சஞ்சிகை வெளியீடு, கலை நிகழ்வுகள்,விளையாட்டு விழா எனப் பலவற்றை பழையமாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரும் பங்கு கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவைமட்டுமன்றி நகரப் பாடசாலைகளில் மைதான வசதியுடன் கூடிய கல்லூரியாக எமது கல்லூரி திகழ்வதற்கு வித்திட்ட ஸ்தாபகரான திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையார் அவர்களின் திருவுருவச் சிலை திறந்து வைத்து நிறுவுனர் நினைவுரையை நிகழ்த்த இறைவன் அருள்பாலித்திருப்பது நாம் செய்த நற்பயனாகும். இக்காலத்தில் பவளவிழாக் கொண்டாடுகின்ற அதிபர்,பிரதி,உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவரும் பேறுபெற்றவர்கள். அத்துடன் செயற்றிட்டங்கள் பலவற்றை செய்து முடித்த பழைய மாணவிகள் சங்கங்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,பழைய மாணவிகளும் கல்லூரியின் கழகங்களும்,மன்றங்களும்வாழ்த்துதலுக்குரியவர்கள்.

மேலும் எமது கல்லூரித் தாயின் தேவைகளில் தற்போது விடுதி வசதி முதன்மையுடையதாக காணப்படுகின்றது. இவ்விடுதி வசதியால் பல மாணவிகளை உருவாக்கிய, நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியில் மாணவிகள் விடுதியில் தங்கியிருந்து கற்பதனால் கல்வியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் உயர்நிலை அடைவதோடு எதிர்காலத்திற்கேற்ற பல்துறை ஆற்றல் கொண்ட நல்ல பெண்கள் சமூகமாக உருவாக்கப்படுவர் என்பது திண்ணம்.

மேலும் இம்மலர் மலர்வதற்கு அடித்தளம் இட்ட மலர்க்குழுவினருக்கும் அவர்களுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்புக்கள் நல்கிய பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய சுவாமிகள், ஆலய பிரதம குரு அவர்களுக்கும், வாழ்த்துரைகள் வழங்கிய பெருந்தகைகள், பழையமாணவிகள் சங்கத்தினர், கட்டுரைகளை வழங்கிய கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மற்றும் அழகிய முறையில் அச்சிட்டு சிறப்பாக வெளிவர உதவிய ஜெயஸ்ரீ அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள்.

நிறைவாக எமது கல்லூரி மேலும் பல வளங்களைப் பெற்று கல்வி, இணைப்பாட விதானம், என்பவற்றில் சாதனைகளை மேலும் நிலைநாட்டி உயர்நிலை பெறுவதற்கு கல்லூரியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் நடுத்தோட்ட இராஜவரோதயப்பெருமான் அனைவர் மனங்களிலும் நிறைந்து அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து நிறைவு செய்து கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது அழகாக இருக்க வேண்டும்

"இது அழகாக இருக்க வேண்டும் ஏனென்றால் நான் இருக்கும் இடம்." யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியுடன் தொடர்புள்ள ஓர் அழகும் இறைமையும் பொதிந்த ஒரு கூற்று. நாடெல்லாம் குப்பையையும் குப்பை முகாமைத்துவமும் பற்றி எண்ணுகின்ற இக் காலத்திலே நாம் மனங்கொள்ள வேண்டிய ஒரு கூற்று இது. அழகாக இருக்கின்றதென்றால் அது இறைமை நிறைந்தது என்பதாகும். இறைமை, அழகு, வழிபாடு என்பவற்றைப் பற்றிச் சிறிது எண்ணுவதாக இக்கட்டுரை அமைகின்றது. அழகு என்பதை எண்ணும்போது "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்னும் அடி நமக்கு நினைவுக்கு வருகின்றது. தாமரை அழகான மலர். அந்த மலரை நினைக்கும் போது இறைவனின் தாள்களுக்கு அது உவமையாகுவது பற்றி எண்ணுகிறோம். அம்மலருடன் இறைவனின் தாள்கள் அழகாகவுள்ளன. அந்த அழகிய இடத்திலே தான் தாம் இருக்க வேண்டுமென நம்முடைய அடியார்கள் எல்லோரும் எண்ணினார்கள்.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்று அப்பர் தலைவி தலைவன் தாளையே சென்றடைகிறாள் என்கிறார்.

இறைவன் தாளை ஏன் தாமரையுடன் தொடர்புறுத்தினார்? இறைவனுடைய பாதத்தினைத் தாமரைத் தாள் என்று அடியவர்கள் குறிப்பிடுவதன் பொருள் என்ன? சிவனுடைய திருவடிகளைப் பாடுபவர்கள் அத்திருவடிகளை தாமரை மலர்களுக்கு ஒப்பிட்டுப் பாடுவதை நாம் காண்கின்றோம். மணிவாசகப்பெருமான் திருவெம்பாவையில், "செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை" என்று பாடுகிறார். திருநாவுக்கரசர், "சித்தத் தெழுந்த செழுங்கமலத் தன்ன சேவடிகள் வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன் என்று கமலச் சேவடியைக் குறிப்பிடுகின்றார்.

பண்டைய காலமுதல் தாமரைப்பூ ஒரு தெய்வீகப் பூவாகக் கொள்ளப்பட்டது. தாமரைப்பூவின் விரிகின்ற இதழ்கள் ஆன்மாவின் படிப்படியான ஈடேற்றத்தினைக் குறிப்பனவாக அமைகின்றன. சேற்றின் நடுவிலே செழுமையான அழகுடனே திகழும் தாமரைப்பூ ஆன்மீக எழுச்சியினைக் காட்டுகின்றது. சேற்றின் நடுவிலே தாமரை பூத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றினுடைய ஒரு சிறு துளி அழுக்கேனும் அம்மலரிலே இருப்பதில்லை. பல்வேறு வகைப்பட்ட அடியவர்கள் தொட்டுத் துதித்தாலும், இறைவனுடைய திருவடிகள் தூய்மையாக இருக்கும் நிலையினைப் புலப்படுத்த அடியவர்கள் அவனுடைய திருவடிகளைத் "தாமரைத் திருவடிகள்" என்று போற்றுகின்றனர்.

மனிதரை வர்ணிக்கும் பொழுது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை பார்ப்பது வழக்கம். திருக்குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லியின் உடலை வர்ணிக்க முற்படும் திரிகூடராசப்பக் கவிராயர் அவளை உச்சியிலிருந்து தொடங்கி பாதம் வரை வர்ணிக்கிறார். ஆனால் இறைவனையோ இறைவியையோ வர்ணிக்குமிடத்து பாதத்திலிருந்து தொடங்கி உச்சி வரை வர்ணித்துச் செல்லுவது வழக்கம். இவ்வேளையில் இறைவனை ஏன் பாதத்திலிருந்து பாட வேண்டும் என்னும் வினாவினை நோக்க வேண்டியுள்ளது. இறைவனுடைய திருவடிக்கு அருகில் இருந்தாலே அதனால் நன்மையுண்டு என்பதை மகாபாரதக் கதையொன்று நமக்கு உணர்த்துகின்றது. மகாபாரதப்போர் நடைபெறப் போகின்றது என்பது உறுதியாகிவிட்டது. கிருஷ்ணனுடைய உதவியினைப் பெறுவதற்காகத் துரியோதனன் துவாரகைக்குச் சென்றான். அங்கு அவன் சென்ற போது கிருஷ்ணன் தூக்கத்திலிருந்தான். அவன் விழி திறக்கும்வரை துரியோதனன் காத்திருக்க வேண்டியதாயிற்று. கண்ணனின் கால்மாட்டில் ஓர் இருக்கையும் தலைமாட்டில் இன்னோர் இருக்கையும் இருந்தன. கண்ணனின் கால்மாட்டில் இருப்பது தனக்குத் தரக்குறைவு என இறுமாப்புற்று துரியோதனன் தலைமாட்டிலுள்ள இருக்கையிலேயே அமரலானான். சிறிது நேரத்தில் அருச்சுனனும் கிருஷ்ணனுடைய உதவியைக் கேட்க எண்ணி அங்கு வந்து சேர்ந்தான். கிருஷ்ணனுடைய கால்மாட்டிலிருந்த இருக்கையிலே மிகுந்த பணிவுடனும் மகிழ்வுடனும் அமர்ந்தான். சிறிது நேரத்தில் கிருஷ்ணன் கண்ணைத் திறந்தான். அவன் அவ்வாறு கண் திறந்தபோது கால்மாட்டில் இருந்த அருச்சுனனையே முதலில் கண்டான். உடனே "அருச்சுனா நீ எதற்காக வந்தாய்?" என்று சுவாமி கேட்டார். "கிருஷ்ணா வருகின்ற பாரதப் போருக்கு உன்னுடைய உதவியைக் கேட்பதற்காக வந்தேன்" என்றான் அருச்சுனன். அதற்குக் கிருஷ்ணன் "என்னுடைய சேனைகளும் ஆயுதங்களும் ஒரு புறத்திலே இருக்கின்றன. மறுபுறத்தில் நான் இருக்கிறேன். இவ்விரண்டினுள் உனக்கு எது வேண்டும்?" என்று சுவாமி கேட்டார். இதற்கு அருச்சுனன் "சுவாமி நீங்கள் தனியனாக எங்கள் பக்கம் நின்றாலே போதும்." என்றான். தனக்குச் சேனைகளும் ஆயுதங்களும் கிடைக்கப் போகின்றன என்று துரியோதனன் மகிழ்ந்தான்.

முடிவில் பாரதப் போரில் யாருக்கு வெற்றி கிடைத்தது என்பது பற்றி இங்கு விரிவாகக் கூற வேண்டிய தேவை இல்லை. பாதம் பிடித்தால் பதம் பெறலாம் என்றும், பாத கமலத்தைத் தொழுதால் பாதக மலம் அறும் என்றும் பெரியவர்கள் நமக்குக் கூறிச்சென்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் சிவபுராணத்தை "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க. இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று சிவபெருமானுடைய பாதங்களை வாழ்த்தித் தொடங்குகிறார். எல்லா வகைத் துன்பங்களையும் துயரங்களையும் அறுக்கின்றனவாக இறைவனுடைய திருப்பாதங்கள் அமைகின்றன. திருநாவுக்கரசரை நீற்றறையிலே சமணர்கள் இட்டபொழுது. "மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே ஈசனெந்தை இணையடி நீழலே." என்று சிவபெருமானுடைய திருவடியை நினைந்து பாடுகின்றார். மிகுந்த வெப்பத்துடன் சாம்பலாக்கக் கூடிய நீற்றறையினை சிவபிரானுடைய திருவடி நிழலாகத் திருநாவுக்கரசர் எண்ணுகின்றார். அத்திருவடி வந்து அழிவினை ஏற்படுத்தக்கூடிய சூட்டினை நீக்கி வீணை இசை, சந்திரன், தென்றல், இளவேனில், பொய்கை போன்று குளிர்ந்ததை அப்பர் சுவாமிகள் திருக்குறுந்தொகையிலே பாடி மகிழ்கின்றார். சிவபெருமானுடைய இத்தகைய திருவடியை நாம் நினைத்தவுடனேயே வணங்கமுடியாது என்பதனை மணிவாசகப்பெருமான் நமக்கு அறிவுறுத்துகிறார். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று சிவபுராணத்தில் அவர் கூறுகின்றார். "நாதன்தாள் வாழ்க" என்று இறைவனுடைய திருவடியினை வாழ்த்திச் சிவபுராணத்தைத் தொடங்கும் மாணிக்கவாசக சுவாமிகள், அப்புராணத்தை நிறைவுசெய்யும்பொழுது, "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து." என்று சிவபெருமானுடைய அடியின் கீழ் அழகான இடத்திலே எவ்வித அல்லலுமின்றிப் புகழுடன் இருக்கக்கூடிய வழியினைக் காட்டுகிறார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

வெற்றி வந்தால் பணிவு
அவசியம்
தோல்வி வந்தால் பொறுமை
அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு
அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை
அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்று பாதையில்....

திருமிகுமெங்கள் யாழ் நகர்க் கனியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி – எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி – உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ.

யாழ் நகரில் வாழ்ந்த சைவப் பெரியோர் பலரின் சிந்தனையில் கருவுற்று விசாலாட்சி அம்மையாரால் வித்திடப்பட்டு உயிர் பெற்று உதயமான எமது கல்லூரி அன்னை, சைவத் தமிழ் பெண் சிறுமிகளின் நலம் பேணும் கல்லூரியாக, அறிவிலும், ஆற்றலிலும் உயர்ந்த ஒரு பெண் சமுதாயத்தை உருவாக்கும் சிறந்த பணியை செவ்வனே செய்து, இன்று தனது புதல்விகளால் அகிலமெல்லாம் கிளை பரப்பி புகழ் நாட்டி இலட்சியத்தை நிறைவேற்றிய பெருமையுடன் கம்பீரமாக காட்சி தருகின்றாள். வெள்ளி விழா, பொன் விழா கண்டு இன்று பவள விழாக்காணும் எங்கள் கல்லூரி அன்னையை, நன்றி உணர்வுடன் இரு கரம் கூப்பித் தொழுது எமது அன்னை படிப்படியாக வளர்ந்து உயர்ந்த வரலாற்றினைத் தருவதில் அன்னையின் புதல்விகளாகிய நாம் பெருமிதமும் பெருமகிழ்வும் அடைகின்றோம்.

வரலாற்றுப் பின்னணி

19ம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழர்கள் இடையே தோன்றிய மொழி,சமய, பண்பாட்டு விழிப்புணர்வுக்கு நல்லூர் திருப்பெருந்திரு ஆறுமுகநாவலரும் அவரின் பின் சேர் பொன்னம்பலம் இராமநாதனும், சேர் பொன்னம்பலம் அருணாசலமும் பெரிதும் காரணர் ஆயினர் என்பது வரலாறு.

"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே – எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்க மெங்கே
ஆத்தனறி வெங்கே யறை"

–சி.வை.தாமோதரம்பிள்ளை

மிஷனரிமார்களின் ஆங்கில மொழி மூலக் கல்வியையும் அதனால் அரச உத்தியோகங்களைப் பெறும் வாய்ப்பையும் பயன்படுத்தி இந்துக்களை மதம் மாற்றுவதைத் தடுக்கவும், சைவசமய பண்பாட்டு சூழலில் அக்கல்வியைப் போதிக்கவும் கூடியதாக பாடசாலைகளை நிறுவ வேண்டும் என்ற இப்பெரியோரின் சிந்தனைகளாலே தூண்டப்பட்டு சைவபரிபாலனசபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், இந்துக்கல்லூரிச் சபை என்பன கல்வித்துறையிலே முனைப்புடன் ஈடுபடலாயின. இதன் பயனாக சைவப் பாடசாலைகளும், இந்துக் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. பிள்ளைகள் தமது சொந்தப் பண்பாட்டு சூழலிலே கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றனர்.

ஆனால் அக்காலகட்டங்களில் பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பல புதிய சிந்தனைகளும் கருத்துக்களும் கூறப்பட்ட போதும் அவை செயல் வடிவம் பெறுவதற்கு வாய்ப்பான சூழல் மிக அரிதாகவே இருந்தது. ஏனெனில் இந்துக்குடும்பங்கள் பின்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஆசார அனுட்டானங்கள், பண்பாடுகள் பெண்களுக்கு கூடிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தின. பெண்கள் கல்வி கற்க சைவத் தமிழ் கலவன் பாடசாலைகள் இருந்த பொழுதும் அவர்கள் பருவம் எய்தியதும் பாடசாலையினின்றும் இடை நிறுத்தப்பட்டனர். மிஷனரிமார்களினால் நிறுவப்பட்ட கிறிஸ்தவ தனிப் பெண்கள் பாடசாலைகள் இருந்த பொழுதும் தமது பெண் பிள்ளைகளை கிறிஸ்தவ மத கலாசார சூழலில் கல்வி கற்க அனுப்புவதற்கு சைவ சமய பண்பாடுகளிலே அதீத நம்பிக்கைகளைக் கொண்டிருந்த இந்துக் குடும்பத்தவர்கள் தயங்கினர். இதன் காரணமாக தம் பெண்பிள்ளைகளின் கல்வியை ஆரம்பக் கல்வியுடன் இடை நிறுத்தினர்.

இந்நிலையில் கலாசாரம்,மொழி, சமயம் ஆகியவற்றை மக்களிடையே விருத்தி செய்வதன் மூலம் எங்கள் இனத்தின் கலாசாரம், பண்பாட்டைப் பேணவும், முன்னெடுத்துச் செல்லவும் முடியுமென்று அறிந்திருந்த அக்கால கற்றறிந்த பெரியோர் பெண்கள் கல்வியை விஸ்தீரணப்படுத்துதல் இக்குறிக்கோளை அடைவதற்கு உரிய முக்கிய மாற்றங்களில் ஒன்று என்பதனை உணர்ந்தனர். ஏற்கனவே இதே சிந்தனையினால் தூண்டப்பட்டு ஆண்கள் பாடசாலைகளையும், கலவன் பாடசாலைகளையும் நிறுவிய பெருமக்கள் தனிப் பெண்கள் பாடசாலைகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்தனர். இவர்களில் முதன்மையானவர் சேர் பொன் இராமநாதன் அவர்கள் ஆவார். மற்றும் இந்துக்கல்லூரிச் சபையினர் (Hindu College Board), திருவாளர்.எஸ்.இராஜரட்ணம் தலைமையிலான இந்து போர்டை (Hindu Board)சேர்ந்தவர்கள். இவர்களை விட இச்சிந்தனையில் உந்தப்பட்ட எம்.ஏ.முத்துக்குமாரு, டாக்டர் பி.எஸ் சுப்பிரமணியம், திரு.காராளசிங்கம், திரு.வேலாயுதம் போன்ற தனிநபர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இச்சிந்தனையின் அடிப்படையில் கௌரவ இராமநாதன் அவர்கள் 1903ஆம் ஆண்டு மருதனார் மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைத்ததன் மூலம் அக்கால மிஷனரிமாரின் கிறிஸ்தவப் பாடசாலைகளில் எமது பெண்கள் கல்வி கற்று மேலைநாட்டு கலாசார மோகத்தில் மூழ்கிப் போகாது தடுப்பதற்கு முயன்றார். இதுமட்டுமல்லாது கல்வி கற்காமல் இருந்த பெரும்பகுதி பெண்ணினம் சைவசமய தமிழ் பண்பாட்டு சூழலில் கல்வி கற்கவும் வாய்ப்பளித்தார்.

இக்காலகட்டங்களில் 1888 இல் ஸ்தாபிக்கப்பட்ட சைவபரிபாலன சபையினால் நியமிக்கப்பட்ட நிர்வாக சபையினர் இன்றைய இந்துக் கல்லூரியை நிர்வகித்து வந்தனர். இந்த நிர்வாக சபை 1902ஆம் ஆண்டு இலங்கை அரசினால் உத்தியோக பூர்வமாக யாழ் இந்துக்கல்லூரியின் அதிகாரசபை என அங்கீகாரம் பெற்றது. இச்சபையினர் 13 இந்துக் கல்லூரிகளையும், பாடசாலைகளையும் நிறுவி நிர்வகித்து வந்தனர்.

இவ்வாறு இந்துக் கல்லூரி சைவசமயச் சூழலில் ஆங்கிலக் கல்வி போதிக்கும் ஒரு பாடசாலையாக எமது பிரதேசத்தில் உருவாகி இருந்தபோதும் ஆண்கள் மட்டுமே பயிலக்கூடிய ஒரு பாடசாலையாகவே செயற்பட்டு வந்தது. இக்கால கட்டங்களில் யாழ் நகரில் இந்துப் பெண்களுக்கென ஒரு சாதாரணப் பாடசாலை தன்னும் இல்லாதது ஒரு பெரும் குறையாகவே காணப்பட்டது. இந்நிலையில் இந்துக்கல்லூரி அதிகார சபையிலிருந்த பெரியோரும், அவ்வேளையில் இந்துக்கல்லூரி அதிபராக இருந்த திருவாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.குமாரசுவாமி அவர்களும் யாழ் இந்துக் கல்லூரியில் சிறுமிகளும் கற்று வல்லவர்களாக உயர வாய்ப்பளிப்பதென தீர்மானித்தனர். இத்தீர்மானம் 1935ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு யாழ் இந்துக் கல்லூரியில் பெண் சிறார்களும் இணைந்து கல்வி கற்கத் தொடங்கினர்.ஆனால் காலகதியில் அதிபர்.A.குமாரசுவாமி அவர்களும் அன்று வண்ணார் பண்ணையில் வாழ்ந்த பிரபல்யம் மிக்க அறிஞர் பெருமக்களும் பெண்களுக்குத் தனியாக ஒரு கல்லூரி நிறுவவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். அதற்கான முயற்சிகளிலும் இறங்கினர்.

தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முதற்படியாக கஸ்தூரியார் வீதியில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்திடலுக்குக் கிழக்குப் பக்கமாக அமைந்த திருவாளர் எஸ். பொன்னுச்சாமி அவர்களின் "பொன்னாலயம்" எனும் தனியார் வீடொன்றில் இந்து மகளிர் கல்லூரி எனும் பெயரில் மகளிருக்கான பாடசாலையை ஆரம்பித்தனர்.[1] இப்பாடசாலை 10.09.1943 தொடக்கம் இயங்கத் தொடங்கியது.[2] 8ஆசிரியர்களையும் 110 மாணவிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு முதலதிபராக திரு.A. குமாரசுவாமி அவர்களே கடமையாற்றினார். நாடு போற்றிய கல்விமானாகிய இவர், ஒரு தகுதி வாய்ந்த பெண் அதிபர் நம் கல்லூரிக்கென தனியாகக் கிடைக்கும் வரை எம் கல்லூரியின் வளர்ச்சிக்கு தன் பங்களிப்பினை இதய பூர்வமாக நல்கினார்.[3] 1944ஆம் ஆண்டில் இருந்து எம் கல்லூரிக்கென நிர்வாக சபையின் மேற்பார்வையில் சுயேட்சை அதிகாரம் கொண்ட பெண் அதிபர்கள் நியமிக்கப்பட்டனர். இவ் அதிபர்கள் வரிசையில் செல்வி காயத்திரி பொன்னுத்துரை(திருமதி. காயத்திரி கணேசன்) கல்லூரியின் முதல் அதிபராக நியமனம் பெற்றார்.[4] இக்காலத்தில் நான்காம் வகுப்பு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையிலான வகுப்புக்களே நடைபெற்றன. சிறியளவில் ஒரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது. தனிப் பெண்கள் பாடசாலையாக இயங்கியமையால் நாளடைவில் மாணவர்கள் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது.

இடநெருக்கடி காரணமாக இப்பாடசாலை இந்துக்கல்லூரி மைதானத்துக்கு தற்காலிகக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு 27.02.1944 இல் இடமாற்றம் செய்யப்பட்டது. ஆனால் இவ் ஆண்டிலேயே எதிர்பாராத வகையில் தம் சொந்த அலுவல்களின் நிமித்தம் செல்வி காயத்திரி கணேசன் அவர்கள் தனது சேவையினின்றும் விலக நேரிட்டது. இதன் பொழுது எமது நாட்டிலேயே தகுதி வாய்ந்த ஒரு பெண் அதிபரைத் தேடி அலைந்த நிர்வாக சபையினர் இந்தியாவில் இருந்து பொருத்தமானவரைத் தருவித்து ஒப்பந்த அடிப்படையில் அதிபராக நியமிக்க முடிவு செய்தனர். இதன் காரணமாக இந்தியப் பெண்மணியான செல்வி முத்து அச்சையா அவர்கள் 1944ஆம் ஆண்டு இறுதியில் அதிபராக கல்லூரியைப் பொறுப்பேற்றார்.[5] வகுப்புக்கள் சிரேஷ்ட தராதரப்பத்திரம் வரை அதிகரித்தன. கல்லூரி மீண்டும் இட நெருக்கடியால் அவதிப்பட நேர்ந்தது.இங்ஙனம் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இடங்களில் பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த காலத்திலேயே இந்துக்கல்லூரி அதிகார சபையினரும், திருவாளர். A. குமாரசாமி அவர்களும் நிரந்தரமான ஒரு காணியில் இந்து மகளிர் கல்லூரியை நிரந்தரமாக அமைக்க தீவிரமாகச் செயற்பட்டனர். இவர்களுடைய முயற்சி கைகூடுவதற்கும் சைவத்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் கல்விக்கும் நல்வாழ்விற்கும் ஒருவரப்பிரசாதமெனக் கருதக்கூடிய கைங்கரியம் ஒன்றை சைவப்பெரியார் சிவகுருநாதர் விசாலாட்சி குடும்பத்தினர் செய்தனர்.

## எங்கள் கல்லூரி ஸ்தாபகர்

நீராவியடியில் வாழ்ந்த உயர்குடித் தோன்றலாகிய சட்டத்தரணி இராமலிங்கம் சிவகுருநாதர் (நகர மாவட்ட சபைத் தலைவர்) அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் விசாலாட்சியம்மா என்னும் அம்மையார் இராமநாதன் கல்லூரிக்கு நிகராக யாழ் நகரில் இந்து சமய கலாசார பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்று அன்புள்ளம் கொண்டு தயாள சிந்தையுடன் அரசடிவீதியில் தமக்கே உரித்தாக இருந்த 24 நிலப்பரப்புக் காணியை கல்லூரிக்கென அன்பளிப்புச் செய்தார். அவர்களே எமது கல்லூரி ஸ்தாபகர் என்னும் பெருமையையும் பெற்றார். அவரது கணவர் சிவகுருநாதர் அவர்களும் அவரது நெருங்கிய உறவினர் திருமதி வள்ளியம்மா சிவகுரு அவர்களும் தமது 16 நிலப்பரப்புக் காணியை நன்கொடையாகத் தந்து உதவினார்கள்.[6] அத்துடன் காப்புக் கடவுளாகிய விநாயகருக்குக் கட்டப்பட்ட இராஜவரோதய விநாயகர் ஆலயத்தையும் கொண்டதாக இக்காணி அமைந்தமை கல்லூரிக்கு கிடைத்த ஆசி என்றே கொள்ளலாம்.

இவ்வளவு பெரிய ஈகையின் மூலம் அம்மையார் அவர்கள் ஆயிரம் ஆயிரம் மாணவிகளின் அன்னையாகத் திகழ்வார் என்பது கூற வேண்டியதில்லை. மேலும் இவர் கல்லூரி கட்டுவதற்குத் தேவையான காணியை வழங்கியது மட்டுமல்லாமல் வீடுகள் தோறும் சென்றும் கட்டடத்திற்கான நிதியும் திரட்டிக் கொடுத்தார்.[7] இங்ஙனம் அவர்கள் வழங்கிய காணி ஒரு சாதாரண தரிசு நிலம் அல்ல. மாநகர சபை எல்லைக்குள் குடிசனம் அடர்த்தியான இடத்தில் பலவித போக்குவரத்து வசதிகள் கொண்ட நல்ல மண்வளம் உள்ள பயன்மிக்க காணியாகும். அத்துடன் நகர்புறச் சூழலும் கிராமப்புறச்சூழலும் இணைந்த ஒரு சூழலாகும். இது போன்ற ஒரு சூழல் அரசியல் செல்வாக்கு, பொருளாதார வளம் என்பவை நிரம்பப்பெற்ற கௌரவ சேர்.பொன் இராமநாதன் அவர்களுக்குக் கூட கிடைக்காமற் போயிற்று. இதன் காரணமாகவே அவர் மருதனார் மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்த வகையில் இந்துக் கல்லூரி அதிகார சபையினருக்கு திருமதி சிவகுருநாதர் விசாலாட்சியம்மா குடும்பத்தினர் கைகொடுத்து உதவியமை எமது கல்லூரியின் உருவாக்கத்திற்கு வழிகோலிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




THE MANAGING COMMITTEE OF THE JAFFNA HINDU COLLEGE BOARD



Mr & Mrs. Sivagurunathar planting a tree



THE STAFF 1943



First Buildings

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Mrs. Clara Motwani
(1946 - 1948)



Mrs. Muththu Archchaya & Staff
(1944)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் பணி

அதிகார சபையினரும் அம்மையாரின் உயரிய எண்ணம் வடிவம் பெறச் செயற்படத் தொடங்கினர். இக்கால கட்டத்தில் இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் முகாமையாளராக திருவாளர் R.R. நல்லையா J.P,O.B.E, Proctor (1944-1951) அவர்கள் கடமையாற்றினார்கள்.[8] கிடைத்த காணியில் உடனடியாக பெரும் கட்டடங்களைத் திட்டமிட்டுக் கட்டுவதற்கு அவர்கள் முனையவில்லை. அத்தகைய ஒரு திட்டத்திற்கு நிதிப்பற்றாக்குறையே முக்கிய காரணமாக இருந்திருக்கலாம்.

முதன் முதலாக அமைக்கப்பட்ட கட்டடமே அரைச் சுவரைக் கொண்ட வகுப்பறையாகவும் ஓலைகளால் வேயப்பட்டதாகவும் அமைந்தமை இதை எடுத்துக்காட்டுகின்றது. இதைத் தவிர அத்தகைய ஒரு பெரும் திட்டத்தை நிறைவேற்றக் காலதாமதமும் ஆகலாம் என்ற ஒரு எண்ணமும் அவர்களிடம் இருந்திருக்கலாம். ஆரம்பித்து விட்டால் அது தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கையும் கொண்டு செயற்பட்டிருக்கலாம். எனவே கிடைத்த காணியில் சமயோசிதமாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கட்டடம் ஒன்றை அமைத்து பாடசாலையை உடனடியாக ஆரம்பித்தமை அவர்களுடைய இலட்சியத்தில் அவர்கள் கொண்டு இருந்த உறுதிப்பாட்டையும் திட சங்கற்பத்தையும் காட்டுகின்றது. இப்பாடசாலை வளரும், தமிழ், சைவசமூகம் அதனை வரவேற்கும், அதன் அவசியத்தை உணரும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்ததையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

ஏனெனில் அக்காலங்களில் மாணவர்கள் பற்றாக்குறையினால் அல்லது பணமுடக்குகளினால் சில பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டமைக்கு அல்லது இடை நிறுத்த யோசித்தமைக்கு சான்றுகள் உள்ளன. யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் ஒரு காலத்தில் மூடப்பட்டு கல்வித் திணைக்கள அலுவலகமாக மாற்ற முயற்சி எடுக்கப்பட்டமை இதற்கு ஒரு உதாரணமாகும்.[9]

இது போன்ற நிலைமைகள் இக்கல்லூரிக்கு ஏற்படா வண்ணம் கல்லூரியின் தாபிதத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் தங்கள் தன்னலம் கருதாத நற்சேவையை நல்கிய இந்துக்கல்லூரி அதிகாரசபையினருள் கல்லூரியோடு நீண்டநாள் தொடர்புடையவர்களாக இருந்த சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி (சபாநாயகர், சட்டசபை)திரு R.R நல்லையா அவர்கள், முடிக்குரிய நியாய துரந்தரர் திரு.T.முத்துசுவாமிப்பிள்ளை அவர்கள், வழக்கறிஞர் திரு.S. சிவகுருநாதன் அவர்கள் இராசவாசல் முதலியார் திரு.N. பொன்னம்பலம் அவர்கள், திரு.A.அருளம்பலம் J.P (வழக்கறிஞர்)அவர்கள், திரு.சி.அருளம்பலம் வழக்கறிஞர் (பின் நாடாளுமன்ற உறுப்பினர் ) திரு.ஏ.தனபாலசிங்கம் வழக்கறிஞர் ஆகியோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கவர்கள்.[10]

## நிரந்தரமான இடத்தில் கல்லூரி

கல்லூரியானது நிரந்தரமான புதிய இடத்திற்கு 1945ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆந் திகதி யாழ் இந்து கல்லூரி அதிகார சபையின் முகாமையாளராக இருந்த (1934-1944) சேர் வைத்திலிங்கம் துரைசாமி (Speaker, Ceylon State Council) அவர்களால் கல்லூரியின் விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்துடன் இடமாற்றம் செய்யப்பட்டது.[11] அதுவரை காலமும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் உள்ள தற்காலிக பந்தல்களில் இயங்கி வந்த யாழ். இந்து மகளிர் கல்லூரி நிரந்தரமான தனது சொந்த வீட்டில் இயங்கத் தொடங்கிற்று. செல்வி முத்து அச்சையா அவர்கள் தொடர்ந்தும் அதிபராகக் கடமையாற்றினார்.

முதன் முதல் அமைக்கப்பட்ட கட்டடத்திலேயே ஒரு அறை அதிபரின் அலுவலகமாகவும் இன்னோர் அறை ஆசிரியர்களின் அறையாகவும் ஏனையவை வகுப்பறைகளாகவும் அமைந்தன.

பெண் அதிபரும் பெண் ஆசிரியைகளும் கடமையாற்றும் ஒரு பெண்கள் பாடசாலையில் தங்கள் பிள்ளைகளை பெற்றோர் கூச்சமின்றி சேர்க்க முன் வந்தனர். படிப்படியாக ஆனால் விரைவாக மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்தது.

## விடுதிச் சாலை

இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் அமைந்திருந்தாலும் அது யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதியிலும் உள்ள இந்து மதப் பெண்களுக்கும் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே அதன் ஸ்தாபர்களின் நோக்கமாகும். பாடசாலையைச் சுற்றியுள்ள இரண்டு, மூன்று கிலோ மீற்றரில் உள்ள இந்துக்குடும்பப் பிள்ளைகள் கற்பதற்கு வாய்பபளிப்பதன் மூலம் மக்களிடையே தமிழ், இந்துக் கலாசாரத்தை புகுத்தவோ, வளர்க்கவோ முடியாதென்பது அவர்களின் கருத்தாகும். எனவே தொலைவில் வாழும் இந்துக்குடும்பப் பெண்பிள்ளைகளும் இக்கல்லூரியில் கற்பதற்கு வாய்ப்பளிப்பதை விடுதிச் சாலை ஒன்றின் மூலமே உறுதிப்படுத்த முடியும் என்பதை உணர்ந்த அதிபரும் இந்துக்கல்லூரி அதிகார சபையினரும் 1945ஆம் ஆண்டு விடுதிச் சாலை ஒன்றை அமைத்தனர்.[12]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதிச்சாலை என்பது லேசான காரியமல்ல. மாணவர் தங்குமிடம் அன்றாட வசதிகள் உணவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். சமையலறை, சாப்பாட்டறை, மாணவிகள் தங்குமறை, நீர்வசதி, மின்சார வசதி, மலசலகூட வசதிகள் அத்தனையும் அவசியமாகும். விடுதிச்சாலையின் ஆரம்ப கட்டத்தில் இவை எல்லாம் முற்றாக நிறைவேற்றப்படாவிட்டாலும், தற்காலிகமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு விடுதிச் சாலை ஆரம்பிக்கப்பட்டது, ஒரு வரவேற்கத்தக்க விடயம் மாத்திரமன்றி கல்லூரியின் வளர்ச்சியில் ஒரு கல்தூரம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது என்றும் கூறலாம்.

## கல்லூரி வளர்ச்சிப் பாதையில் அதிபர்களின் பணி

செல்வி முத்து அச்சையாவின் (1944-1945) பின் அவரின் பணியை நிறைவேற்ற அவரைத் தொடர்ந்து பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர்கள் முனைப்புடன் சளைக்காது உழைத்தனர். இவ்வரிசையில் ஸ்ரீமதி ஜெம்மாராணி சிற்றம்பலம் (1945-1946) திருமதி கிளாரா மொறவாணி (1946-1948) ஆகியோரின் பணிகள் இன்றும் நினைவு கூரக் கூடிய வகையில் அமைந்துள்ளன.

குறிப்பாக அன்றைய இலங்கையில், படித்த அறிவாளிகளில் ஒருவரான திருமதி. கிளாரா மொறவானி அஞ்சாமை, அறிவு, ஊக்கம் நிறைந்தவர். இவர் காலத்தில் 14.06.1947 தொடக்கம் கல்லூரி விடுதிச்சாலை ஒழுங்காக இயங்கத் தொடங்கி திறம்பட நிர்வகிப்பட்டதால் விடுதி மாணவர் தொகை நூற்றுக்கும் மேற்பட்டது.[13]

கல்லூரியில் கிட்டத்தட்ட 354 மாணவர்கள் கல்வி கற்றனர் என அறிய முடிகின்றது. 01.06.1947இல் இவரின் முயற்சியினால் பழைய மாணவர் சங்கமும் உருவாக்கப்பட்டது.[14]

"நல்லதொரு அதிபரைத் தாருங்கள், நான் நல்லதொரு பாடசாலையைத் தருகிறேன்" என்றார் ஒரு மேதை. இதற்கு இலக்கணமாக அமைந்தவர் திருமதி கிளாரா மொறவானி. அவர்கள் மாற்றம் பெற்று சென்ற பின் 1948 ஆம் ஆண்டு பாடசாலையைப் பொறுப்பேற்ற புதிய அதிபர் திருமதி சரோஜினிராவ் அவர்கள் ஆவார். இவரின் ஆறு ஆண்டு பதவிக்காலத்திலேயே (1948-1954) இப்பாடசாலை ஒரு முழு வளர்ச்சியடைந்த பாடசாலையாக இன்று திகழ்வதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.[15]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சேவைக் காலத்தில் கல்லூரி வளர்ச்சிக்காக அவர் நிறைவேற்றிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது.

1. கல்லூரி மாணவிகளிடையே இந்துமத நம்பிக்கை, இந்து மத கலாசாரம் விருத்தியடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2. அவர்கள் சமூக இசைவாக்கம், ஆளுமை போன்ற திறன்களைப் பெற்று வாழ்வதற்கு தேவையான புறப்பாட விதானங்கள் ஏற்படுத்தப்பட்டன

3. பாடசாலை கொடிக்காக பச்சை - வெள்ளை நிறங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

4. உயர்தரக் கலை, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு விஞ்ஞான கூடமும் அமைக்கபட்டது

5. தொழில்நுட்பப் பாடங்களான கைவேலை, நெசவு, தையல் போன்ற பாடங்களும் சங்கீதம், நடனம், சித்திரம் போன்ற கவின் கலைப் பாடங்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

6. உடற்பயிற்சிக்கும், விளையாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததோடு நில்லாமல் விளையாட்டு மைதானம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இல்லங்கள் உருவாக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

7. பாடசாலைக்கான இலச்சினை, மகுடவாசகம், கல்லூரிக்கீதம் என்பன உருவாக்கப்பட்டன.

8. "சக்தி" என்ற பெயரில் பாடசாலை சஞ்சிகை ஒன்றும் வருடா வருடம் வெளிவருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

9. களியாட்ட விழா ஒன்றும், அதிஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடாத்தப்பட்டு பாடசாலை சுற்று மதில் கட்டப்பட்டது.[16]

பாடசாலையின் இத்தகைய முனைப்பான முன்னேற்றம் மக்களிடையே அது பற்றிய உயர்வான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியது. இதனால் பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை படிப்படியாகக் கூடியது. 1954ஆம் ஆண்டு 42 ஆசிரியர்களையும் 1100 மாணவர்களையும் கொண்டதாக விளங்கியமை இதன் வளர்ச்சியை எடுத்துக் காட்டுக்கின்றது.இதனால் பாடசாலை இரண்டாம் தரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Mrs. C. SAROGINI RAO M.A.L.T
(1948 - 1954)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Mrs. Vimala Arumugam
(1954 - 1976)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.[17] மேலும் பாடசாலையில் அத்தியாவசியமான அம்சங்களில் நூலகமும் ஒன்றாகும்.

எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமான நூல்கள் பலவற்றைத் திரட்டி பாடசாலை நூலகம் ஒன்றை அமைப்பதற்கும் திருமதி சறோஜினி ராவ் முயற்சி செய்தார். ஆனால் போதிய கட்டட வசதி இன்மை காரணமாக இந்நூல்கள் சில அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டன. இவ்வழிகோலுகையானது 1954இல் இவரின் பின் அதிபராகப் பொறுப்பேற்ற திருமதி விமலா ஆறுமுகம் அவர்களால் பூர்த்தி செய்யப்பட்டது.

**வெள்ளி விழாக்கால அதிபர்**

திருமதி வி.ஆறுமுகம் அவர்கள் பாடசாலைக்குப் புதியவரல்ல. இப்பாடசாலையிலேயே 15 வருடங்களுக்கு மேலாகக் கற்பித்த ஓர் ஆசிரியை ஆவார். பாடசாலையுடன் பரீச்சயமான ஒருவர் அப்பாடசாலையின் அதிபராகக் கடமை புரிவது எப்போதும் ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது ஒரு பொதுவான அனுபவமாகும். தனது அனுபவங்களைப் பயன்படுத்தி மாணவர்களை வழிப்படுத்தவும் ஆசிரியர்களை நெறிப்படுத்தவும் அவரால் முடிந்தது. திருமதி வி.ஆறுமுகம் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று ஒரு வருட காலத்திலேயே 1.1.1956 இல் கல்லூரி முதலாம் தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.[18]

இவ்வதிபரின் சேவைக்கு முகாமையாளர் திருவாளர் T.முத்துசுவாமிப் பிள்ளையவர்களும் அவர் குழுவினரும் மிக மிக உறுதுணையாக இருந்தனர். தமது ஒரே ஒரு பெண்கள் கல்லூரியும், கடைசிக் கல்லூரியுமான இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் இந்துக்கல்லூரி அதிகார சபையினர் மிகக் கூடிய அக்கறை செலுத்தினர்.

அதிபர் தனது 1960ஆம் ஆண்டு அறிக்கையில் 'இந்துக்கல்லூரிச் சபை எப்பொழுதும் எந்த உதவியும் செய்யத் தயாராகவுள்ளது. சென்ற தவணையும் இந்துக்கல்லூரிச் சபை கல்லூரி முன்புறத்தில் நிர்வாகக் கட்டடம் ஒன்று அமைக்கத் திட்டம் தீட்டியது. ஆனால் அரசின் பாடசாலை சுவீகரிப்புத் திட்டம் இத்திட்டத்தை கைவிடச் செய்து விட்டது "[19] எனக் கூறி உள்ளமை இந்துக் கல்லூரிச் சபையின் ஆர்வத்திற்கும் சேவைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

திருமதி வி.ஆறுமுகம் அவர்களின் காலத்திலேயே 01.12.1960 இல் அரசாங்கத்தின் பாடசாலைச் சுவீகரிப்பு திட்டத்தின் கீழ் இதுவரை இந்துக் கல்லூரி அதிகார சபையினரால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகளின் நிர்வாகம், இந்து மகளிர் கல்லூரியின் நிர்வாகம் உட்பட இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரப்பட்டது.

இச்சுவீகரிப்புத் திட்டத்தில் கருத்து வேறுபாடுகள் பல இருந்தாலும் இந்துக்கல்லூரி அதிகார சபையினர் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து பாடசாலைகளையும் நிபந்தனைகளுடன் அரசிடம் கையளிப்பதென தீர்மானித்தனர். இந்நிபந்தனை பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. ' It was ensured that though they were to be government schools they were to be run on the lines originally intended by the Board" 01.12.1960இருந்து யாழ் இந்து மகளிர் கல்லூரியும் அரச பாடசாலையாகியது.[20] ஆனாலும் அரசின் சுவீகரிப்புக் கொள்கை காரணமாக கூட பாடசாலைக் கட்டடம் அமைக்கும் முயற்சிகள் கைவிடப்படவில்லை.

அப்பொழுது நல்லூர்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.சி. அருளம்பலம் அவர்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து எங்கள் கல்லூரிக்கு முக்கிய தேவையாக இருந்த பிரார்த்தனை மண்டபம் கட்டுவதற்கான தொகையைப் பெற்றுத் தந்தார். அத்துடன் 1963இல் கல்லூரியின் மாணவிகளே பங்குபற்றிய 'நளதமயந்தி', 'கற்புக்கனல்' எனும் நாடகங்கள் யாழ் நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு திரட்டப்பட்ட நிதியும் கல்லூரியின் பழைய மாணவிகளுள் ஒருவராகிய திருமதி.கார்த்திகா கணேசன் அவர்களின் நடனக் கலை நிகழ்ச்சி மூலமாக பழைய மாணவிகள் திரட்டிய நிதியும் மண்டபத்தை பூர்த்தி செய்வதற்கு ஒரு பங்காகப் பயன்பட்டது. இப்பிரார்த்தனை மண்டபமே கல்லூரி கட்டுவதற்கு தேவையான காணியை வழங்கிய திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அவர்களின் பெயரைத் தாங்கிய "விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபம்" எனும் பெயரில் இன்றும் பிரதான மண்டபமாகத் திகழ்கின்றது. இம்மண்டபத்தின் மேற்பகுதியில் கல்லூரியின் நூலகமும் அமைக்கப்பட்டது.

மேலும் இந்து மகளிர் கல்லூரி ஸ்தாபிதம் பெற்ற காலம் தொடக்கம் நான்காம் வகுப்பே இக்கல்லூரியின் ஆரம்ப வகுப்பாக இருந்தது. கல்லூரியின் பெற்றோர், ஆசிரியர், நலன்விரும்பிகளின் வேண்டுகோளுக்கு இணங்க 1968ஆம் ஆண்டு முதல் முதலாம் வகுப்பு ஆரம்ப வகுப்பாக்கப்பட்டது. இந்நிகழ்வானது கல்லூரி மாணவியர் தொகை அதிகரிக்க ஒரு காரணமாக அமைந்தது. திருமதி விமலா ஆறுமுகம் காலத்திலேயே 1968ஆம் ஆண்டு கல்லூரியின் வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் கல்லூரியை நல்ல முறையில் முன்னெடுத்துச் சென்ற திருமதி வி.ஆறுமுகம் அவர்கள் 1975இல் ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொற்கால அதிபர்

பொதுவாக திறமை மிக்க அதிபரொருவர் ஓய்வு பெறும் பொழுது பாடசாலையின் எதிர்காலம் பற்றி பெற்றோரும் ஏனையோரும் சிந்திப்பது வழக்கம். மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தளராமல் அதே நேரத்தில் பாடசாலையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய தகைமைகள் நிரம்பிய செல்வி ப.இராமநாதன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு வைகாசி மாதம் பாடசாலையைப் பொறுப்பேற்றார். இக்கல்லூரியிலேயே நீண்ட காலமாக ஆசிரியையாகவும் உபஅதிபராகவும் இருந்த காரணத்தினால் மாணவர், பெற்றோர், பாடசாலை நிர்வாகம் பற்றிய அறிவும், அனுபவம் பெற்றிருந்த செல்வி ப. இராமநாதன் காலத்தில் பாடசாலை அடைந்த துரித வளர்ச்சி வெளிப்படையாகத் தோற்றமளித்தது.

## இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

பாடசாலையின் தரம் மாணவர்களின் தகைமையிலும் ஆசிரியரின் அர்ப்பணிப்பிலுமே தங்கியுள்ளது என்ற யதார்த்தமான கருத்தைக் கொண்டிருந்த அதிபர் அவர்கள் இவற்றை உறுதிப்படுத்துவதில் சளைக்காது தொழிற்பட்டார். மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலே அப்பாடசாலையை கல்வித்துறையிலும் ஏனைய துறையிலும் முன்னெடுத்துச் செல்லலாம் என்ற உண்மையை அறிந்திருந்தமையினால் ஆரம்பப் பிரிவில் இருந்து மாணவர்கள் நேரடியாக கல்லூரியின் கனிஷ்ட, இடைநிலைப் வகுப்புக்களில் அனுமதி பெறுவதை கட்டுப்படுத்தும் முகமாக அனுமதிப் பரீட்சைகள் மூலம் மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் முறையை கையாண்டார். இதன் காரணமாக 1978ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்ப வகுப்புக்கள் தனியாக்கப்பட்டு இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் தனியாக இயங்கத் தொடங்கிற்று.[21] இதற்கு வேறானதொரு அதிபரும் நியமிக்கப்பட்டார்.

அத்துடன் தகைமையும், கற்பித்தற்திறனும், ஆசிரியைக்குரிய நற்பண்புகளும் நிரம்பிய ஆசிரியர்களையே தேர்ந்தெடுத்து தன் ஆசிரியர் குழாமில் சேர்த்துக் கொண்டார். ஆசிரியர், மாணவர் என்ற இருபாலருமே துரிதமாக பயனுள்ள முறையில் தொழிற்படக்கூடிய கல்லூரி நிர்வாகத்தை மேற்கொண்டார். ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் அதிகூடிய உழைப்பைப் பெறவும் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஆற்றல்களை வெளிக் கொண்டு வரவும் அவர் கையாண்ட முறைகள் அவரின் நிர்வாக ஞானத்தைக் காட்டுகின்றது.

இக்கால கட்டங்களில் இக்கல்லூரியில் இருந்து பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெவ்வேறு துறைகளிலும் இருந்து அனுமதி பெற்றனர். கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மாத்திரமன்றி மருத்துவத்துறைக்கும் அனுமதி பெற்ற மாணவர் தொகை அதிகரித்தது. 1977-1980 வரை தொடர்ச்சியாக விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளிலும் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கங்களை தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டனர். 'புதிய ஆக்கம்' எனும் நவீன நடனப் போட்டிகளிலும் 1ம் இடத்தைப் பெற்று புகழீட்டியதும் இவரது காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது. விளையாட்டுத்துறையிலும் ஏனைய பெரிய பாடசாலைகளுக்கு சளைத்ததாக இல்லை என்று கருதக்கூடிய அளவிற்கு கல்லூரி முன்னேற்றத்தை காட்டியது. மாவட்டப் பெண்கள் கல்லூரிகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் பரிதி வட்டம் எறிதலிலும், பூப்பந்து ஆட்டத்திலும் 1ம் இடத்தைப் பெற்று வெற்றி வாகை சூடினர்.

வெளிப்படையாகத் தோற்றமளித்த இச்சாதனைகள் பாடசாலை பற்றிய ஒரு உயர்வான அபிப்பிராயத்தை ஏற்படுத்தின. தொலைவான இடங்களில் வசிக்கும் பெற்றோர்கள், வேறு பாடசாலைகளில் படித்த மாணவர்கள் இப்பாடசாலையில் எப்படியேனும் அனுமதி பெற வேண்டும் என்று முண்டியடித்தமை இதற்கு சான்று பகருகின்றது. இதன் விளைவாக 1978 இல் மாணவர் தொகை 1790 ஆக அதிகரித்தது.

மேலும் இக்கால கட்டங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அதிபர் அலுவலகமும் ஒரு விஞ்ஞான கூடமும் அமைக்கப்பட்டன. மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த வகுப்பறை மண்டபம் 10 வகுப்பறைகள் கொண்ட மாடிக்கட்டடமாக மாறியது. புதிதாக இரசாயன, பௌதீக, உயிரியல் ஆய்வு கூடங்கள் புதிய வசதிகளுடன் அமைக்கப்பட்டன. பாடசாலை விடுதியைச் சுற்றி பாதுகாப்பான தனிமதில் கட்டப்பட்டது. இவை நன்கு திட்டமிடப்பட்டு கல்லூரியின் நலனில் அக்கறையுடைய பாராளுமன்ற அங்கத்தவரின் நிதி ஒதுக்கீட்டினாலும் கல்வித்திணைக்கள நிதி ஒதுக்கீடுகளினாலும் செம்மையாகக் கட்டப்பட்டன. கல்லூரியின் பிள்ளையார் கோயிலும் 27.03.1986இல் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகமும் இவர் காலத்தில் நடந்தது.[22]

கட்டடங்கள் கட்டுவதில் மட்டும் தன் நாட்டத்தைச் செலுத்தாது மாணவர்களின் கல்வி உயர்ச்சியிலும் ஒழுக்கத்திலும் விஷேச கவனம் செலுத்தியமையினால் அவர் காலத்தில் கற்ற ஒவ்வொரு மாணவியின் நினைவிலும் நீங்கா இடம் பெற்றார்.

மணிமுடி சூடிய சில மாமன்னர்களின் ஆட்சிக்காலம் எவ்வாறு ஒரு நாட்டின் சரித்திரத்திற் பொற்காலமாக அமைகின்றதோ அவ்வாறே இம் முடிசூடாச் செல்வியின் அதிபர் பதிவிக்காலம் இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றிலே ஒரு பொற்காலமாகும். செல்வி. ப. இராமநாதன் அவர்கள் 1986ஆம் ஆண்டு யூன் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Miss. Pathmavathi Ramanathan
(1976-1986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்விழாச் சபை



Mrs. Thiviyasironmani Nagaraja
(1986 - 1993)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்றதன் பின் திருமதி.தி.நாகராஜா அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார்.

### பொன்விழாக்கால அதிபர்

1986 யூன் மாதத்தில் இருந்து கல்லூரியைப் பொறுப்பேற்ற திருமதி. திவ்விய சிரோரோண்மணி நாகராஜா அவர்கள் ஏற்கனவே பாடசாலையில் நடைமுறையில் இருந்த முனைப்பான எல்லாத் தொழிற்பாடுகளையும் முன்னெடுத்துச் சென்றதோடு கல்லூரி உயர்நிலை அடைவதற்கு பல வழிகளிலும் தனது பங்களிப்பை வழங்கி திறமையாக செயற்பட்டு வந்தார். போர்க்காலச் சூழ்நிலையால் சொல்லொணாக் கஸ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்த வேளையிலும் துணிவுடன் செயற்பட்டு வெற்றி கண்டுள்ளார். 1987இல் இந்திய அமைதிப் படையினர் யாழ் நகரைக் கைப்பற்றிய பொழுது எமது கல்லூரி அகதி முகாமாக ஆக்கப்பட்ட வேளையில் அரசியல் நெருக்கடிகளும் அனர்த்தங்களும் நிறைந்த ஒரு சூழ்நிலையில் சகலரையும் அரவணைத்து பல இன்னல்கள் மத்தியில் கல்லூரியை கட்டிக் காத்த பெருமை இவரையே சாரும்.

அக்காலத்தில் நடைமுறையில் இருந்த கொத்தணி அதிபராகவும் செயற்பட்ட இவரது காலத்தில் எமது கல்லூரி சகல பிரிவுகளிலும் விசேடமான பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்று வருடாவருடம் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வந்ததும் இவரது நிர்வாகத் திறனுக்கு சான்று பகர்கின்றது. இது மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையிலும் எமது கல்லூரி முன்னேறிச் சென்றதும் குறிப்பிடத்தக்கதாகும். இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போன்று இவரது காலத்திலேயே கல்லூரி பொன்விழாக் கண்டு பெருமையடைந்தது. 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திருமதி. தி.நாகராஜா அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல திருமதி.சரஸ்வதி ஜெயராசா அவர்கள் அதிபரானார்.

### மணிவிழாக்கால அதிபர்

இவரது காலமும் அரசியல் குழப்பங்கள் போர்ச்சூழல்கள் நிறைந்த காலமாகும். எனினும் கல்லூரியின் பாட விதான, இணைப்பாட விதான செயற்பாடுகள் தொடர்ச்சியாக திருப்திகரமாக நடைபெற்று வந்தன. ஆனால் நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட இடப்பெயர்வுடன் கல்லூரி செயற்பாடுகளும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் அதிபரின் நிர்வாகத் திறனால் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக எமது கல்லூரியை இயங்க வைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைய முயற்சி செய்தார். மீண்டும் 1996 ஏப்ரலில் திரும்பி வந்த பொழுது ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தொகை குறைவடைந்திருந்தது. கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல விதத்திலும் பாதிப்படைந்து ஆவணங்கள் தொலைந்து பொலிவிழந்து காணப்பட்டது. எனினும் படிப்படியாக பல தரப்பட்டவர்களின் உதவியுடன் கல்லூரி திருத்தியமைக்கப்பட்டது. இவரது காலத்தில் கல்வி அமைச்சின் SEMP செயற்றிட்டத்தின் கீழ் கல்லூரியில் ஏற்கனவே இருந்த வகுப்பறைகள் மாற்றியமைக்கப்பட்டு முதன் முதல் கணினி அறை ஒன்றும், புதிய நூலகம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. அத்துடன் அரச சார்பற்ற நிறுவனமான GTZ இன் நிதிஉதவியுடன் கனிஸ்ட விஞ்ஞான ஆய்வு கூடம், பல்லூடக அறை என்பன அமைக்கப்பட்டன. அவற்றிற்குரிய தளபாடங்களும் பெறப்பட்டன. அத்துடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சி, கல்லூரியின் பௌதீகத் தேவைகள் என்பவற்றிற்கு பழைய மாணவிகள் சங்கங்களின் பங்களிப்புக்களை தொடக்கி வைத்த பெருமை இவரையே சாரும். இவைமட்டுமல்லாமல் பரீட்சைப் பெறுபேறுகள் இணைப்பாட விதான செயற்பாடுகள் என்பவற்றில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு கல்லூரி உயர்நிலை அடைய வழிவகுத்தார். இவரது காலத்திலேயே 2003ஆம் ஆண்டு எமது கல்லூரி மணிவிழாவை கொண்டாடி மகிழ்ந்தது. 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருமதி.ச.ஜெயராசா அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல திருமதி.வே.பேரின்பநாதன் அவர்கள் அதிபரானார்.

**திருமதி வே.பேரின்பநாதன்**

1989ம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக எமது கல்லூரியில் இணைந்து கொண்ட திருமதி வேதநாயகி பேரின்பநாதன் அவர்கள் எமது கல்லூரியில் ஆசிரியையாக கடமையாற்றிய காலங்களில் கடமை, கண்ணியம். கட்டுப்பாட்டுடன் செயலாற்றியவர். உயர்தர விஞ்ஞானப் பிரிவில் பௌதீகவியல், பிரயோக கணிதம் என்பவற்றையும் இடைநிலை வகுப்புக்களில் கணிதத்தையும் கருத்துடன் கற்பித்தவர். 1991ம் ஆண்டு அதிபர் பரீட்சையில் சித்தியடைந்திருந்த இவர் பல வருடங்கள் ஆசிரியராக தனது கடமைகளைச் செய்தவர். 2000ஆம் ஆண்டில் பிரதி அதிபரான செல்வி.யோ.கந்தையா அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பிரதி அதிபராகவும் , 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் திருமதி ச.ஜெயராசா ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து எமது கல்லூரியின் அதிபராகவும் நியமிக்கப்பட்டார். கல்லூரியின் பௌதீக வளங்களை உயர்த்துவதிலும் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்துவதிலும் அக்கறையுடன் செயற்பட்ட இவரது காலத்தில் உயர்தர விஞ்ஞான ஆய்வு கூடங்கள், கணினி அலகு, சுகாதார வசதிகள், விசாலாட்சி மண்டபக்கூரை என்பன திணைக்கள நிதி உதவியுடன் புணரமைக்கப்பட்டன. அத்துடன் புதிய குடிநீர்த் தாங்கி ஒன்றும் அமைக்கப்பட்டது. பழைய மாணவிகளும் கல்லூரியின் வளர்ச்சிக்காக விருப்புடன் இணைந்து கொண்டனர். பரிசு நிதியத்திற்காக அன்பளிப்புக்களும் கல்லூரிக்குத் தேவையான போட்டோ பிரதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs. Saraswathy Jeyaraja
(1993-2006)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs. Vethanayaki Perinpanathan
(2006-2012)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைநகல் இயந்திரங்களையும் வழங்கினர். அவுஸ்திரேலியா பழைய மாணவிகள் சங்க நிதி உதவியுடன் 25'x50' விஸ்தீரணம் கொண்ட சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டது. மேலும் மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக கனடா பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரிக்கான 2வது கணினி அலகிற்குரிய கணினிகள், கற்றல் உபகரணங் களுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. இவ் அலகிற்கான இடவசதியை ஏற்படுத்தும் நோக்கில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் கலை விழா ஒன்று நடாத்தப் பெற்று கணினி அலகுக்கான இடம் புணரமைக்கப்பட்டதோடு சிற்றுண்டிச்சாலையின் மேற்தளத்தில் ஆங்கிலபாட செயற்பாட்டறை, வகுப்பறை என்பன அமைக்கப்பட்டன.

மேலும் மாகாண அமைச்சின் நிதி உதவியுடன் புதிய கூடைப்பந்தாட்டத் திடல் அமைக்கப்பட்டதோடு. இலண்டன் பழைய மாணவிகள் சங்க நிதி உதவியுடன் விநாயகர் ஆலயம் புணரமைக்கப்பட்டு, விநாயகருக்கான எழுந்தருளி மண்டபமும் அமைக்கப்பட்டது. இக்கால கட்டங்களில் மாணவர்களுக்கான தெரிவுப் பாடங்களின் (Basket Subjects) எண்ணிக்கை அதிகரித்தமை, இருமொழி மூலப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை, போர் காரணமாக இடம்பெயர்ந்த மாணவர் அனுமதி அதிகரித்தமை போன்ற காரணங்களால் கல்லூரியில் வகுப்பறைப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை நிலவி வந்தது. இதற்காக இவர் கல்வித் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள், புலம்பெயர் பழைய மாணவிகள் சங்கங்கள் என்பவற்றிடம் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தார்.

பௌதீக வள அபிவிருத்தியில் மட்டுமல்லாமல் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளிலும் கவனம் செலுத்தி ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்ததோடு இணைப்பாட விதானங்களான நுண்கலைகளிலும் விளையாட்டுத் துறையிலும் ஈடுபட ஊக்கமளித்தார். இதன் ஓர் அங்கமாக விளையாட்டுத்துறையில் உள்ளக விளையாட்டுக்களான சதுரங்கம், மேசைப்பந்து, கரம் என்பன மீள் எழுச்சிக்கு உட்படுத்தப்பட்டு பயிற்சியாளரினால் பயிற்சியளிக்கப்பட்டு தேசிய மட்டப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றினர்.

மேலும் எமது கல்லூரியை தேசிய கல்லூரி ஆக்குவதற்கு முழு முயற்சிகளையும் மேற்கொண்டார். இந்நிலையில் 2012ஆம் ஆண்டு எமது கல்லூரிக்கான தனது 23 வருட சேவையின் பின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று கல்வித் திணைக்களத்திற்கு மாற்றலாகிச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி வே. பேரின்பநாதன் அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து 2012ஆம் ஆண்டு யூன் மாதம் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்கள் எமது கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார். தனது கல்விச் சேவையில் ஆசிரியராகப், பிரதி அதிபராக நீண்டகாலம் வெளிமாவட்டங்களிலும் அதிபராக யாழ்ப்பாணத்தின் வேறு பாடசாலைகளிலும் சேவையாற்றினாலும், கல்லூரியின் பழைய மாணவியான இவர் இலகுவாக எமது கல்லூரியுடன் இணைந்து செயற்படத் தொடங்கினார்.

ஆசிரியர்களுடன் கண்ணியத்தடனும், இனிமையாகவும் பழகும் இவர் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை இலகுவாக ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்வார். கல்லூரியின் மகுட வாசகமான "It ought to be beautiful I live here" என்பதற்கமைய கல்லூரியை தூய்மையாகவும் அழகாகவும் பேண வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடையவர். இதற்காக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் மிகுந்த கண்டிப்புடன் நடந்து கொள்வார். தூய்மையுள்ள இடத்தில் எப்பொழுதும் 'அழகும்', 'இறைமையும்' சிறக்கும் என்பது மூத்தோர் வாக்கு. அத்துடன் சரஸ்வதி வாழும் ஒரு கல்விக்கூடம் தூய்மையாகவும், அழகாகவும் திகழ வேண்டியது அவசியமல்லவா?

மேலும் இவர் கல்வித் திணைக்களத்துடனும், பழைய மாணவிகள் சங்கங்களுடனும் நல்லுறவைப் பேணி பாடசாலைக்குத் தேவையான உதவிகளை பெற்றுக் கொள்வதிலும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதிலும் முன்னின்று செயற்படுபவர். தற்பொழுது எமது கல்லூரியில் நிமிர்ந்து நிற்கும் தொழில்நுட்ப ஆய்வுகூடம், "United state pacific Command (USPA COM)" இனால் நிர்மாணிக்கப்பட்ட 3மாடிக் கட்டிடமும், மலசல கூடத் தொகுதியும் (Wash rooms), பழைய மாணவிகள் சங்கங்களினால் நிர்மாணிக்கப்பட்ட பவளவிழா மண்டபமும் இதற்கு சான்று பகர்கின்றன. இவை தவிர கல்லூரி மாணவிகளின் பெற்றோரிடமிருந்தும் கல்லூரிக்குத் தேவையான உதவிகளை பெற்றுக் கொள்வதில் வல்லவர். அத்துடன் கல்லூரியின் செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுப்பதற்காக InterCom வசதி, மாணவர்கள், ஆசிரியர்கள் நவீன கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் வகையில் Smart Classrooms என்பவற்றையும் ஏற்படுத்தினார். மேலும் கல்லூரியின் உள்ளக கட்டமைப்புக்களான கல்லூரியின் முன்வாயில், அதிபர் அலுவலகம், அதன் மேற்தளம், ஆய்வு கூடங்கள், உள்ளக போக்குவரத்துப் பாதைகள் போன்றன மாற்றங்களுக்கும் புணரமைப்புக்களுக்கும் உள்ளாகி புதுவடிவம் பெற்றன. இவர் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Mrs. Mimalathevi Vimalanathan
(2012- Still)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முன்னேற்றத்திலும் அக்கறையுடன் செயற்படுவதினால் கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரித்ததுடன் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் மாணவிகள் சாதனை படைத்து வருகின்றனர். இவரது காலத்திலேயே எமது கல்லூரி பவளவிழாவைக் கொண்டாடுவது மகிழ்விற்குரிய விடயமாகும்.

இவ்வாறாக இதுவரை காலமும் எமது கல்லூரியின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட பெரியோர்களினதும், அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் நோக்கும் பணியும் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு எமது கல்லூரி அன்னை நூற்றாண்டு கடந்து வாழ்வாள் என்பது திண்ணம்.

**செல்வி. நிர்மலா சோமசுந்தரம்**
**பழைய மாணவி, ஆசிரியை**
**யாழ் இந்து மகளிர் கல்லூரி**

## உசாத்துணை நூல்கள்


| | |
|---|---|
| 1. திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் | "யாழ் இந்து மகளிர் கல்லூரி பற்றி ஒரு வரலாற்று நோக்கு" யாழ் இந்து மகளிர் பொன்விழா மலர் 1993. ப. 24 |
| 2. மேற்படி | ப.24 |
| 3. திருமதி. திலகவதி யோகநாதன் | "பொன்விழாக்காணும் கல்லூரிக்கு மெருகூட்டிய முன்னாள் முதல்வர்கள்" யாழ் இந்து மகளிர் பொன்விழா மலர் 1993 ப.29 |
| 4. திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப.24 |
| 5. திருமதி. திலகவதி யோகநாதன் | முற்சுட்டியது ப-30 |
| 6. திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப-24 |
| 7. அதிபரின் அறிக்கை | சக்தி 1960-1961, ப.24 |
| 8. Dr. V.Yoganathan | Board of Directors of Jaffna Hindu College and Affiliated Schools. Centenary Souvenir Jaffna Hindu College 1890-1990, P. 77 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 9. திருமதி. சி. பொன்னம்பலம் | " கடந்தகால நினைவுகள்" யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியலாயம். வைரவ விழா மலர் 1968-1969, ப. 16 |
| 10. திருமதி. ஞானேஸ்வரி சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப.25 |
| 11. மேற்படி | ப.24 |
| 12. மேற்படி | ப.24 |
| 13. மேற்படி | ப.25 |
| 14. திருமதி ம. அருணாசலம் | "பழைய மாணவர் சங்க அறிக்கை" யாழ் இந்து மகளிர் கல்லூரி வெள்ளி விழா மலர், 1968, ப. 46 |
| 15. திருமதி திலகவதி யோகநாதன் | முற்சுட்டியது ப.31 |
| 16. Miss K.Manicavasager | "The Jaffna Hindu Ladies' College, Carnival - As the Editor Sees it" "The Jaffna Hindu Ladies' College Carnival Souvenir, 1954, P.7 |
| 17. Miss K.Manicavasager | முற்சுட்டியது ப.7 |
| 18. அதிபரின் அறிக்கை | சக்தி, 1960-1961, ப.7 |
| 19. மேற்படி | ப.7 |
| 20. Dr. V.Yoganathan | முற்சுட்டியது ப.78 |
| 21. திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் | முற்சுட்டியது ப.27 |
| 22. திருமதி திலகவதி யோகநாதன் | முற்சுட்டியது ப.32 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவக் குழு



## மலர்க் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விசாரா உத்தியோகத்தர்கள்



## பாடசாலை அபிவிருத்திக் குழு



## பழைய மாணவிகள் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார் அவ்வை. அந்த அமுத மொழிக்கு இலக்கணமான மனிதர்களாகிய நாங்கள் ஏனைய உயிர்கள் மீது நேயத்தை பொழிய வேண்டியது அவசியமானதாகும். இறைவன் எமக்கு ஆறறிவைத் தந்துள்ளான். எதுநல்லது எதுகெட்டது என அறிந்து அதன் ஒழுங்கிலேயே வாழக்கூடியவர்கள் நாங்கள். ஆதலால் அன்பு நெறியை எமது வாழ்விற்கு அடித்தளமாக்க வேண்டியது முக்கியமானது.

சிறு வயதிலேயே ஆரோக்கியமான விழுமியங்களை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமானது. இரக்கம், கருணை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, செய்நன்றி அறிதல் போன்றவற்றோடு சாந்தி சமாதானமாக வாழ ஊன்றுகோலாக அமைவது அன்பு என்றால் மிகையில்லை. கருவிலிருந்து கல்லறை வரை அன்புநெறி விரிந்து செல்ல வேண்டும். இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்களாக உலகம் போற்றும் உத்தமர்களாக பரிணமிப்பதற்கு உயிர்களிடத்து அன்பை பொழிய வேண்டியது இன்றியமையாதது.

உலகில் உள்ள அத்தனை சமயங்களும் மொத்தமாக சொல்லும் சுத்தமான உண்மை அன்பு நெறியிலே வாழுங்கள். சைவ சமயத்தில் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு கூறும் பெரிய புராணம் உலகில் உள்ள அத்தனை உயிர்கள் மீதும் அன்பை செலுத்த வேண்டியதனுடைய தார்ப்பரியத்தை சித்தரிக்கின்றது. பரமசிவன் மனிதர்களுக்கு மாத்திரமல்லாது ஏனைய ஜீவராசிகள் மீதும் அன்பையும் கருணையையும் அள்ளிப் பொழிந்தார். இதனை 'பன்றிக்குப் பால் கொடுத்த பரமசிவன்' என்ற கூற்றின் ஊடாக நாம் சான்றுபடுத்த முடியும். இயேசுபிரானுடைய வாழ்வு, அவர்தம் போதனை அன்பு நெறிக்கு அணிகலனான ஆணிவேராக நிற்கின்றது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டு என்றார் இயேசு. அன்பினுடைய தத்துவார்த்த நிலையைத் தனது வாழ்வியல் மூலமாக ஏசுபிரான் உலகிற்கு பறைசாற்றி இருக்கின்றார்.

முகமது நபிகளுடைய வாழ்க்கைப் பயணம், அவர்தம் போதனைகள் யாவை? தனக்கு கிடைத்த உணவு பொருட்களை அன்பின் மிகுதியினால் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொண்டார் நபி. அன்பினுடைய தத்துவார்த்த பின்னணியை தனது வாழ்க்கை மூலம் எடுத்துக் காட்டியுள்ளார். புத்த பெருமான் துறவு பூண்டு ஒழுகும் காலத்தில் மனிதர்களுக்கு மட்டுமல்ல ஏனைய உயிர்கள் மீதும் அளவுகடந்த நேயத்தை வெளிப்படுத்தினார் அல்லவா? இதே போல உலகில் உள்ள எல்லா சமய வரலாறுகளும் அன்பை அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்றால் மிகையில்லை. மனிதர்கள் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் அன்பு நெறியிலே வாழ வேண்டும் என பாதை வகுத்து கட்டியம் கூறுபவையாக சமயங்கள் விளங்குகின்றன.

உலகில் வாழ்ந்த புலவர்களும், புரவலர்களும் விட்டுச் சென்ற தடயங்களாக அன்புநெறி விளங்குகின்றது. வள்ளுவப்பெருந்தகை தான் அன்பு நெறியிலே வாழ்ந்து காட்டியதோடு உலகில் உள்ள அத்தனை மனிதர்களும் எப்படி அன்பு நெறியில் வாழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என அன்புடமை என்னும் அதிகாரம் மூலம் அன்பின் முக்கியத்துவம், அதன் வழி ஏற்படும் குற்றம், இம்மை மறுமைப் பயன் போன்றவற்றை அழகாகவும் ஆழமாகவும் விளங்கிச் சென்றார். அன்பின் உயரிய தத்துவார்த்த பின்னணியை நாம் சங்க இலக்கியங்களில் தரிசிக்கலாம். விபுலானந்தர் உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என இறைவனுக்குக்கூட அன்பான மனமே தேவையானது என மொழிந்தார்.

எனவே பண்டைய புலவர்களின் இலக்கியங்களும் அன்பை ஏற்றிப் போற்றுவனவாக இருக்கின்றன. நாம் இந்த தரணியிலே தலைகுனியாது தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் பாதை காட்டி இருக்கின்றார்கள். அன்பால் இன்பம் பெருகும். அன்பால் துன்பம் தூர விலகும். உயிர்களின் உயர்வுக்கு உறுதுணையானது அன்பு. அன்புடையார் எல்லாம் உடையார் அன்பு எனும் பண்பிற்கு ஈடு ஏது இணையேது.

பி.கஜனி
6A

செய்யமுடியும் என்று நம்பு – ஒன்றைச்
செய்யமுடியும் என்று நீ முழுதாய்
நம்பும் போது, உன்மனம் அதைச்
செய்து முடிக்கும் வழிகளைக் கண்டறியும்
ஒருகாரியத்தில் வைக்கும் நம்பிக்கை
அந்தக் காரியத்தை முடிக்கும்
வழியையும் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களை மேம்படுத்துவோம்

எண்ணம், சொல், செயல் என்கிற திரிகரணங்களையும் தூய்மைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சொல்லும் செயலும் ஆரோக்கியமானதாக அமைய எண்ணம் அடிப்படையானது. ஆதலால் எமது மனதினை ஆரோக்கியமான திசையிலே நெறிப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது. மாணவர்களாகிய நாம் சின்ன வயதிலேயே ஆரோக்கியமான நேரிய எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். அந்த வகையிலே ஒரு மனிதனுடைய வளர்ச்சியிலே பள்ளிப்பருவம் மிக முக்கியமானது. அந்த பருவத்திலேயே சமூகத்திற்கு ஏற்புடைய நல்ல சிந்தனைகளை வளர்த்து எடுக்க வேண்டியது மிக முக்கியமானதாகும். நாம் கூடாதவர்களின் கூடாரங்களாக மாறிவிடக்கூடாது. நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இந்த தரணியிலே வலம் வருவதற்கு மனத்தூய்மை மிக மிக முக்கியமானது.

தமிழ் மொழியில் தோன்றிய அத்தனை உயரிய இலக்கியங்களும் எண்ணங்களை மேம்படுத்துவதற்கு வழிகாட்டியாக இருந்ததை யாராலும் மறுக்க முடியாது. இதிகாசங்கள் என்று பேசப்படுகின்ற மகாபாரதம், இராமாயணம் போன்ற இலக்கியங்களிலே எண்ண மேம்பாட்டிற்கான தடயங்களை சுட்டிப்பாக உணர முடிகிறது. ராமனுடைய நடத்தைக் கோலம், லட்சுமணனுடைய சகோதர பாசம், குகன் இராமன் நட்பு, பரதன் சத்துருக்கனின் அறம் போற்றும் பண்பு போன்ற பாத்திரங்களினூடாக எண்ணங்களை மேம்படுத்தி நல்லவர்களாக வாழ்வதற்கு இலக்கிய ஆசிரியர்கள் வழிசமைத்திருக்கிறார்கள். மகாபாரதத்திலே பாண்டவர்களினூடாக எண்ண மேம்பாட்டின் செயல் ஒழுங்கினை அவ் இலக்கிய ஆசிரியர் பறைசாற்றி இருக்கிறார்.

உலக இலக்கியம் எனப் போற்றி ஏற்றப்படுகின்ற திருக்குறளில் திருவள்ளுவர் எண்ண மேம்பாட்டின் விளைவுகளை படம் பிடித்துக் காட்டுகிறார்.

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனையது உயர்வு"

அதாவது பொய்கையில் தாமரையுடைய தண்டின் நீளம் அதிலுள்ள நீரின் அளவிற்கேற்ப அமையுமாம். அதே போல மாந்தரினுடைய மனதிலேதான் உயர்வு தங்கியிருக்கிறது.

இது மட்டுமல்ல

> "வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற"

மன உறுதி எனப்படுவது ஒரு செயலைச் செய்வதற்குரிய உறுதியேயாகும். மற்ற உறுதிகள் எதுவும் சிறந்தனவாகா. உலக இலக்கியமாக வலம்வரும் பொய்யாமொழியாரின் கூற்று இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞனாக விளங்கிய மகாகவி பாரதியார்

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவை எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்" என்றார்.

இதன் உட்கிடையான சாராம்சம் எண்ணமேம்பாடு என்பது வெளிப்படை. இதேபோல இந்து சமய வரலாற்றிலும் எண்ண மேம்பாட்டிற்குரிய ஆதாரங்களை தாராளமாக தரிசிக்கமுடியும். நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறும், அவர்கள் பாடிய பக்திப்பாமாலைகளும் இதற்குச் சான்று பகரும். "ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும் கங்கை வாழ் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என அப்பர் சுவாமிகள் எண்ண மேம்பாட்டினை பறைசாற்றி நிற்கின்றார். கண்ணப்ப நாயனாருடைய வரலாறும், திருக்குறிப்புத்தொண்டநாயனாரின் வரலாறும் இன, மத, சாதி, சமயங்களைத் தாண்டி எண்ண மேம்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. இயேசுநாதருடைய வரலாறும் சரி, கௌதம புத்தரின் வாழ்க்கை பயணமும் சரி, முகமது நபிகளின் சரிதமும் சரி, ஏன் உலகில் உள்ள எல்லா சமயங்களினுடைய வரலாறும் எண்ண மேம்பாட்டினையே ஆணிவேராக கொண்டுள்ளன.

உலகிலே தோன்றிய தலைசிறந்த தலைவர்கள் எணண மேம்பாடு என்ற பாலத்தைக் கடந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், இந்திய சுதந்திரத்தின் பிதா மகாத்மா காந்தி, தென் ஆபிரிக்காவின் விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா, அணு விஞ்ஞானி அப்துல் கலாம் போன்ற உயரிய தலைவர்கள் எண்ண மேம்பாட்டு தளத்திலேயே தங்களுடைய பணியை ஆற்றியிருக்கின்றார்கள். அவர்கள் உலகத்தலைவர்களாகப் பரிணாமம் அடைவதற்கு எண்ண மேம்பாடே காரணமாக அமைந்துள்ளது. இவர்கள் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்க்கைக் கோலத்தை நமக்கு கற்பித்தவர்கள்.

நாம் மனிதர்கள், ஆறறிவு படைத்தவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் ஆறாவது அறிவை வளப்படுத்தி எண்ண மேம்பாட்டினை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவை. இன்றைய இளைஞர்களிடையே எண்ண மேம்பாடு பற்றாக்குறையாக உள்ளது. கட்டறுந்த பட்டம் போல் அவர்கள் தடுமாறி நிற்பது வேதனைக்குரியது. சமூக விரோத செயல்கள் போன்ற அத்தனை நெறிபிறழ்வான செயல்களுக்கும் எண்ண மேம்பாடு அடையாமையே காரணம். நாம் நாளைய உலகில் தடம் பதிக்க உள்ளவர்கள். பல பணிகளிலும் பரிணமிக்க உள்ளவர்கள். நாம் எடுத்துக்காட்டானவர்களாகவும், முன்மாதிரியானவர்களாகவும் இந்த சமூகத்தில் விளங்க வேண்டியது முக்கியம். இதனை உணர்ந்து மாணவர்களாகிய நாம் எண்ண மேம்பாடு என்னும் ஒளியின் வழியில் உயர்வடைவோம்.

அருணா சத்தியன்
8 A





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிப் போகலாம் இந்து மகளிர் கல்லூரிக்கு

யாழ்ப்பாண பேருந்து நிலையத்துக்கு வந்து விட்டீர்களா?
நகரத்தின் கடைத்தெரு இருக்கும்
காங்கேசன் துறை வீதி வழியே நடந்து வாருங்கள்
நாற்சந்தி பிரியும் நேராக வந்தால்
செந்தில் கதிர் வேலாயுத சுவாமியைக் கண்டு தலைவணங்கி
சைவமும் தமிழும் ஓங்க பிரசங்க மழை பொழிந்த நாவலரின்
சிவன் கோயில் ஒல்லாந்தர் காலத்தில்
பசுபதிச் செட்டியாரால் கட்டி உவந்தளிக்கப்பட்ட
வண்ணைச் சிவன் கோயில் வானுயர்ந்த கோபுரத்தை
வணங்கிப் பணிந்து
நேராய் நடந்து வருவீர்
நிழல் மரங்களற்று நிறைந்த கடை வீதி தாண்டி
வரும் மனோகராத் திரையரங்கில்
புதுப்படங்கள் பொலிவு பெறும்
முன்னாலே கற்பகப் பிள்ளையார்
களிப்புடன் வீற்றிருப்பார்
சைவத்தமிழ் பிள்ளைகளுக்காய் சலியாத பணி செய்த
நாவலர் பெருமானின் பாடசாலைக்கு மதிப்பளித்து
நேராய் நடந்து வருவீர்
பன்றிக் கோட்டுப் பிள்ளையார் பார்த்திருப்பார் அவ்வழியே
அவர்பாதம் பணிந்து
அச்சகங்கள் நிறைந்த அவ்வீதி வழியே வந்தால்
தித்திக்கும் நீர்கொண்ட ஊருணிக் கிணறு தாண்டி
ஆழ வேரூன்றி அகலக்கிளைப் பரப்பும் அறிவுக் கோயில்
யாழ்இந்துக் கல்லூரி வாசல் கண்டு
நிற்காமல் நேராய் நடந்து வருவீர்
சிவலிங்கப் புளியடிச் சந்தி தாண்டி
வாகனங்கள் அதிகமோடும் சைக்கிள்
வண்டிகளும் பேருந்தும் பார ஊர்திகளும்
பவனிக்கும் சாலையோரம் வந்தால்
சாப்பாட்டுக்கடை, மரக்காலை தாண்டிவர
தட்டாதெருச்சந்தி வரும்
வலதுகைப் பக்கமாய் திரும்பி
நல்லூரான் கோயில் போகும் அரசடி வீதியால்
நேரே வந்திடுவீர்
வீடுகளும் கடைகளும் வீதியிலே இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து ஆரம்பப் பாடசாலைத் தெருப்பக்கம் திரும்பாமல்
நேராக வந்தால் பிறவுண்வீதி ஊடறுக்கும்
ஓரிடமும் திரும்பாமல் நேராக வாருங்கள்
ஓங்கி உயர்ந்த பச்சைப் பசுந் தோற்றம் கொண்டு
பாங்குடை மகளிர்படிக்கின்ற பள்ளி தமிழ்ப்
பண்பாடும் சைவமும் தழைத்தோங்கும் பள்ளி
ஓங்கிப் புகழ் பரப்பும் உன்னதமான பள்ளி
இந்து மகளிர் கல்லூரி முகப்புத் தெரியும்
உள்ளே வந்தால்
பச்சைப் பசேலென்று காட்சி தரும் கலைக்கூடம்
பாங்குடை நிழல் மரங்கள் பக்கமெங்கும் குடை விரிக்க
ஓங்கிய கட்டடங்கள் உள்ளிருக்கும் வகுப்பறைகள்
பெண்கள் உயர்வு சொல்லும் பெருமைமிகு கல்லூரி
எங்கும் புகழ் பரப்பும் எங்கள் கல்லூரி காண்பீர்!

க. தெய்வீகா
12 A கலைப்பிரிவு

நாம் எதிர்நோக்கும்
பிரச்சனைகள்
எல்லாவற்றையும்
மாற்ற முடியாது.....
எதையும்
எதிர்நோக்கா விடில்
மாற்றங்களே இருக்காது.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Medals - 2016



**Archchana Kanakalingam**
Best All Round Student - 2016



**Arunthathie Satkunananthasarma**
GCE O/L - 9A , Scholastic Excellence
in English, Best performance in ICT - 2016



**Yosala Puveendran**
GCE O/L - 9A - 2016



**Tilaksana Sithivinayagam**
GCE O/L - 9A - 2016



**Sunmukajini Ketharanathan**
GCE A/L - 3A, Commerce, 2016



**Siyana Sivanathan**
GCE A/L - 3A, Commerce, 2016



**Kabishka Tharmathas**
GCE A/L - 3A, Commerce, 2016



**Tharsika Amirthalingam**
GCE A/L - 3A, Commerce, 2016



**Tharsana Kanesalingam**
GCE A/L - 3A, Commerce, 2016



**Thanusha Sampasivam**
GCE A/L - 3A, Commerce, 2016



**Abinuka Sivananthan**
GCE A/L - 3A, Commerce, 2016



**Biranavi Sukumar**
GCE A/L - 3A, Commerce, 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Medals - 2016



**Saruniya Singaraja**
GCE A/L - 3A, Commerce, 2016



**Vishali Kankesan**
GCE A/L - 3A, Commerce, 2016



**Fathima Rismiya Hameen Sathique**
GCE A/L - 3A, Arts, Social Science Competition
National Level - Gold Medal - 2016



**Pranavi Sivarasa**
GCE A/L - 3A, Arts, 2016



**Anusiya Sivalingam**
Scholastic Excellence in ICT - GCE O/L - 2016



**Thulashika Balachandran**
Best Performance in ICT - GCE O/L - 2016



**Thayalini Suntharamoorthy**
Scholastic Excellence in Mathematics
GCE O/L - 2016



**Subangini Logathas**
Scholastic Excellence in Tamil - GCE O/L - 2016



**Selvarajini Selvarathinam**
Tamil Oration - 2016



**Isebela Paramsothi**
National Level Art - 2nd Place, 2016



**Bernadeen Terenciya Mahendran**
English Oration 2016 - Gold Medal
English Copy Writing - 2017, National Level Participation



**Harini Sripathan**
English Oration - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Medals - 2017



**Thamilini Preemruban**
Best All Round Student - 2017



**Kawshika Mahendran**
GCE O/L - 9A, Scholastic Excellence in Mathematics, Best Performance in ICT - 2017



**Priyanga Pusparaj**
GCE O/L - 9A, 2017



**Sanjika Sundaralingam**
GCE O/L - 9A, Best Performance in ICT - 2017



**Keerthana Sivarasa**
GCE O/L - 9A, 2017



**Nirosi Thevarasa**
GCE O/L - 9A, 2017



**Bashna Vijayakumar**
GCE O/L -9A,
Scholastic Excellence in Tamil - 2017



**Sangkavika Kanesalingam**
GCE O/L - 9A, 2017



**Jasveena Arulnathan**
GCE O/L - 9A, 2017



**Anjelin Alista Albert Pushparajah**
GCE O/L - 9A, 2017



**Vanathi Senkathirchelvan**
Scholastic Excellence in ICT & English, GCE O/L - 2017,
English Dictation National Level Participation - 2017



**Laxsana Thayaparan**
GCE A/L - 2AB, Commerce, 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Medals - 2017



Sulojana Yogenthiran
GCE A/L - 3A, Commerce, 2017



Jehajini Jehaseelan
GCE A/L - 3A, Commerce, 2017



Thirumagal Thayaparan
GCE A/L - 3A, Commerce, 2017



Banusa Sinnarasa
GCE A/L - 3A, Commerce, 2017



Nilaxshini Gnanathas
GCE A/L - 3A, Commerce, 2017



Sukirtha Sivasubramaniam
GCE A/L - 3A, Arts, 2017



vijayanila Kantharuban
GCE A/L - 3A, Arts, 2017



Navanja Pathmanathan
GCE A/L - 3A, Arts, 2017



Thenuka Thangarasa
GCE A/L - 3A, Arts, 2017



Karthikayini Selvarasa
GCE A/L - 3A, Arts, 2017



Dilaxshiga Aravinthan
GCE A/L - 3A, Arts, 2017



Dileesiya Nivakaran
GCE A/L - 2AB, Arts, 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Medals



Nivetha Natheesan
English Copy Writing - 2017,
National Level 1st Place



Rojitha Vijayarasa
Tamil Criticism,
National Level Participation - 2017



Sageetha Abdul Saleem
Tamil Oration - 2017



Bajeena Jegatheeswaran

**National Level Winner - 2018**

Weight Lifting,Under 17, 1st Place



Tharankini Partheepan

**National Level Winner - 2018**

Weight Lifting,Under 17, 2nd Place

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின் கலைகள் – தேசிய மட்டம்



**Nivethana Prabaharan**
Solo Dance - 1st Place - 2016



**Premini Sriskantharaja**
Carnatic Music - 2nd Place - 2016



**Juvalaxshi Mohanathas**
Solo Dance - 1st Place - 2017



**Subanu Somasuntharasarma**
Solo Dance - 1st Place - 2017



**Suwasthika Santhirakumar**
Veena - 2nd Place - 2017



**Manasvini Somasuntharasarma**
Veena - 2nd Place - 2017



**Abisha Naguleswarasarma**
Violin - 2nd Pace - 2017



**Kaneshajini Srinivasan**
Violin - 2nd Place - 2017



**Kanavarshini Sivaneswaranathan**
Miruthankam 1st Place - 2017



**Sarumathi Velmaran**
Miruthankam 1st Place - 2017



**Kamshika Mohan**
Art - 1st Place - 2017



**Nushka Pervin Nafar**
Art - 4th Place - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சோடு சில நினைவுகள்

ஒவ்வொருவருக்கும் தான் பெற்ற கல்வியே வாழ்வின் அடிநாதமாக அமையும் வல்லமையை பெற்றுத் தருகிறது. வாழ்வின் அந்தம் வரை பயணிக்கும் எவருடைய வாழ்விலும் பாடசாலை நாட்களின் ஞாபகங்கள் மட்டும் மறையாது பசுமையாகவே பதிந்து போயிருக்கும். கவலை என்பதை அறியாத காலங்கள் அவை. யாழ் இந்து மகளிர் கல்லூரி தனது பவள விழாவை கொண்டாடும் இந்த நாட்களில் இக்கல்லூரியுடனான எனது நினைவுகளை மீட்டிப் பார்க்கிறேன். 1963 இல் இருந்து 1968 வரையான காலங்கள் என் வாழ்வில் மறக்க முடியாத பல இனிய நினைவுகளை தந்திருக்கிறது.

ஒரு கல்லூரி வளாகம் என்பது வெறும் கட்டிடங்களால் மட்டுமேயானதல்ல. அறிவுக் கண்ணைத் திறப்பதற்கப்பால் சமூகத்தை எதிர்கொள்ளும் மனவலு தருவதற்கான விதை நிலம். எத்தனையோ ஆசிரியர்களால் தமது விசுவாசம் சேவை அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கொடுத்து உருவாக்கப்பட்ட பயிற்சிக்கூடம். பத்து வயதிலிருந்து 15 வயது வரையான என் மாணவப் பருவத்தை பகிர்ந்துகொண்ட கலாசாலையும் இதுதான். கல்லூரியின் கட்டடங்கள், பிள்ளையார் கோவில், பக்கத்தில் சடைத்து நின்ற வில்வமரம், நூலக அறை, வகுப்பறைக்கு அருகே நின்ற நெல்லிமரம், மாமரங்கள், நீள நீளமான விடுதியின் படுக்கை மண்டபங்கள் எல்லாவற்றையும் மறுபடி மறுபடி நினைக்கத் தோன்றுகிறது.

அப்போது திருமதி விமலா ஆறுமுகம் அவர்கள் அதிபராக இருந்தார். பெற்றோரை பிரிந்து வந்து விடுதியில் தங்கிப் படிப்பவர்கள் என்ற வகையில் எம்மோடு எப்போதும் கனிவாக நடந்து கொள்வார். அவர் குரல் உயர்த்திப் பேசி நான் பார்த்ததில்லை. விடுதியில் தண்ணீர் வராத நாட்களில் அருகாமையில் இருந்த அவர் வீட்டுக்குச் சென்று குளித்து வந்திருக்கிறோம். சில நேரங்களில் சுடச்சுட தேநீர் கூட கிடைக்கும்.

வருடத்தில் இரண்டு அல்லது மூன்று படங்கள் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கும். திருவிளையாடல், கந்தன் கருணை, சரஸ்வதி சபதம், கர்ணன் படங்கள் பார்த்திருக்கிறோம். பக்தி படங்களும் புராணப் படங்களும் தான் முன்னுரிமை. அவற்றைத் தவிர சிவாஜி, எம் ஜி ஆரின் படங்கள். அதுவும் நல்ல படங்கள் என்று நாலைந்து பேர் சொன்னால் மட்டுமே போய்ப் பார்க்க அனுமதிப்பார். நான் மிகவும் விரும்பி நேசித்த அதிபர் அவர்.

விடுதி மாணவர்களுக்கு அப்போது பார்வதி அக்கா மேற்பார்வையாளராக இருந்தார். கண்டிப்பும் கனிவும் அவரது இயல்பு. எந்நேரமும் கையில் ஒரு பிரம்பு வைத்திருப்பார். ஆனால் யாரையும் அவர் நோக அடிப்பதில்லை. அவர் மீதுள்ள பயத்தாலேயே எல்லோரும் ஒழுங்காக நடப்பார்கள்.

விடுதியில் தங்கிப் படிப்பவர்கள் எல்லோரும் பல பிரதேசங்களிலிருந்தும் வந்தவர்கள். வெவ்வேறு குடும்ப அமைப்பு வெவ்வேறு பழக்கவழக்கங்கள் என்று தனித்தனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுப் பறவைகளாய் வாழ்ந்த வாழ்க்கை அது. ஒருவருக்கொருவர் கை கொடுத்து ஒருவரை ஒருவர் அரவணைத்து நேசமுடன் வாழப் பழகிய இடம் அது. விடுதி வாழ்க்கை எத்தனையோ விஷயங்களை எமக்கு கற்றுத் தந்திருக்கிறது. நேரத்தை கடைபிடித்தல், அடுத்தவர் மனங்களை மதித்து நடத்தல், சக மனிதர்களை நேசித்தல் என்று மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அத்தனை நல் இயல்புகளையும் நமக்குச் சொல்லித் தந்தது. எத்தனையோ ஆசிரியர்களிடம் கல்வி பயின்றிருக்கிறோம். இன்றும் பலர் இருக்கிறார்கள். ஆங்கிலம் என்றாலே அஞ்சி ஓடும் நிலையில் இருந்த எமக்கு அதை விரும்பி படிக்கும் அளவுக்கு மாற்றியவர் திருமதி. விஸ்வநாதன் அவர்கள். மாணவர்களுக்கு பயமுறுத்தாமல் கற்பிக்கும் வித்தை தெரிந்தவர். எட்டாம் வகுப்பில் அவரிடம் ஆங்கிலத்தை விருப்பத்தோடு படித்தது நினைவில் இருக்கிறது.

அதே எட்டாம் வகுப்பில் எமக்கு தமிழ் பாடம் எடுத்தவர் திருமதி. சொக்கலிங்கம் அவர்கள். அவர் தமிழ் சொல்லித்தரும் அழகே தனி. அவர் பாடம் நடத்தும் போது அவர் முகத்தையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்போம். அந்தப் பன்னிரண்டு வயதில் தமிழையும், கற்று தந்தவரையும் ரசித்த எமக்கு அதைத் தாண்டி தமிழை ஆழமாய் நேசிக்க வைத்தவர் திருமதி. முத்துத்தம்பி அவர்கள். ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்களில் எமக்கு தமிழ் ஆசிரியையாக இருந்தவர். எனது வாசிக்கும் ஆர்வத்தை ஊக்குவித்து வளர்த்தவர். தமிழின் இனிமையையும் அதன் வசீகரத்தையும் அந்த வயதில் எனக்கு மனதில் உறைய வைத்தவர். மாணவர் மன்றம் நடக்கும்போது நான் எழுதும் பேச்சுக்களையும் சிறுசிறு நாடகங்களையும் பார்த்து திருத்தங்கள் செய்து தருவார். அவரால் தான் எழுத வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் முளைவிட்டு வளர்ந்து இருக்கிறது.

எனது விருப்பத்துக்குரிய இடமாக கல்லூரி நூலகம் இருந்திருக்கிறது. எமக்கு வாரத்தில் இரண்டு பாட நேரம் நூலக வாசிப்புக்காகத் தரப்பட்டது. இந்த இரண்டு பாட நேரத்தையும் வாசிப்புக்காக முழுவதுமாக பயன்படுத்துவேன். அந்த நேரத்தில் கல்கி வெள்ளிவிழா ஆண்டையொட்டி நடந்த நாவல் போட்டியில் வெற்றி பெற்ற நாவல்களான முள்ளும் மலரும், கல்லுக்குள் ஈரம், மணக்கோலம் எல்லாம் கல்கி இதழில் தொடராக வந்து கொண்டிருந்தது. எமக்கு வாசிக்கக் கிடைக்கும் பாட நேரத்தில் போட்டி போட்டுக் கொண்டு அந்தவார அத்தியாயங்களை தொடராய் படிப்போம். என் வகுப்பில் படித்தவர் என்னோடு அன்பாக பழகியவர் தமிழரசி. அவர் வேந்தனார் அவர்களின் மகள். தந்தையைப் போலவே இலக்கியத்திலும் வாசிப்பிலும் விருப்பமுள்ளவர். நாம் படிக்கும் கதைகள் பற்றி எமக்குள்ளே நிறைய கதைத்திருக்கிறோம். பின்னாளில் அவரது மறைவுச் செய்தியை அறிந்து மிகவும் கவலைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் நூலகத்தில் பத்தாம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு புத்தகங்களை வெளியே எடுத்துச் சென்று வாசிக்க அனுமதி இல்லை. ஆனாலும் நூலக பொறுப்பாளராக இருந்த புனிதம் அக்காவிடம் புத்தகம் தரும்படி கேட்டுக் கொண்டிருப்பேன். என் கெஞ்சல் தாளாமல் வெள்ளி மாலை எடுத்துப்போய் வாசித்துவிட்டு திங்கள் காலை கொண்டுவந்து தந்து விடும்படி சொல்லி புத்தகம் தருவார். அந்த நாட்களில்தான் நந்தவனம், பொங்கிவரும் பெருநிலவு, பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் என்று நிறைய நாவல்கள் வாசித்தேன். சோமு எழுதிய நந்தவனம் நாவலில் முதன்மைப் பாத்திரம் தாமரைச்செல்வி. அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் ஏற்பட்ட விருப்பத்தினால் தான் எனக்கு அதே பெயரை புனை பெயராகத் தெரிவு செய்தேன். புத்தகங்களைப் பார்த்தாலே உலகம் மறந்து போகும் மனநிலையை அந்த வயதிலேயே உணர்ந்தேன்.

எங்கள் கல்லூரி கல்வியை மட்டுமல்ல பண்பாடு, ஒழுக்கம், கலாசாரம் என்பவற்றையும் போதிக்கும் ஒரு போதிமரமாகவே திகழ்ந்து வந்திருக்கிறது. இன்றைக்கும் ஈரம் காயாத நினைவுகளாய் எத்தனையோ நிகழ்வுகள் மனதோடு பதிந்து போயிருக்கிறது. எதிர்காலம் பற்றிய எந்தக் கவலைகளும் இல்லாமல் சுட்டித் தனமும் குறும்புமாக வளைய வந்த நாட்கள் அவை. தடியால் எறிந்து மாங்காய் விழுத்தி சாப்பிட்டு விட்டு அதற்கான தண்டனையாக முழங்காலில் நின்றிருக்கின்றோம். படிப்புக்குரிய இரவு நேரத்தில் மதிலுக்கு அருகாக தடதடவென்று ஓடும் ரயிலில் பயணிக்கும் முகமறியா மனிதர்களுக்கு கை காட்டியதற்காக கதிரை மேலே ஏறி நின்றிருக்கின்றோம். அதிகாலை எழும்ப மனமின்றி படுத்திருந்துவிட்டு பார்வதி அக்காவின் காலடிச்சத்தம் கேட்டு அலறி அடித்துக் கொண்டு குளிப்பதற்காக ஓடி இருக்கிறோம். எது தவறு எது குற்றம் என்று தெரியாமலேயே அவற்றை குழந்தைத் தனத்தோடு செய்துவிட்டு தண்டனை பெறும் போது எம்மை நாமே திருத்திக் கொள்ள அதை ஒரு சந்தர்ப்பமாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

எனக்கு எப்போதுமே கதைகளைப் படிப்பது மட்டுமல்ல அந்தக் கதைகளை பாவனையோடு மற்றவர்களுக்கு சொல்வதிலும் விருப்பம் உண்டு. நாவல்கள் மட்டுமல்ல பார்க்கும் திரைப்படங்களையும் அப்படியே காட்சி காட்சியாய் சொல்லுவேன். அதைக் கேட்பதற்கு ஒரு சிறு கூட்டம் என்னைச் சுற்றியிருக்கும். ஒரு கதை சொல்லியாக நான் உருவானதன் ஆரம்பமாக அந்த நிகழ்வுகள் இருந்திருக்கலாம். அன்றைய மாணவப்பருவ நாட்களின் இனிமையான நினைவுகள் இன்றளவும் மறக்க முடியாமல் மனம் முழுவதும் நிரம்பிப்போயிருக்கிறது.

68 ஆம் ஆண்டு கல்லூரியை விட்டுப் பிரிந்த நான் 2004 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 36 வருடங்களின் பின் வட மாகாண அமைச்சின் சாகித்திய இலக்கிய விழா எங்கள் கல்லூரி மண்டபத்தில் நடந்த போது எனது "வீதியெல்லாம் தோரணங்கள்" நாவலுக்கான விருதை வாங்குவதற்காக கல்லூரிக்குச் சென்றிருந்தேன். மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமுமாக உணர்ந்த தருணம் அது. இந்தக் கல்லூரியின் லட்சக்கணக்கான மாணவிகளில் நானும் ஒருத்தி என்ற பெருமிதம் எப்போதும் எனக்குள் உண்டு.

உலகமெல்லாம் பரவி வாழ்கின்ற எத்தனையோ சாதனைப் பெண்களை உருவாக்கித் தந்து விட்டு அமைதியாக தன் பவள விழாவை கொண்டாடும் எங்கள் கல்லூரித் தாய்க்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைச் சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தாமரைச்செல்வி
(திருமதி ரதிதேவி கந்தசாமி)
பழைய மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் பிடியில் பூமி

இன்றைய வாழ்க்கை முறையானது தவறான நுகர்வுப் பழக்கங்களை ஊக்குவிக்கின்ற கழிவுகளை மேலும் அதிகரிக்கின்ற புதுப்பிக்க முடியாத சக்தி வளங்களை அழிக்கின்ற அதேவேளை சுற்றுச்சூழலை கற்பனைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பாதிப்படையச் செய்து வருகின்றது.

மனிதத் தேவைகளும் பிளாஸ்ரிக் தொழினுட்பமும் கைகோர்த்து அசுர வேகத்தில் விரைந்து கொண்டு இருக்கின்றன. இந்த வேகத்தில் மிதிபட்டு இறந்துகொண்டிருக்கும் இயற்கையின் ஒவ்வொரு பகுதியையும் மனிதனின் செயற்கைத் தயாரிப்பான பிளாஸ்ரிக் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. சுற்றுச்சூழலின் பிரதான வில்லன்களில் ஒன்றான பிளாஸ்ரிக்கின் அபாயத்தை விளக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

பற்தூரிகை, பற்பசை அடைப்பான், சவர்க்கார டப்பா, சட்டைப் பொத்தான், சீப்பு, செருப்பு, விளையாட்டுப் பொருட்கள் என்று விரல் விட்டு எண்ணக்கூடிய பிளாஸ்ரிக் உற்பத்திகள் இப்போது நமது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் ஒட்டி உறவாடும் பொருட்களாக மாறி இருக்கின்றன. வாழை இலைகளின் இடத்தில் பிளாஸ்ரிக் கோப்பைகளிலேயே பந்தி பரிமாறப்படுகின்றது. இரும்பு போன்ற உலோகங்களையும் ஓரம் போ என்று சொல்லிவிட்டு பெரிய பெரிய பீர்ப்பாய்கள், வாளிகள், தட்டுக்கள், குவளைகள், மேசைகள், நாற்காலிகள், வீட்டுக் கதவுகள், பொலித்தீன் பைகள் என்று எங்கு திரும்பினாலும் விதம் விதமான வண்ணங்கள் வடிவுகளில் பிளாஸ்ரிக் ஆட்சியே நடந்து கொண்டிருக்கிறது. உள்ளக அலங்காரச் செடிகளின் இடத்திலும் பிளாஸ்ரிக்கின் செயற்கை வாடையே வீசுகிறது.

பில்லியர்ட்ஸ் பந்துகள் செய்வதற்கான தந்தங்களை பெறுவதற்கு தினமும் நூற்றுக்கணக்கான யானைகள் கொல்லப்பட, மாற்றைக் கண்டறியும் முயற்சியில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் வெஸ்லி ஹயற் 1869 இல் செலிலோயிட்டைக் கண்டுபிடித்தார். 1907இல் லியோ ஹென்ட்றிக் பேக் லான்ட் பேக்லைற் எனப்படும் இன்னொரு வகையான பிளாஸ்ரிக்கை கண்டுபிடித்தார். இருந்தபோதும் 1933இல் போசேற், கிட்சன் என்னும் இரண்டு வேதியியலாளர்கள் வேதிப்பொருட்களை உயர் அழுத்தத்திற்கு ஆளாக்கி பார்க்கையில் தற்செயலாக பிரசவித்த பொலித்தீன் தான் பிளாஸ்ரிக்கின் முகவரியை உலகுக்கு தெரியப்படுத்தியது. அதன் பின்னர் பிளாஸ்ரிக் தொழினுட்பம் இரண்டாம் உலக யுத்தத்துடன் ஆரம்பித்து ஜப்பானுள் நுழைந்ததை அடுத்து மேற்குலக விஞ்ஞானிகளின் பார்வை பிளாஸ்ரிக்கின் மீது திரும்பியது.

பிளாஸ்ரிக்கின் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருட்கள் எளிதில் கிடைக்கக்கூடியவை. தாவரங்களில் கிடைக்கும் ரெசின்களில் இருந்தும் பெற்றோலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களிலிருந்துமே இது தயாராகின்றது. பிளாஸ்ரிக் லேசானவை. தண்ணீரிலே கரையாது, துருப்பிடிக்காது, எல்லாவற்றிற்கும் மேலாக உக்கல் அடையாது. இந்தச் சிறப்புத் தகைமைகளுடன் அன்று பந்தயத்தில் ஓடத் தொடங்கிய பிளாஸ்ரிக், உலோகங்கள், மரப்பொருட்கள் என்று பாவனையில் இருந்த எல்லாவற்றையும் பின்தள்ளிவிட்டு இப்பொழுது முழு உலகத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது. இதனால் பிளாஸ்ரிக்கின் ஏகபோக வளர்ச்சி சத்தமில்லாமலே பூமியை சாகடித்து கொண்டிருக்கிறது. பூமியின் மேனி எங்கும் பிளாஸ்ரிக் தன் கோரப்பற்களைப் பதித்து நிற்கின்றது என்ற இந்த உண்மையை சமீப காலத்தில் தான் உலகம் உணர்ந்து கொண்டது.

மண்ணோடு மண்ணாக மக்கிப் போகாத்தன்மை தான் பிளாஸ்ரிக்கிற்குத் தனியானதொரு அந்தஸ்தை தேடிக்கொடுத்தது. ஆனால் அந்த அந்தஸ்தே சுற்றுச்சூழலின் பிரதான எதிரிகளில் ஒன்றாக பிளாஸ்ரிக்கை ஆக்கிவிட்டது. மண்ணில் உள்ள பக்டீரியாக்கள், பங்கசுக்கள் போன்ற நுண்ணுயிர்களின் செயற்பாட்டினால் பொருட்கள் சிதைந்து அழிவதை விஞ்ஞானிகள் உயிர்மச்சிதைவு என்று பெயரிட்டு இருக்கிறார்கள். வீட்டுக் கழிவுகள், பண்ணைக் கழிவுகள், மரப்பொருட்கள் எல்லாம் இப்படித்தான் மண்ணுடன் கலந்து இன்றியமையாத இயற்கைச் சுழற்சியில் பங்கேற்றன. உலோகப் பொருட்கள் கூட வேதி மாற்றங்களினால் துரு ஏறி காலப்போக்கில் அழிந்து போய்விடுகின்றன. ஆனால் பிளாஸ்ரிக் மட்டும் சாகாத வரத்தை மனிதனிடம் வாங்கி வைத்திருக்கிறது.

பிளாஸ்ரிக் கழிவுகள் மழை நீரை நிலத்தினுள் நுழைய அனுமதிப்பதில்லை. ஏற்கனவே காடழித்தல், பச்சைவீட்டு விளைவு போன்ற சீர்கேடுகளால் நாவறண்டு போயிருக்கும் பூமியின் மிச்சசொச்ச நிலத்தடி நீரையும் மேலும் மேலும் பற்றாக்குறை ஆக்குகின்றது. தண்ணீரை மட்டுமல்லாது மண்ணுக்குள் காற்று புகுவதற்கும் கூட தடை விதித்திருக்கின்றது. காற்றில்லாத சூழல் மண்ணுக்குக் கீழே கண்ணுக்குத் தெரியாமல் இயங்கிக்கொண்டிருக்கும் நுண்ணங்கிகளின் உலகத்தை வெகுவாகப் பாதிப்படையச் செய்கிறது. இதனால் தாவரங்களின் வளர்ச்சி மோசமாகப் பாதிப்படைகின்றது. இதைவிட பிளாஸ்ரிக் கழிவுகள் விதைகளை மூடி அவற்றை முளை கொள்ள விடாமல் சிரமத்துக்கு ஆளாக்கி விடுகின்றன. தரைக்குக் கீழே புதையுண்டு கிடக்கும் பிளாஸ்ரிக் மண்ணின் பிடிமானத்தைத் தளர்த்தி மலைப்பகுதிகளில் அவ்வப்போது பெரும் மண்சரிவை உண்டுபண்ணுகிறது. களை விதைகள் போல காற்றில் விரவிப் பரவும் இலேசான பொலித்தீன் பைகள் கழிவு நீர் கால்வாயில் விழுந்து அடைப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் தேங்குகின்ற நீரில் நுளம்புகள் போன்ற நோய்க்காவிகள் பெருகுவதும், கழிவுநீர் தெருக்களில் பெருக்கெடுப்பதும் நிகழ்கின்றது.

தரையில் மட்டுமல்லாமல் பிளாஸ்ரிக்கின் வல்லாட்சி கடலிலும் நீள்கின்றது. கடலின் ஒவ்வொரு சதுர மைல் பரப்பளவிலும் டீ.டீ.ரி போன்ற கிருமிநாசினிகளை ஈர்ந்து நஞ்சாக மாறி வருகின்றது. இதனால் ஒரு லட்சம் பாலூட்டிகளும், எண்ணுக் கணக்கில்லாத மீன்களும் பலியாகி வருவதாக ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் தமது அறிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளது. பிளாஸ்ரிக் பைகளை மீன்கள் என நினைத்து விழுங்கும் ஆமைகள் உணவுக்குழாய் உபாதைகளால் பெருமளவில் இறப்பதும் நிகழ்கின்றது. நீரில் அலையும் பிளாஸ்ரிக் பொருட்கள், பக்டீரியா, பங்கசுக்கள், அல்காக்கள் போன்ற சிறிய உயிரிகளை ஓரிடத்தில் இருந்து உலகின் இன்னோர் இடத்திற்கு கொண்டு சேர்ப்பிப்பதால் புதிய பகுதியின் உயிரினச்சூழல் கடுமையாக எதிர்க்கப்படுகின்றது.

கடல் உயிரினங்களை அழிப்பதுடன் உலகின் சிறு தீவுகளின் இருப்பிற்கு பிளாஸ்ரிக் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் இந்தியாவில் கடற்றொழிநுட்ப தேசிய ஆய்வு மையம் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் மேற்கொண்ட ஆய்வுகளில் இது நிரூபணமாகியுள்ளது. அந்தமான் நிக்கோபர் தீவுகளில் 572 தீவுகள் அடங்கியுள்ளன. இத்தீவுகளைச் சுற்றி அதிக அளவிலான பவளப்பாறைகள் காணப்படுகின்றன. வங்கக் கடலில் பயணிக்கும் கப்பல்களில் இருந்தும் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்தும் சேரும் பிளாஸ்ரிக் கழிவுகள் பவளப்பாறைகளை அடைந்து அவற்றை இறக்கச் செய்து வருகின்றன. இயற்கைப் பாதுகாப்பு அரண்களாக விளங்கும் பவளப்பாறைகளின் அழிவு அந்தமான் நிக்கோபார் தீவுகளின் அழிவுக்கும் வழிகோலும் என அஞ்சப்படுகின்றது. சுற்றுச்சூழல்வாதிகள் பிளாஸ்ரிக் பிரச்சினையை இப்படி ஏராளமாக பட்டியலிட மருத்துவ விஞ்ஞானிகளும் தம் பங்கிற்கு வேறு எச்சரிக்கைகளை வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

சில வகையான பிளாஸ்ரிக் தாள்களின் மூலம் உணவு வகைகளைப் பொதி செய்து நெடு நாட்கள் வைத்திருக்க நேரின் பிளாஸ்ரிக்கின் நச்சுக்கூறுகள் சிறிது சிறிதாக உணவை சென்றடைவது தெரியவருகிறது. பொலிஸ்ரைறின் பிளாஸ்ரிக்கில் இருந்து ஸ்ரைறினும் பீ.வி.சி எனப்படும் பொலிவீனைல் குளோரைடும் பிளாஸ்ரிக்கில் இருந்து தாலேற்றுக்களும் பால் உணவுப் பொருட்களுடன் கலக்கின்றன. பீ.வி.சி பிளாஸ்ரிக்கில் அதனை நெகிழ்த்துவதற்காக கட்மியம், ஈயம் போன்ற உலோகங்களும், தரம் சிதைவடைதலைத் தடுப்பதற்காக தாலேற்றுக்களும் சேர்க்கப்படுகின்றன. பீ.வி.சி பிளாஸ்ரிக்கினாலான விளையாட்டுப் பொருட்களை குழந்தைகள் கையாளும் போது அந்தக்கூறுகள் வாய் மூலம் குழந்தையின் உடலை சென்றடைகின்றது. தூய குடிநீர், சோடா பானங்கள் அடைத்துவரும் போத்தல்களும் கூட பாதுகாப்பானவை அல்ல. இவற்றிலிருந்து நீரினுள் அசற்றல் டிகைட்டு எனப்படும் வேதிப்பொருள் விடுவிக்கப்படுகின்றது. இவ்வாறு பிளாஸ்ரிக்கின் விஷத்தன்மை கொண்ட கூறுகள் உடலில் சேரும் போது தலைச்சுற்று, வாந்தி பேதி, குடற்புண், நரம்புத்தளர்ச்சி தொடங்கி ஆண்மையிழப்பு, புற்றுநோய் வரை ஏராளமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

பிளாஸ்ரிக் கழிவுகளை எரித்து அகற்றுவது என்பதும் இலேசான ஒன்றல்ல. தனது இருப்பின்போது அச்சுறுத்தும் பிளாஸ்ரிக் இறப்பின்போது முன்னையதை விட அபாயகரமானதாக அவதாரம் எடுக்கிறது. பிளாஸ்ரிக் கழிவுகளை எரிப்பதனால் டயொக்சின் என்ற நச்சு வாயு உருவாகி காற்றுடன் கலக்கின்றது. குளோரினை ஒரு உள்ளடக்கமாகக் கொண்ட பொருட்களை உருவாக்கும் போதும் அவற்றை எரிக்கும்போதும் விடுவிக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கு மேலான நச்சுக் கூறுகள் இப்படிப்பட்ட டையொக்சின் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றது. மனிதன் இந்த நச்சுப் வேதிப்புகையை சுவாசிப்பதன் மூலம் அநேகமான சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. இது கொழுப்பில் கரையக் கூடிய தன்மையைக் கொண்டதனால் உடல் இழையங்களில் தங்கிவிடுகின்றது.

பிளாஸ்ரிக்கின் இவ்வளவு மோசமான பின் விளைவுகளை அறிந்து அதிலிருந்து நமது பூமியை காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் இப்போது பல நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக துணிப்பைகளைப் பயன்படுத்தி பொலித்தின் செறிவை இழிவளவாக்குவதில் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். குரல் கொடுப்போம் பொலித்தீனுக்கு எதிராக கரம் கோர்ப்போம்.

செல்வி தி.தினுஜா
தரம் 13A
2018 கலைப்பிரிவு

இன்பமோ துன்பமோ
வெற்றியோ தோல்வியோ
கஷ்டமோ நஷ்டமோ
வாழ்வோ தாழ்வோ
தனக்கு நடக்கும் வரை
உலகத்தில் நடக்கும் இவை
அனைத்துமே வேடிக்கை தான்

வெற்றி என்பது உன்னை
உலகிற்கு அறிமுகம் செய்வது
தோல்வி என்பது உன்னை
உனக்கே அறிமுகம் செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லதோர் வீணை செய்தே ...

மாற்றம் அடைந்து வரும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப உலகிலே பூகோளமயமாதலுடன் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் தரமான கல்வியை வழங்குவதன் ஊடே சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் பெரிய பொறுப்பானது இன்றைய காலகட்டத்தில் ஆசிரிய சமூகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் காரணிகளால் மாணவர் சமுதாயமானது ஒழுக்கம், மனித நேயம், விழுமியப்பண்பு, உயர்குணச் சிந்தனை என்பவற்றினின்றும் விடுபட்டு பாதை மாறிப் பயணிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை அனைவருக்கும் இலவச கல்வி வழங்கும் இந்நாட்டில் தற்காலத்தில் எதிர்நோக்கும் பாரிய சவால் யாதெனில் இளம் சமுதாயமானது வன்முறை சார்ந்து தறிகெட்டுப் போய்க்கொண்டிருப்பதேயாகும். மாணவர்கள் படித்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு சீலமுள்ள மனிதனாக வாழவும் தெரியவேண்டும். சிறந்த கல்வியின் வாயிலாக நடத்தையிலும், சிந்தனையிலும் பெரும் மாற்றத்தைக் காண வேண்டும். இது நமது அவசரமும் அவசியமுமான தேவையாக உள்ளது.

தற்காலத்தில் அருகிக் கொண்டு செல்லும் பணிவு, இரக்கம், அன்பு, தியாகம், விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, தெய்வபக்தி, பெரியோரை மதித்தல் போன்ற உயரிய நற்பண்புகளை வழங்கப்படும் கல்வியூடாக மாணவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் ஆசிரியர் குழாத்தினரின் பெரும் பொறுப்பாகும். அப்பொறுப்பினைத் தட்டிக் கழிப்போமேயானால் எதிர்காலத்தில் இன்னல் நிறைந்த இளஞ் சமூகத்தை உருவாக்கிய பழி எம்மையும் சாரும். போட்டியும் பொறாமையும் அகங்காரமும் பிறரை மதிக்காத் தன்மையும் சுயநலனும் கொண்ட சமூகப் பொருத்தப்பாடற்ற சந்ததியினரால் பண்பாடற்ற வன்முறை சார்ந்த மிலேச்சத்தனமான சமூகமே உருவாகும்.

மாணவப் பருவம் என்பது மகத்தான பருவமாகும். இப் பருவத்தில் மாணவர்கள் தூரநோக்குடன் உயர்ந்த லட்சியத்துடன் பெற்றோர், ஆசிரியர்களின் வழிகாட்டல் ஊக்குவிப்பின் கீழ் தமது கல்வியைத் தொடரும் அதேவேளை கேடு விளைவிக்கும் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளினின்றும் தம்மைப் பாதுகாப்பதும் இன்றியமையாததாகும். 90 களின் நடுப்பகுதி வரையிலான காலகட்டத்தில் பண்பாடு கலை கலாச்சாரம் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். அக்கால கட்டத்தில் மூடிய பரப்பெல்லைக்குள் பூகோளமயமாக்கலின் தாக்கம் பெரிதும் பாதிப்பு எதனையும் ஏற்படுத்தவில்லை. பிள்ளைகளுக்கு நல்ல வழிகள் தவிர பிறழ்வான பிற வழிகள் தெரிவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் தற்காலத்தில் தங்குதடையின்றி நவீன தொலைத் தொடர்பாடல் தகவல் தொடர்பு சாதனங்கள் சமூக வலைத்தளங்கள் முதல் போதைவஸ்து பாவனை வரை மாணவ சமுதாயத்தையே சீரழிக்கும் பல்வேறு காரணிகளை அடையாளப்படுத்தலாம். இவற்றுடன் சிறுவர் துஷ்பிரயோகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் வன்முறைகளும் குறிப்பாக மாணவிகளின் கல்விப் பாதையை கரடு முரடாக்குகின்றன. இந்த நிலையில் குடும்பம், பாடசாலை, சமூகம், அரசியல் போன்ற பல்வேறு தரப்புகளும் அக்கறை கொண்டு தத்தமது பொறுப்புகளையும் கடமைகளையும் தவறாது மேற்கொள்ளல் அத்தியாவசியமாகின்றது.

பிறக்கும் போது நல்லதொரு குழந்தையாக பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் காலச் சுழலில் அகப்பட்டு கால் போன போக்கில் போகாவண்ணம் சீரிய பாதையில் வழிநடத்திச் செல்வது சான்றோர் அனைவரினதும் பொறுப்பாகும்.

பரீட்சையை மட்டும் இலக்காகக் கொண்ட கல்வி பண்புள்ள மனிதர்களை உருவாக்க உதவுமா என்பது கேள்விக்குறியே. கல்வியின் இலக்குகள் பலவாக இருப்பினும் தற்காலத்தில் அவை அனைத்தும் நிறைவேற்றப்படாத நிலையில் தனியே பரீட்சைப் பெறுபேறுகளையும் சான்றிதழையும் மையப்படுத்தி போட்டி மனப்பான்மையான கற்றல் செயல்பாடே இடம் பெறுவதைக் காண்கின்றோம். உறவினருடனும், ஏனையோருடனும் பழகுவதற்கும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதற்கும் சமயம் பண்பாடு சமூக விழுமியங்கள் பற்றி அனுபவ ரீதியில் அறிந்து கொள்வதற்கும் சமய அறநெறி வகுப்புகளுக்குச் செல்வதற்கும் மாணவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இதனால் கற்ற பின்னர் சமூகப்பொருத்தப்பாடற்ற நடத்தைகளை வெளிப்படுத்துகிறார்கள். பண்புடனும் ஒழுக்கத்துடனும் வாழத் தவறுகிறார்கள்.

இளமைப் பருவத்திலிருந்தே இவர்களை நெறிப்படுத்த வேண்டியவர்கள் யார்? பெற்றோரின் பொறுப்பு என்று கல்வி நிறுவனங்களும் கல்வி நிறுவனங்கள் ஒழுக்கத்தைப் புகட்டவில்லை என ஏனையோரும் தப்பித்துக் கொண்டால் வகை கூறுவது யார் என்பதை விட எதிர்கால சமுதாயம் என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சட்டம் ஒழுங்கிற்கும் இது சவாலாக இருப்பதுடன் எதிர்காலம் தொடர்பாக இது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிள்ளைகளில் நடத்தை மாற்றத்தை கொண்டு வருவதற்கு தண்டனைகளையும் அதிகார முறைமைகளையும் பாவிக்கும் பெற்றோரை விட அந்த நடத்தையால் வரும் விளைவுகளை விளக்கி உணரச்செய்வதன் மூலம் ஒழுங்கை ஏற்படுத்தும் பெற்றோர் நல்ல ஆளுமை உள்ள பிரஜைகளை உருவாக்குகிறார்கள். அவ்வாறே வள்ளுவர் வாக்கிற்கிணங்க எப்பொழுதும் பெருமையையும் அனைவருக்கும் இன்பத்தையும் தரத்தக்க கல்வியை ஐயம் நீங்க கற்றபின் அதற்கு அமைவாக நடப்பதற்கு நல்லாசான்களும் வழி சமைக்கிறார்கள்.

காலத்துக்குக் காலம் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப நாகரீகம், வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மாறிக் கொண்டிருப்பதை யாராலும் தடுக்க முடியாது. மாற்றங்கள் என்றும் மாறாதவையே. எனவே கல்விப்புலத்தில் உள்ளோர் விடய அறிவை இற்றைப்படுத்துவதுடன் காலத்திற்கு ஏற்ற விதத்தில் புதிய கருத்துக்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளையும் அறிந்து மாணவர்களை நெறிப்படுத்துவதற்கு புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி எமது பண்பாடு பாரம்பரிய பழக்கவழக்கங்கள் அவற்றுடன் பொதிந்துள்ள அரிய கருத்துக்கள் மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தேவையான விடயங்கள் என்பவற்றை மாணவரிடத்தில் ஆழப்பதித்து எமது கலாசாரப் பண்புகளை பாதிக்காத வகையில் நவீன நாகரிகப் பழக்க வழக்கங்களையும் புறக்கணிக்காது அவை பற்றிய தெளிவினை ஏற்படுத்தி புரிய வைத்தல் அவசியம் ஆகும்.

இணைபாடவிதானச் செயற்பாடுகள், விளையாட்டுகள், மன்றச் செயற்பாடுகள், சமய நிகழ்வுகள், பொது பணிகள் போன்றவற்றில் மாணவர்களை பங்கு பெறச் செய்தல் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், பெரியார்களின் நினைவு தினத்தை கொண்டாடல், அவர்களின் கருத்துக்களை உள்வாங்க வைத்தல் என்பவையும் மாணவர்களை நெறிபிறழ்வுகளினின்றும் காப்பவையாகும்.

மாணவிகளைப் பொறுத்த வரையில் உன்னதமான எதிர்காலத்தை நோக்கி உயரிய குறிக்கோளுடன் செயல்பட்டு பாடசாலை வாழ்க்கையின் பின்னர் குடும்பத்திலோ பணிபுரியும் நிறுவனங்களிலோ, பொது நிகழ்வுகளிலோ தம்மைச் சாதனைப் பெண்ணாக, ஆளுமை மிக்க பெருந்தலைவியாக, நற்குணவதியாக, தன்னம்பிக்கை மிக்கவளாக, வெற்றிமிகு வாழ்க்கைக்கு வித்திடும் வண்ணம் உருவாக்குதல் வேண்டும். நான் இங்கு வாழ்வதால் இவ்விடம் அழகாகத் திகழவேண்டும் எனும் எமது பாடசாலை மகுட வாசகத்தினை அவர்கள் சான்றுபடுத்த வேண்டும்.

எனவே ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை வழங்குவதன் மூலம் கல்வி பயனுறுதி அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நல்லதொரு மாணவ சமுதாயததை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு போற்றுதற்குரியது. மனிதத் தன்மையோடு வாழுகின்ற மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களுடன் கூடவே பெற்றோரும் மற்றோரும் கல்விச் சமூகத்தினரும் கைகோர்ப்பதன் மூலம் வளமான வருங்கால சந்ததியை உருவாக்குவோம்.

நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில்
எறிவதுண்டோ – சொல்லடி சிவசக்தி
எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்

உசாத்துணை
திரு மனிதர் வாழ்வு – கோகிலா மகேந்திரன்
வீரகேசரி வாரவெளியீடு – கட்டுரை
கோணேசபிள்ளை ஸ்ரீஸ்கந்தா
சக்தி சஞ்சிகை 2007

திருமதி பத்மஜா பாஸ்கரக் குருக்கள்
உதவி அதிபர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள்



Sports meet - 2017










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள் - 2017

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலியே பயிரை மேய்ந்திடும்.......

ஞாலம் மீதினில் நற்புகழ் பரப்பிய
ஞானத்தமிழ் எங்கள் நற்றமிழ்
பண்டைய பழந்தமிழர் வரலாற்றை
பண்போடு காத்திட்ட பண்டைத்தமிழ்
இயல் இசை நாடகத்தால்
இன்பங்கள் பயக்கிடும் இன்பத்தமிழ்
வீரச்சமர் வெற்றிகள் கண்ட
வீரத்தமிழ் -இன்று ???......

தன்நிலை இழந்து தமிழ்
தலை சாய்ந்துபோகிறது
வேலியே பயிரை மேய்ந்திடும்
விபரீதங்கள் தொடர்கிறது
நாமே நம்மை அழித்தால்
நலிந்திடும் எம் வாழ்வு
இனியும் வேண்டாம்
ஈனச் செயல்கள் எம்மிடம்

பள்ளிச் சிறார்களிடத்தே
பாலியல் பலாத்காரங்கள்
எண்ணிய வேளைகளில் எல்லாம்
எம்மின மக்களிடையே ஏமாற்று அம்பலங்கள்
துல்லியமாய் எம்மிடமிருந்த
துணிவுகளும் தொலைந்து போயின - ஏக்கக் கனவோடு
உயிரைக் கையிலே பிடித்து
ஊசலாடுகிறது எம் வாழ்வு

(மூலை முடுக்கெங்கும்) முகப்புத்தகங்கள் முனைப்பு கொண்டதால்
பாடநூல்கள்படுத்துறங்குகின்றன.
காணொளி நாடாக்கள் எங்கும் கலந்து கொண்டதால்
கல்விப் புலமும் கரையொதுங்கிக் கொண்டது
சங்கே முழங்கு என
சரித்திர வெற்றிகள் படைத்த நாம்
ஏதுமற்ற ஏதிலிகளாய்
தினம் தினம் ஏமாற்றுகின்றோம் - எம்மவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திட வேண்டிய விழுமியங்களை - நாளும்
கைநழுவ விடுகிறோம்
சாத்திர விதிமுறைகள் இன்றியே
சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்கிறது
இலக்கணம் வகுத்து வாழ்ந்திட்ட தமிழ்
இனம் காணமுடியாத இனங்களாய் மறைகிறது
மோக கலாசாரத்தில் முக்குளித்தே
மேன்மையுறு பண்பாடு தொலைகிறது

அன்பும் கருணையும்
அடிவற்றிப் போய்விட
நீதியும் நேர்மையும்
நிலையற்று போயின
நிலைகெட்ட மாந்தராய்
நித்தமும் வாழ்கிறோம்
போதையின் பாதையில் போன தடுமாற்றத்தால் என
பொய்புரட்டுக்கள் சொல்லிமாள்கிறோம்

வீதி விதிகள் மீறியே - எம்
விதிகள் நாளும் தொலைகிறது - மீதி
போதையின் பாதையில் நாளும்
புதையுண்டு போகிறது
நெஞ்சம் கனக்கிறது
நினைவு நிலை தடுமாறுகிறது
வஞ்சனை மிக்க வாழ்வு கண்டு
வலி சுமக்கிறது நெஞ்சம்

வேண்டாம் ! வேண்டாம் !
வேதனைகள் இனியும் வேண்டாம்
தீண்டாத இனமாக நாம் சரித்திரத்தில்
தீட்டப்பட வேண்டாம்
தமிழின் தார்மீகம் போற்றிடுவோம்
துணிந்தே தமிழ் பெருமை காத்திடுவோம்
ஈனச் செயல்கள் புரிந்திடும் ஈனராய் அன்றி
மானிடம் போற்றிடும் மாந்தராய் வாழ்ந்திடுவோம்

திருமதி. பாமினி கேதீஸ்வரன்
ஆசிரியை
யாழ். இந்து மகளிர் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் பிறமொழிக்கலப்பு

மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள அபூர்வமான ஒரு உற்பத்தியாக மொழி அமைகின்றது. மனிதன் தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இருக்கின்ற மிகச்சிறந்த தொடர்பாடல் ஊடகமாக மொழி விளங்குகின்றது. மொழியின்றி மனிதனோ ஒரு சமூகமோ இயங்க முடியாது. தொடர்பாடல் ஊடகமாக மட்டுமன்றி சமூக, பண்பாட்டை எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையமாகவும் மொழி விளங்குகின்றது. மொழி ஒரு சமூகப் பண்பாட்டு உற்பத்தியாகவும் உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் விளங்குகின்றது. சமூகம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் போன்ற பல்பரிமாண பிரிவுகளில் மாற்றம் ஏற்படும்போது மொழியும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. மொழி காலத்துக்குக் காலம் மாறும் தன்மையும் வளைந்து கொடுக்கும் தன்மையும் கொண்டுள்ளது.

ஒரு மொழி இன்னொரு மொழியில் உள்ள சொற்களையோ, இலக்கணக் கூறுகளையோ உள்வாங்கும் நிலையினை மொழித் தொடர்பு என்பர். இத்தொடர்பு மொழி வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. ஆங்கில மொழியியல் அறிஞரான Jespersen

> "கடன் வாங்கப்பட்ட சொற்கள் இல்லாத மொழியே பெரும்பாலும் இல்லை
> ஏனென்றால் எந்த நாடும் தனித்து வாழ முடியாது.
> மற்ற நாட்டுடன் தொடர்பு கொள்ளும்பொழுது மொழி தொடர்புக்கு வழிகோலுகின்றது."

எனக் கூறுகிறார். இன்றைய மொழியியலாளர்கள் செல்வாக்கு செலுத்தும் மொழியைக் கடன் தரும் மொழி என்றும் கடனை ஏற்றுக்கொள்ளும் மொழியைக் கடன் பெறும் மொழி என்றும் கூறுவர். மொழி தனித்து வாழ முடியாத ஒன்றாகும். அவ்வாறான காலகட்டத்தில் மொழிக்கு மொழிக்கலப்பு ஏற்படுவது அவசியமானதாகும். இதற்கு அரசியல், சமூக, சமய, பொருளாதாரம் போன்ற காரணங்கள் முக்கியமானதாகும். அத்தோடு கல்வி, அறிவியல், விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளின் வளர்ச்சிகளும் மொழி தொடர்பு ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகும். மொழியியல் அறிஞர்கள் கடன் வாங்குவதற்கான காரணங்களை பின்வருமாறு கூறுகின்றனர்.

01. தம்மிடம் இல்லாத புதிய பொருட்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவது
02. ஒரு மொழியின் செல்வாக்கோ, உயர்வோ அல்லது ஒரு துறையை கற்கும் போது அதற்குரிய மொழிச் சொற்களைக் கையாளுவதற்கான தேவை.
03. மொழிபெயர்ப்பாளர்கள் சோம்பலின் காரணமாகத் தம்மொழிச் சொற்களை அப்படியே கொண்டு வந்து கலத்தல் போன்றனவாகும்.

தமிழ் மொழியானது பல்வேறு மொழிகளில் இருந்தும் பெருந்தொகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களை உள்வாங்கி என்றுமில்லாதவாறு பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதேவேளை பிற மொழிக்கும் தமிழ் மொழியில் இருந்து சொற்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் தமிழ் மொழிக்கு பல இந்திய மொழிகளில் இருந்து சொற்கள் வந்து கலந்துள்ளன.
அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

வடமொழியில் இருந்து வந்த சொற்கள்
சக்தி, கஷ்டம், ஆசிர்வாதம், விஷம், இராகம், பூமி, ஆகாயம், மனம்

முண்டா மொழியிலிருந்து வந்த சொற்கள் மேலும் எதிர் ஒலிச் சொற்கள் என்பன தமிழில் வந்து கலந்தன அதாவது
சாப்பாடு–கீப்பாடு, பணம்–கிணம், வீடு–கீடு, சம்பளம்–கிம்பளம்

தெலுங்கு மொழியிலிருந்து வந்த சொற்கள்
கத்தரி –துணி வெட்டும் கருவி ,
பத்தர் – நகை செய்பவர் ,
நிம்மதி – சொகுசு

மலையாள மொழியிலிருந்து வந்த சொற்கள்
அவியல், வெள்ளம், அடியந்திரம், சக்கை, காலன், நெரியல்

உருது மொழியில்
வக்கீல், சவால்

இந்துஸ்தானி மொழியில் இருந்து
தவால், தொப்பி, லஞ்சம்

போன்றன எடுத்துக்காட்டுகள் ஆகும். இவ்வாறு இந்திய மொழிச் செல்வாக்கு அதிகரித்து காணப்பட்டாலும் மேலை நாட்டவரின் வருகையால் ஏற்பட்ட அரசியல், பொருளாதாரம், வணிகம் போன்ற துறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போது மொழியிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றது. இவ்வாறான மாற்றங்களால் தமிழ் மொழியிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின எனலாம். அந்த வகையில் பிரஞ்சு, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காரர்களின் வருகையினால், அந்தந்த மொழிச் செல்வாக்கு செலுத்த படுவதைக் காணலாம்.

- பிரஞ்சு மொழியில் இருந்து வரும் சொற்களாக போத்தல், பீரோ, நொத்தாரிசு, லாந்தர், பொத்தான்
- ஒல்லாந்த மொழியில் இருந்து வரும் சொற்கள் – தோம்பு, துட்டு, கந்தோர், லாச்சி, தாச்சி
- போர்த்துக்கீசர் மொழிச் சொற்கள் – விறாந்தை, யன்னல், சாவி, கதிரை, கோப்பை, வாங்கு, அலுமாரி, ஏலம், கராம்பு, ஆயா போன்றனவாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆங்கில மொழிச் செல்வாக்கு தமிழில் என்றுமில்லாதவாறு எல்லா நிலைகளிலும் பெரும்பங்காற்றியுள்ளது.

அதாவது கோட்டு, டாக்குத்தர், பொலிசு, கேக், ரீ, கோப்பி, ஜாம், ரிமாண்ட், கேற் போன்ற சொற்கள் உதாரணமாகும். இது மட்டுமல்லாமல் ஆங்கில மொழி செல்வாக்கினால் சில உறவுமுறை பெயர்களுக்குப் பதிலாக ஆங்கில உறவுமுறைச் சொற்களின் செல்வாக்கு அதிகம் காணப்படுகின்றன.

உதாரணம் அப்பா- டாடி, அம்மா -மம்மி, மாமா - அங்கிள், மாமி - அன்ரி

அதுமட்டுமல்லாமல் கூட்டுப் பெயர்ச்சொற்களின் போது ஒரு பெயர்ச்சொல் தமிழாகவும், இன்னொரு பெயர்ச்சொல் ஆங்கிலச் சொல்லாகவும் சேர்ந்து வருவதை இனம் காணமுடிகிறது. உதாரணமாக நீலக்கலர், டைனமோ விளக்கு, கறுப்பு மாக்கர் போன்றனவாகும்.

இது மட்டுமில்லாமல் சிங்கள மொழியில் இருந்தும் சொற்கள் தமிழில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது அந்தோ, ஈழம், முருங்கை போன்ற சொற்கள் ஆகும். இம் மொழிகள் மட்டுமல்லாமல் அரேபிய மொழிகள், சீன மொழிகள் போன்ற மொழிகளில் இருந்தும் தமிழில் மொழிச்சொற்கள் அதிகமாக செல்வாக்குச் செலுத்துவதை இனம் காண முடிகின்றது.

இவ்வாறான தமிழ் மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தாலும் தனித்து நின்று ஆட்சி செய்யும் மொழியாக விளங்குவதாலும், ஏனைய மொழிகளிலும் செல்வாக்கு செலுத்துவதனை காணமுடிகிறது. அந்த வகையில் பிற மொழிகளில் தமிழ் மொழி எவ்வாறான செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை நோக்கலாம். வட மொழியில் தமிழ் சொற்கள் அனல், குடம், உலக்கை, பள்ளி, பழம், எருமை, முரசு, மாலை போன்றனவாகும். சிங்கள மொழியில் ஆட்சி செலுத்தும் தமிழ்ச் சொற்களாக அச்சு, அடி, பெட்டி, அம்மா, ஆச்சி, மாமா போன்ற சொற்களை உதாரணம் காட்ட முடிகிறது. மேலும் இந்தோனேசியா, மலாய் மொழிகளிலும் கப்பல், முத்து, அக்கா, மாமா, மாமி, அப்பம், கஞ்சி போன்ற சொற்கள் செல்வாக்குச் செலுத்துவதை காணமுடிகின்றது. அதுமட்டுமல்லாமல் இன்று வரை செல்வாக்குச் செலுத்தும் ஆங்கில மொழியிலும் கஞ்சி, கட்டுமரம், கறி, காசு, மரக்கால், சந்தனம், தட்டு, காணி போன்ற சொற்களை ஆய்வுகளிலிருந்து இனங்காண முடிகிறது.

மொழிக்கு மொழி சொற்கள் கடன் வாங்கப்படுவது இருவழிப்பயணம் ஆகும். ஒரு மொழியின் வரலாற்றை அறியவும், பண்பாட்டுத் தொடர்பை அறியவும் மொழித்தொடர்பு பெருந்துணையாக இருக்கிறது. மொழி வளர்ச்சியடைவதும் பரிணாமத் தன்மையினைப் பெறுவதும் கடன் வாங்கலால் என்பர். இக்கூற்றுக்கு அமைவாக தமிழில் பிறமொழிக் கலப்பு ஏற்படுவதால் தமிழும் வளர்ச்சி அடைவதுடன் கடன் கொடுக்கும் மொழியும் வளர்ச்சி அடைவதற்கு மொழிக்கலப்பு உறுதுணையாக இருப்பது மிகையாகாது எனலாம்.

செல்வி. ச. மதிவதனி
13B, கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் இசை

இசை என்பது ஒழுங்கு செய்யப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட அழகு ஒலியாகும். இசையை வடமொழியில் நாதம் என அழைப்பர். இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்று பொருள். மனிதனையும், மற்ற உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, பணிய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசை. இசையை சிரவண கலை எனவும் அழைப்பர். சங்கீதம் என்பது செவிக்கு இனிமை தரும் தொனிகளைப் பற்றிய கலையாகும். இது சிறந்த கலைகளில் ஒன்று.

இசை இன்று பல்வேறு பயன்களைத் தருகிறது. தற்போது படித்தவர் முதல் பாமரர் வரை இசை பரவி நிற்கிறது. இணையத்தில் அன்றாடம் பார்க்கப்படும் காணொளிகளில் 20 விழுக்காடு இசை சம்பந்தமாக பார்க்கப்படும் காணொளிகள் ஆகும். இவ்வாறு விளங்குகின்ற இசை தொல்பொருளியல் ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட பல பொருட்களில் இருந்து பண்டைய காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதை ஊகித்து அறிய முடிகின்றது. பழைய கற்காலத்தில் மனிதர்கள் எலும்புகளில் துளைகளை இட்டு புல்லாங்குழல் போன்று பயன்படுத்தி வந்துள்ளனர். ஏழு துளைகள் கொண்ட புல்லாங்குழல் மேலும் சில வகையான நரம்புகள் கொண்ட இசைக்கருவிகள் என்பன தொல்பொருளாய்வில் சிந்துவெளி நாகரிகம் இருந்த காலத்தில் இருந்து பெறப்பட்டிருக்கிறது. இந்தியா மிகப் பழமையான இசை மரபை கொண்டிருக்கும் நாடுகளில் ஒன்றாக இருப்பதாக அறியப்படுகிறது. மேலும் மிகப் பழமையான கற்கால இசைக்கருவிகள் சீனாவில் இருப்பதாக அறியப்படுகிறது.

மொழியின் பேச்சு வடிவமும் எழுத்து வடிவமும் இயல். பண் இசைத்துப் பாடுவது இசை, நடித்துக் காட்டுவது நாடகம். நாடகத்தைப் பழந்தமிழ், கூத்து எனக் குறிப்பிடுகின்றது. கூத்து என்பது பண்ணிசைக்கேற்ப காலடி வைத்து ஆடும் ஆட்டம். நாடகம் என்பது கதை நிகழ்வைக் காட்டும் தொடர்கூத்து. சங்ககாலத்தில் கூத்து ஆடியவரை கூத்தர் என்றனர். நாடகம் ஆடிய வரை பொருநர் என்றனர். இவ்வாறு மொழியிலும் இசை காணப்படுகின்றது. உலகில் பல்வேறு இசை முறைகள் வழங்கி வருகின்றன. அவற்றுள் இந்திய இசை, ஐரோப்பிய இசை, பாரசீக இசை, கிரேக்க இசை, எகிப்திய இசை, சீன இசை, அரபு இசை என்பன அடங்குகின்றன. இந்த ஒவ்வொன்றும் பல்வேறு அம்சங்களைத் தன்னுள் கொண்டுள்ளன. இவற்றுள் சிறப்பான சில அம்சங்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் இந்திய இசையைப் பற்றி ஆராயும் போது இந்தியா ஒரு மிகப்பெரிய நாடு, நூற்றுக்கணக்கான இனங்களையும், இனக்குழுக்களையும் மொழிகளையும் பண்பாடுகளையும் தன்னகத்தே அடக்கியது. இதனால், இப் பண்பாடுகளில் வெளிப்பாடாக உள்ள இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளும் பல்வேறு விதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளுடன் நாடு முழுவதும் பரந்துள்ளன. இவற்றுள் இசை மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் இசை வடிவங்கள் பல தொன்மையான வரலாற்றைக் கொண்டுள்ளன. பல நூற்றாண்டுகளின் ஊடாக சீர்செய்யப்பட்டு, வளமாக முதிர்ந்த நிலையில் உள்ளவை. உலகம் முழுவதும் அறியப்பட்டவை. இவற்றைவிட ஏராளமான கிராமிய உள்ளூர் இசை மரபுகள் அந்தந்த பிரதேச சமுகப் பொருளாதார ஆன்மீக தேவைகளோடு இணைந்து பயிலப்பட்டு வருவனவாக உள்ளன. இவ்வாறான இந்தியாவின் முக்கிய இசை மரபுகளுள் கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை, கல்லாலி கிராமிய இசை, பழந்தமிழ் இசை போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

கர்நாடக இசை அல்லது பண்ணிசை தென்னிந்திய இசை வடிவமாகும். இது உலகின் தொன்மையான இசை வடிவங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. தமிழகத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது ஆகும். செம்மொழியில் ஏழிசை என குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, மற்றும் தாரம் என அழைக்கப்பட்டதையே தமிழ் மொழியில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டபோது இந்த ஏழு இசைகளை ஸ்வரம் என்றனர். கர்நாடக இசை, இராகம், தாளம் என்னும் இரண்டையும் அடிப்படையாக கொண்டது. ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற இவ்வேழு ஸ்வரங்களும் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட கர்நாடக இசையுடன் கிராமிய இசையும் இந்திய இசை வடிவங்களுள் காணப்படுகின்றது. கிராமிய இசை கிராமங்களில் வசிக்கும் சாதாரண மக்கள் தங்களுக்கென்று வகுத்துக் கொண்ட ஒருவகை இசையாகும். இவற்றுக்கு நாடோடி இசை, நாட்டுப்பாடல்கள் என்ற பெயர்களும் உண்டு. கிராமியப் பாடல்களில் உபயோகப்படும் இசைக்கருவிகளாக எக்காளம், திருச்சின்னம், கஞ்சிரா, பூசாரிக் கைச்சிலம்பு, தவண்டை, உடுக்கை, தம்பட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்திய இசை வரலாற்றின் வரிசையில் பழந்தமிழ் இசையும் விளங்கியது. பழந்தமிழ் இசை என்பது தமிழரின் மரபு வழியான மிகப் பழமையான இசைச் செல்வமாகும். பழந்தமிழ் இசை எனக் குறிப்பிடும்போது ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட காலத் தமிழ் மொழியின், இசை நடைச் சிறப்புகள், பெற்ற மாற்றங்கள் ஆகியவை இங்கு குறிப்பிடப்படுகின்றது. சங்கத்தமிழானது இயல், இசை, நாடகம் என மூன்று ஆகும். இதில் இசை என்பது தமிழிசை ஆகும். பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளரத் தொடங்கின. இசை, கூத்து ஆகியவற்றின் கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத் தமிழ் நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் முச்சங்க காலம் என அறியப்படுகிறது. இம் முச்சங்க காலத்தில் இற்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இவை செவ்விய கலைகளாக விளங்கின என உறுதியாகக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சூழலில் பண்டைக் காலத்திலிருந்த முச்சங்கங்கள் இசையைப் பேணி வளர்த்தன. இசை நூல்கள் இயற்றப்பட்டன. அவை காலத்தால் அழிந்து போயின. இவ்வாறு மறைந்த நூல்களாக முதுநாரை, முதுகுருகு, சிற்றிசை, பேரிசை, பெருநாரை, பெருகுருகு, பரதம், அகத்தியம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 33 ஆவது நூற்பா பின்வருமாறு கூறுகிறது.

"அளபிறந்து இசைத்தலும் ஒற்று இசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

இதில் சுட்டப்படும் நரம்பின் மறையை இசைநூலாக கொள்கின்றனர். அத்துடன் இருபதாம் நூற்றாண்டிலும் பல்வேறு இசை நூல்கள் ஆராய்ச்சியின் அடிப்படையில் எழுதப்பட்டன. அவற்றுள் ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம் ,விபுலானந்தரின் யாழ்நூல் போன்றவற்றை குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவ்வாறு விளங்கும் இசையானது இன்றும் பல இடங்களில் பரவலாக்கப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றது. எனவே நாம் நமது இசை வடிவங்களை பாதுகாத்து இயற்றி அடுத்த சந்ததியினருக்கு பயன்படுத்தும் வகையில் உருவாக்குவோமாக.


செல்வி கஜப்பிரியா புவிராசசிங்கம்
தரம் 13 A
2018 கலைப்பிரிவு


வெற்றியை
விட தோல்விக்கு
பலம் அதிகம்
வெற்றி
சிரித்து மகிழ வைக்கும்
தோல்வி
சிந்தித்து வாழ வைக்கும்...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசானின் மகத்துவம்

அறிவின் ஒளியில் அகிலங்கள் பிரகாசிக்க
வித்திட்ட நம் ஆசான்கள்!
நம் மனவானில் என்றும் நட்சத்திரங்களாய்
பிரகாசிக்க.....
இன்று ......
நம் தெய்வங்களுக்கு வாழ்த்துக்களை
வாரி வழங்க வரிசையாய் காத்திருக்கின்றோம்!

பிஞ்சிலே வைத்த காலை தம் நெஞ்சிலே தாங்கி
ஐந்து வயது தொடக்கம் ஆயுள் வரை ....
கல்வி என்னும் பாதையிலே ....
வெற்றி நடை பழக்கியவர்கள் ...
வம்புகளை அன்பாய்ப் பொறுத்து
பண்புகளை பக்குவமாய்ப் பாயச் செய்து
வெண்கட்டியால் நம் வாழ்விற்கு விடை தந்து
நம்மை நாமே எடைபோட வைத்தவர்கள்!

எமக்கு விளக்கம் சொல்லி
தம் கைரேகைகளை கரும்பலகையில் தொலைத்தவர்கள்!
அழகான கையெழுத்தில் நம் பிழைகளைத் திருத்தி
தலையெழுத்தை மாற்றியவர்கள்!
வகுப்பில் பிடித்த சண்டைகள்,
வம்பளந்த நாட்கள், வத்தி வைத்த சம்பவங்கள்
இவற்றையெல்லாம் மன்னித்து அன்பால் திருத்தியவர்கள்

பரீட்சைப் பயத்தையும் பயிற்சி என்னும்
துணிவு கொடுத்து மாற்றியவர்கள்!
புலமையுடன் தலைமைத்துவத்தையும் சேர்த்து
ஊட்டியவர்கள்
பிரச்சினைகள் பல கண்டு கண்ணீர் மழையிலே
நனைந்தபோது
ஆறுதல் என்னும் குடை பிடித்து
சமாளிக்கக் கற்றுக் கொடுத்தவர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகள் பல வந்தும் உற்சாகம் என்னும்
பானம் தந்து
வெற்றியின் சுவையை ரசிக்கப் பழக்கியவர்கள்!

இவர்கள் எல்லாம் திக்குத் தெரியா
தெருவிளக்குகள் அல்ல!
திசை காட்டும் கலங்கரை விளக்குகள்
வருடம் பூராவும் எமக்காக உடல் வருந்தி
உழைப்பவர்கள்
நாங்கள் வருடத்தில் ஒருமுறைதான்
அவர்களை மனதிலிருத்தி நினைக்கின்றோம்!

என்றுமே
அவர்களின் இதயங்களை நன்றி மழையில்
நனைத்திடுவோம்

ஸ்ரீ. ஜஸ்மினி
A/L (2018)
கலைப்பிரிவு

## என் தேசத்தில் ஆசை...!

படையெடுத்தாண்ட அன்னியனுக்கும்
இன்று ஈழ மண்ணில் ஆசை- பங்குவைத்து
கூறுபோட பாரததேசத்துக்கும் ஆசை -அடிமையின்றி
ஈழமண்ணில் வாழ்வதற்கு தமிழினத்திற்கும் ஆசை - அந்த
இனத்தை அடித்துக் கலைத்து நிலத்தை பறித்து அழித்து
தனித்து வாழ அவனுக்கு ஆசை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்த எண்ணமும் உயர் விளைவும்

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் ஆதலால் அவர்களிடத்தில் ஆரோக்கியமான எண்ணங்களை விதைப்பது அவசியமானது. நாம் மேற்கொள்கின்ற எல்லாச் செயல்பாடுகளிலும் நேரான மனோபாவத்தை கொண்டிருப்பது அவசியமானது. வெற்றி எண்ணங்கள் வெற்றிக்கு வித்திடும். ஆதலால் தோல்வி எண்ணங்கள் நம் மனதில் இடம் பிடிக்க எள்ளளவும் இடம் கொடுக்கக் கூடாது. எதிர்பாராத விதமாக தோல்வி ஏற்பட்டாலும் கடும் முயற்சி மூலம் தோல்வியை வெற்றியாக்க முயல வேண்டும். நான் மேற்கொள்கின்ற காரியங்கள் அத்தனையிலும் வெற்றி அடைவேன், சிறப்புப் பெறுவேன், சித்தி பெறுவேன், மேன்மை அடைவேன், உயரிய சேவையை வழங்குவேன் என்ற எண்ணப்போக்குடன் வினையாற்றுகின்றபோது எல்லா காரியங்களிலும் வெற்றி அடைவதற்கு அவை உரமிடும். என்னால் முடியாது என்னால் இயலாது எனக்குத் தெரியாது போன்ற தாழ்வான எண்ணங்கள் வினைத்திறனை எதிர்திசைக்கு கொண்டு செல்லும். நாம் செய்கின்ற எந்த செயலிலும் அக்கறை உள்ளவர்களாக அதில் ஈடுபாடு உடையவர்களாக முழுமனதுடன் கருமமாற்ற வேண்டும். உங்களிடம் உள்ள நல்ல எண்ணங்கள் நல்லவர்களை உங்கள் பால் ஈர்க்கும். இதன் மூலம் நீங்கள் வாழ்வில் பல சாதனைகளை நிகழ்த்த உதவும். எனவே உங்கள் மனதில் உயர்ந்த இலக்குகள் இலட்சியங்கள் தோன்றிட உங்கள் மனதினை உங்கள் ஆளுகைக்குள் நேராக வளப்படுத்திக் கொள்வது அவசியமானது. இதன் மூலம் எந்த செயலிலும் வெற்றி பெற முடியும். ஆசிரியர்கள் மாணவர்களை உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு ஆரோக்கியமான எண்ணங்களைக் கற்பித்தலின் போது ஏற்படுத்த வேண்டியது அவசியமானது.

எந்தச் செயலைச் செய்கின்ற போதிலும் செய்யும் செயலில் உறுதி, உற்சாகம், தன்னம்பிக்கை, கடின முயற்சி உடையவர்களாக காணப்படவேண்டும். மேற்காட்டிய விடயங்களோடு செயலில் ஈடுபடுபவர்கள் மனமகிழ்ச்சியுடனும், மனத்தென்புடனும், அன்பும் பண்பும் ஆக்கமும் ஊக்கமும் உடையவர்களாகத் திகழ்வர். நல்ல தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுக்கக்கூடிய மனோபாவம் அவசியமானது. முடிவுகளை எடுக்கும் திறனைப் பள்ளிப் பருவத்திலேயே வழிகாட்ட வேண்டியது அவசியமானது. பாடத் தெரிவு, இணைக்கலைத்திட்டம் போன்றவற்றை உதாரணமாக சுட்டி உணர்த்த முடியும். கல்வி கற்கும் பாடசாலையில் மகிழ்ச்சிகரமான சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புவது இன்றியமையாதது. அன்புடனும் ஆதரவுடனும் பண்புடனும் எல்லோரையும் கவருகிற முக வசீகரத்தை ஏற்படுத்த வேண்டும்.

உங்கள் பாடசாலையின் கவின்கலை மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டும். அதற்கு அகப்புறச் சூழலை தூய்மையாக வைத்திருப்பது அவசியம். கடமைகளைச் சரியான திட்டமிடலுடன் நேர முகாமைத்துவத்துடனும் முன்னுரிமை ஒழுங்கிலும் நிறைவேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். கடமை முடிந்ததும் என்ன கருமம் நிறைவேற்றினேன் எவற்றைத் தவற விட்டேன் என்பதை செவ்வைபார்த்து இன்று நிறைவேற்றத் தவறியவற்றை நாளை நிறைவேற்றத் தயாராக வேண்டும். 5எஸ் முறைகளைக் கடைபிடித்து பாடசாலை கருமங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். எடுத்த பொருட்கள் அந்த அந்த இடங்களில் ஒழுங்கான முறையில் நேர்த்தி செய்வது அவசியமானது. பாடசாலைச் சுமையை வீட்டிற்கோ வீட்டுச்சுமையைப் பாடசாலைக்கோ நகர்த்தக் கூடாது. இன்று போட்ட திட்டங்கள் எவை? நான் அவற்றை நிறைவேற்றினேனா? எவற்றைத் தவறவிட்டேன்? ஏன் தவற விட்டேன்? என்று தினம்தோறும் நேர ஆய்வு மேற்கொள்ளப்படும் போது உச்சப் பயனை நாளாந்தம் பெற வழி செய்யும்.

இறுதியாக நித்திரைக்குச் செல்லும் முன் உங்களுக்கு நீங்களே சுய ஊக்கம், சுய உற்சாகம் ஊட்டுங்கள். உங்களுடைய முன்னேற்றம் பற்றிச் சிந்தியுங்கள். செய்யும் செயலிலும் ஒரு மனவலிமையை ஏற்படுத்துங்கள். இந்த மனவலிமை நீங்கள் செய்யும் செயலை முன்னேற்றகரமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

"எண்ணியது முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

என்ற பாரதியாரின் வாக்கிற்கிணங்க நாம் எமது செயலை அமைத்துக் கொள்வோமாயின் அதில் நாம் உயர்வடைவது நிச்சயம்.

மனிதன் தன் இதயத்தின் ஆழத்தில் எந்த எண்ணத்தைக் கொண்டிருப்பானோ அதே போல் ஆவான் என ஜேம்ஸ் ஆலன் என்ற அறிஞர் கூறியுள்ளார். ஆகவே எமது குறிக்கோள் உயர்ந்ததாக இருக்கும்போது அதை நோக்கி நாம் பற்றுறுதியுடன் செயல்பட்டால் மேல் நிலையை அடைய முடியும்.

நாம் நாளாந்த செயல்களில் ஈடுபடும் போது வேண்டாதவற்றையும் வேண்டியவற்றையும் வேறு பிரித்து அறிந்து வேண்டியவற்றை அருகிலும் வேண்டாதவற்றை தொலைவிலும் வைத்திருப்பது சிறந்தது. நாளாந்தம் தேவையான எல்லாப் பொருட்களையும் குறித்த ஒரு இடத்தில் ஒதுக்கி வைக்கவேண்டும். ஐம்பெரும் பணி கொள்கையினை சிறப்பாக கடைப்பிடித்துச் செய்கின்ற செயல்களை நேர்த்தியுடனும் வினைத்திறனுடனும் செய்யப்பட வேண்டும். அழகான அமைதியான சுகாதாரம் மிக ஆரோக்கியமான பணிச்சூழல் ஒருவருக்கு உடல்நலத்தை குறைவின்றி வழங்கும். எனவே அவ்வாறான பணிச் சூழலை உருவாக்கிக் கொள்வோம்.

ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் உள்ள பலத்தை பெருக்கிக் கொள்வதும் பலவீனங்களை இனங்கண்டு விருத்தியாக்குவதும் அவசியமானது. உங்களிடம் உள்ள தகுதிகளையும் திறமைகளையும் அறிந்து அவை ஒவ்வொன்றையும் வெற்றிக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகளாக மாற்ற வேண்டும். உங்கள் செயற்றிறனின் தூரநோக்கை அடைவதில் உங்களிடமுள்ள திறமைகள் வளவாய்ப்புகள் எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய மனநிலையே முக்கிய பங்கு வகிக்கிறது. இதைத்தான் திருவள்ளுவர்

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற"

எனவும்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்"

எனவும் உலகப் பொதுமறையில் இயம்பி உள்ளார்.

எந்த குறிக்கோளையும் அடைய முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை வையுங்கள். உங்களுடைய தகுதியும் திறமையையும் உழைப்பாக வெளிப்படுத்தி நல்ல விளைவைப் பெற ஆவன செய்யுங்கள். இலட்சியம் மட்டும் இருந்தால் போதாது. அதை அடைவதற்கான ஆழ்ந்த முயற்சியும் இன்றி அமையாதது. இதனால்தான் "முயற்சி மெய்வருத்த கூலி தரும்" என்றார்கள் ஆன்றோர்கள்.

எனவே செய்கின்ற செயல் எதுவானாலும் கற்பித்தல் ஆக இருக்கலாம் கற்றலாக இருக்கலாம் அல்லது வேறு எந்த செயலாகவும் இருக்கலாம். அச்செயல் செய்வதற்கு கிடைக்கும் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி உரிய சிந்தனைகளோடு குறிக்கோளை நோக்கி நகர்ந்து வெற்றி அடைவோமாக.

திரு அரியபுத்திரன் லிங்கராஜ்
ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

**நீங்கள்
செய்யும் தவறை
உடனே திருத்திக்
கொள்ளுங்கள்
இல்லாவிட்டால்
இன்னொரு தவறைச்
செய்தவராகி
விடுவீர்கள்**

கன்பூசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத் தேடி

அடர்ந்த இருளில் ஒரு குடிசை வீடு. எங்கும் நாய்கள் ஊளையிடும் சத்தம். ஒருவித திகிலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. குடிசையின் உள்ளே ஒரு மண்ணெண்ணெய் விளக்கு தன்னை வருத்தி ஒளியை நாலா புறமும் பிரவகித்துக் கொண்டிருந்தது. அதன் மங்கும் ஒளியினுள் ஒரு மூலையில் பெண் ஒருத்தி ஏதோ ஒரு ஆழ்ந்த யோசனையில் சிக்குண்டிருந்தாள் . அப்படி என்ன சிந்தனை!

ஆம்! அது ஒரு பாரதூரமான விடயம் என அவள் முக அசைவிலிருந்தே அறியக்கூடியதாக இருந்தது. ஓலைப்பாயில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அவளது குழந்தை திடுக்கிட்டு வீறிட்டு அழ ஆரம்பித்தது. குழந்தையை தன் கையால் அள்ளி எடுத்து அதற்கு பாலைப் புகட்டினாள் . குழந்தையின் மழலைச் சிரிப்பு கவலைகளை கண்ணாடியாகச் சிதறடித்து அவளது சிந்தனையை கலைத்திருக்க வேண்டும்.ஆனாலும் தனது ஆழ்ந்த யோசனையில் இருந்து விடுபட்டாளில்லை. தனது வேதனை நிறைந்த வாழ்க்கையில் எடுத்த முடிவுகளை எடைபோட்டுக் கொண்டிருந்தாள் அபிராமி !

“வறிய குடும்பத்தில் பிறந்தவளெனினும் என்னுடைய திமிர் தன்னம்பிக்கையை யாராலும் எந்த சூழ்நிலையிலும் இலகுவாக தகர்த்து எறிய முடியவில்லை. அதற்கேற்றாற்போல் என் குடும்ப சூழ்நிலைகளை மாற்ற கல்வி எனும் ஆயுதம் மட்டுமே எனக்கு இருந்த ஒரே வழி. இதன் மூலமாவது எனது குடும்பத்திற்கு ஒரு விடியல் கிடைக்குமென நம்பி இருந்தேன்.

“பிள்ளை ஒழுங்காக படிச்சு நீ கம்பஸ் போக வேண்டும். அதுதான் என்னுடைய கனவு. நாம் பணக்காரர்களாக இல்லாததால் நம்மை ஒதுக்கி வைத்த உறவுகள் ஒரு நாள் எங்கள் காலடியில் வர வேண்டும். ஆனால் ஒரு விஷயம் பிள்ளை பணம் தான் வாழ்க்கை என்று ஆகிவிடக்கூடாது” என்று தலையை தடவிக் கொண்டிருந்தார் அம்மா.

“நீங்கள் கவலைப்படாதீர்கள். நீங்கள் நினைப்பது ஒரு நாள் நடக்கும் என்று புன்னகைத்தவாறே கூறினேன்.” அவ்வாறு எனக்கு பல்கலைக்கழக வாழ்வும் தேடி வந்தது. இனிமையாக நாட்கள் உருண்டோடிக் கொண்டிருந்தது. ஆனால் விதியின் கோலம் யாரை விட்டு வைத்தது.

பல்கலைக்கழகத்தில் அன்று ஒருநாள் !.

“ஹாய் அபிராமி நான் சுரேஷ் என்னை தெரிகிறதா” என ஒரு கம்பீரமான குரல்.
திடீரெனத் திரும்பிப் பார்த்தபோது நேரிய நிமிர்ந்த தோற்றத்துடன் நின்றிருந்தான். அவனை அண்ணாந்து பார்க்க வேண்டியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் உங்களை தெரியாமலா ? எவ்வளவு உதவிகள் செய்திருக்கின்றீர்கள்" என்றேன்.

"ம்ம் ஞாபகம் இருக்கிறது போலும். நான் அவசரமாக நூல் நிலையத்தை நோக்கிச் செல்கிறேன். மன்னித்து விடுங்கள்" என்று புறப்பட்டுச் சென்றான்.

சுரேஷ் எனது அயல் வீட்டில் தான் இருக்கின்றான். அவனை சிறுவயது முதலே எனக்கு நன்றாக தெரியும். பெண்களை மதிப்பவன் என்ற காரணத்தால் பழக வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்ட பொழுது தயக்கமின்றி பழக முடிந்தது. காலங்கள் சென்றாலும் எமது நட்பு ஆரோக்கியமானதாகவே இருந்தது.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி" எனது நட்பிற்கு வேறு பெயர் கொடுத்து விட்டார்கள்.

"அந்த பிள்ளை அபிராமி படிக்கிறன் என்று பல்கலைக்கழகம் போய் சரியான மோசம் போல"

"ஓம் நானும் கேள்விப்பட்டனான். குமாரின்ட மகனோட கதைக்கிறாளாம்"
என்ற பல கதைகள் ஆதாரமின்றி பரவிக்கொண்டிருந்தன. இச்செய்தி கடைசியில் என் வீட்டாருக்கும் எட்டியது.

"அம்மா நான் நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை. நட்பு மட்டும்தான். ஊரார்கள் ஒரு கதையை பத்தாகக் கதைப்பார்கள். அது அவர்கள் தொழில். மேலும் என்னை எந்த விதத்தில் நியாயம் படுத்திக்கொள்வது நீங்களே சொல்லுங்கள்" என்றேன் ஆவேசமாக.

"நீ இனி படிச்சது போதும். உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட ஏலாது என்ர சொல்லக் கேட்டுக்கொண்டு வீட்டுக்குள்ள இரு" என்றார் அம்மா.

நான் என்ன சொல்வது. வாய் பேசும் ஊமையாக நின்றேன் அந்த கணம்.

நாட்களும் ஓட மறுத்தன. ஆனாலும் என் வீட்டார் சும்மா இருந்தபாடில்லை. என் மச்சான் முறைக்காரனான ரவியை திருமணம் செய்து வைக்க பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. எனக்கு அவனது குணம் சற்றும் பிடிக்கவில்லை. இருந்தாலும் நான் என்னை நியாயப்படுத்திக் கொள்வதற்காக திருமணத்துக்கு சம்மதித்தேன். ஒருவாறாய் திருமணமும் இனிதே நடந்தேறியது.

எனது பெற்றோர் தமது கடமையைச் சரியாகச் செய்து முடித்துவிட்டோம் என்று ஆனந்தக் கடலில் நீந்தினர். நான் நினைத்தமாதிரி ரவி ஒன்றும் கெட்டவன் இல்லை என்று என் மனம் நினைக்கும் அளவிற்கு நடந்து கொண்டான். எமது குடும்ப வாழ்க்கையும் இனிதாகவே நடந்தேறிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பிறவிப்பயனாக நான் எனது மழலையைச் சுமந்து கொண்டு இருந்தேன். எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இதுதான் வாழ்க்கையின் மிகப்பெரிய ஆனந்தம் என நினைத்துக் கொண்டிருந்தேன் நான். ஆனாலும் யாரறிவார்? பசுந்தோல் போர்த்திய புலி போல் என்னிடம் நாடகம் ஆடுவான் என்று. அவனது நடத்தையில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் தெரிந்தது. முன்பு இருந்தது போல என்னிடம் கதைப்பதுமில்லை. சில நாட்களில் மாறி விடுவான் என நம்பி இருந்தேன். ஆனால் அவனது நிலை மோசமாகிக் கொண்டிருந்தது. இல்லை இல்லை அவனது வேஷம் கலைந்து கொண்டிருந்தது.

இரவு பத்தாகியும் ரவி இன்னும் வீட்டுக்கு வரவில்லை. அவனுக்காக காத்திருந்து அயர்ந்த வேளையில்
"டொக்... டொக்..."
கதவு தட்டும் சத்தம் பலமாக கேட்டது. அந்த நடுநிசியில் அந்த சத்தம் என் காதுகளை எட்டி தூக்கத்தை கலைத்தது.

எழும்பிச் சென்று கதவைத் திறந்தேன்.

திறந்த கணம் ரவி நின்றிருந்த நிலை என் மனதை ரணமாக்கியது. இதுவரை நான் அறிந்திராத அவனின் முகம்

மது போதையில் தள்ளாடியபடி நின்றிருந்தான்.

"எப்போதிலிருந்து உங்களுக்கு இந்த பழக்கம்" என்றேன்.

"நான் இப்படித்தான். உனக்காக என்னை இனியும் மாற்ற முடியாது. என்னை உள்ளே விடு" என்றான் ஆவேசமாக.

மதுபோதையில் அவனது வார்த்தைகளை தடுமாறி வந்தன. அதனை என்னால் கேட்டுப் பொறுத்திருக்கவும் முடியவில்லை.

இதை விட அவனுக்கு வேறு பல தீய பழக்கங்கள் இருந்தது என்பதை நாளடைவில் அறிந்து கொண்டேன். எனது வாழ்க்கையில் நான் நினைத்தது வேறு கடவுள் நினைத்தது வேறு. எல்லாம் என் சம்மதத்துடன் நிகழ்ந்தவை தான். அதனால் நான் யாரிடம் நீதி கேட்டு செல்வது? கணவனிடம் தான் கேட்க முடியும்.

ரவியை திருத்துவதற்கு பல முயற்சிகள் எடுத்தும் தோல்வியை மட்டும் தான் சந்தித்தேன்.

மது மாது என எல்லா பழக்கவழக்கங்களுக்கும் அவனே உறைவிடமாக விளங்கினான். மழலை பிறந்தும் அவன் திருந்தியபாடில்லை. அவனது கொடுமைகள் மேலும் மேலும் அதிகரித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் அவனது கொடுமைகளைத் தாங்க முடியும். ஆனால் என் பிள்ளையால்?

நான் தனியாக செல்வதென்று முடிவு செய்து தனியாக எனக்கென இருந்த சிறு காணியில் குடிசை போட்டுத் தங்கி இருக்கிறேன். பெண் என்றால் கடைசிவரை யாருக்காகவும் அடிமையாக வாழ வேண்டும் என்று அர்த்தம் இல்லை. நான் எனது விடியலுக்கான பயணத்தில் இறங்கிவிட்டேன்." திடீரென ஏதோ சத்தம் கேட்டு சிந்தனை கலைந்தாள் அபிராமி ! அவள் கண்களில் நீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அவள் வாழ்க்கையில் நடந்தது அனைத்தும் துரோகம் தான். ஆனால் அவள் அதை எத்தனை நாட்கள் நினைத்துக் கொண்டிருக்க முடியும்?

தனக்காக இல்லாவிடினும் தன் மகளுக்காக இந்த விடியலை நோக்கி பயணித்துத்தான் ஆகவேண்டும். இனிமேலாவது இந்தப் பயணத்தில் அவள் வெற்றி காண்பாளாக.

நிருபா சிவகுமார்
12C
உயிரியல் 2019

**நம் அனைவருக்கும் ஒரே
மாதிரி திறமை இல்லாமல்
இருக்கலாம் ஆனால்
அனைவருக்கும் திறமையை
வளர்த்துக்கொள்ள ஒரே மாதிரி
வாய்ப்புகள் உள்ளன**

டாக்டர் அப்துல் கலாம்

**சோதிப்பது
காலமாக இருந்தாலும் ....
சாதிப்பது
நீங்களாக இருங்கள்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவத்துப் பிள்ளைகளும் பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்களும்

இன்றைய சமுதாயத்தின் இளம் தலைமுறையினர்தான் வருங்கால உலகை வளமுள்ளதாக உருவாக்கும் ஒளிவீசும் நட்சத்திரங்களாவர். இவர்கள் யாவரையும் மாறிவரும் உலகின் மாற்றங்களுக்கேற்ப எதிர்கால சவால்களை எதிர்கொள்ள கூடியவர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் ஆகியோரைச் சார்ந்ததாகும். உலக மாற்றங்களையும் விந்தைகளையும் படைப்பவர்கள் கட்டிளமைப் பருவத்தில் உள்ளவர்களேயாவர். அவர்கள் தான் புதிதாக சிந்தனை செய்பவர்களும், சிந்தித்த விடயங்களை பயமின்றி துணிந்து செய்பவர்களும் ஆவர்.

கட்டிளமைப் பருவம் எனும்போது பிள்ளைப் பருவத்துக்கும் முதிர்ச்சிக்கும் இடைப்பட்ட பருவம் ஆகும். இது பிள்ளைகளின் பருவம் மாறும் ஒரு நீண்ட காலப் பகுதியாகும். இரு பாலினருக்கும் பொதுவாக 10 தொடக்கம் 20 வயது எல்லையைக் கொண்டிருக்கிறது. எனினும் இப் பருவத்தின் தொடக்கத்தையும் முடிவையும் திட்டவட்டமாக கூறமுடியாது. எமது பாரம்பரிய சமுதாயத்தில் பிள்ளைகள் பெற்றோரில் தங்கி வாழ்வதாலும் தமது இளமைக்குணங்களை தொடர்ந்து காட்டுவதாலும் 25 அல்லது 30 வயதுவரை கட்டிளமைப் பருவம் நீடிக்கிறது எனக் கூறப்படுகின்றது.

இப் பருவத்தினரிடையே உடலியல் மாற்றங்கள், மன வளர்ச்சி மாற்றங்கள், சுதந்திர உணர்வு, சகபாடிகள் தொடர்பு, எதிர்ப்பாலினர் தொடர்பு, நுண்ணறிவுத் திறன், தொழில் தெரிவு, ஓய்வு நேர செயற்பாடுகள், வீரதீர செயல்களில் ஈடுபடல், புது அனுபவ நாட்டம், சுய எண்ணக்கரு விருத்தி, அறநெறிப் பண்புகள் போன்ற பல இயல்புகள் காணப்படக் கூடியவை. அவ்வியல்புகளால் பல சாதக பாதக விளைவுகள் ஏற்படலாம்.

இன்றைய சமூகத்தில் கட்டிளமைப் பருவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற பல செயற்பாடுகள் பிரச்சினைகளாக, குற்றங்களாக பதிவாகிக் கொண்டே இருப்பதை நாம் நாளாந்தம் அறிந்து கொண்டிருக்கின்றோம். புகைத்தல், போதைப் பழக்கம், கைத்தொலைபேசி பாவனைகளால் ஏற்படுகின்ற எதிர்விளைவுகள், முகநூல் பாவனையின் தீய விளைவுகள், பழிவாங்கல் முயற்சிகள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தற்கொலை என அப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது அவசியமும் அவசரமுமான ஒன்றாகும்.

இப்பருவ வயதினையுடைய பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு சமவயது குழுக்களுடன் இணையத் தொடங்குகின்றனர். இதனால் சகபாடிகளின் பழக்கவழக்கங்கள் நடத்தைகள் செயற்பாடுகள் என்பன அவர்களை கவர்ந்திழுக்கும். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல தம்மை அலங்கரித்துக் கொள்வதிலும் பெரியவர்களாகக் காட்டிக் கொள்வதிலும் அவர்கள் நாட்டம் அதிகரிக்கும். பெற்றோருடன் வீட்டில் அவர்கள் இருக்கும் நேரத்தைவிட நண்பர்களுடன் இருக்கும் நேரமே கூடுதலாக இருப்பதும் அதற்கு ஒரு வகை காரணமாகிறது.

இன்றைய நவீன தொடர்பாடல் சாதனங்களான கைத்தொலைபேசி, முகநூல், சமூக வலைத்தளங்களின் பாவனை இளையோர் மத்தியில் அதீத செல்வாக்குப் பெற்று இருக்கின்றன. இவற்றின் பாவனையால் பிள்ளைகள் பெற்றோரின் கனவான கல்வி உலகை மறந்து காதல் உலகில் வாழ்வதும் காதல் நிறைவேறாத போது தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதும் பெற்றோருக்குப் பாரிய சவால்களாக அமைகின்றன.

அதுமாத்திரமன்றி புகைப்பழக்கம், போதைவஸ்து பாவனை என்பன பாடசாலை மாணவர்களிடையே பெரிதும் காணப்படுகின்றது என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. மாணவர்களை உடல் உள சமூக ரீதியாக சிதைவடையச் செய்யும் இப்போதைப்பொருள் கட்டிளமைப் பருவத்து சமவயதுக் குழுக்களிடையே அதிகம் பாவனையில் உள்ளது. திட்டமிட்டுச் சிதைக்கப்படுகின்ற தமிழரின் கல்விப் பாரம்பரியத்திற்கு இன்றைய இளைஞர்கள் பலியாவது மிகவும் வேதனைக்குரியது.

படித்த மேல்தர வர்க்கத்தில் உள்ள பெற்றோரின் பிள்ளைகளின் கைகளில் போதியளவு பணப்புழக்கம் காணப்படுவதும் இதற்கு ஒரு காரணமாக அமைகிறது. பிள்ளைகள் பெற்றோரை ஏமாற்றி தமது ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்கென பணத்தினைக் கேட்கும் போது பெற்றோர் ஏதும் அறியாது கொடுப்பதும் கொடுக்காவிட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணி வழங்கும் போது அப்பணம் தவறான பழக்கத்துக்கு பிள்ளைகளை இட்டுச் செல்கிறது.

இன்று க.பொ.த சாதாரண தரம் கற்றுச் சித்திபெற்று உயர்தரம் செல்லும்வரை அநேக பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், உயர்தரம் சென்ற பின்னர் அவர்களால் ஏற்படுகின்ற பிரச்சனைகள் தான் பெற்றோரை கதி கலங்கச் செய்கிறது.

பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாது விடுதல், ஆசிரியர்களுடன் முரண்பாடுகளை தோற்றுவித்தல், சகபாடிகளோடு சேர்ந்து திரையரங்குகளில் பொழுதைப் போக்கல், தேவையற்ற இணையத்தளங்களை குழுவாக அமர்ந்திருந்து பார்த்தல், கோஷ்டி மோதல்களில் ஈடுபடுதல், மோட்டார் வண்டிகளை மிக வேகமாகச் செலுத்தி சாதனை படைக்கத் துணிதல், இதனால் விபத்துகளை சந்தித்தல் முதலிய பல எதிர் விளைவான செயற்பாடுகளில் இப்பருவத்தினர் ஈடுபடுகின்றனர்.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ள பெற்றோர் பலர் இப் பிரச்சனைகளால் அவமானங்களைச் சந்திப்பதும் தமது வேலைத் தளங்களில் பல அசௌகரியங்களை சந்திப்பதும் பிள்ளைகளை போதையில் இருந்து மீட்க வழி தெரியாது திண்டாடுகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

பெண் பிள்ளைகளை பொறுத்தமட்டில் இவ்வயதுக் குழுவினர் பெற்றோருடன் கதைத்து தெரிந்து கொள்ள வேண்டிய பல விடயங்களை நண்பிகளுடன் பகிர்ந்து கொள்வதால் பல பிரச்சனைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. அறிந்தும் அறியாத பருவ வயது வேறுபாடுகள், மன உணர்வுகள், எதிர்காலக் கனவுகள் என்பன பற்றி சமவயதுக் குழுவினருடன் பகிர்ந்து கொள்ளப்படும் போது தவறான விளக்கங்கள் வழிகாட்டல்கள் என்பன ஏற்பட்டு விடுகிறது. இதனால் அவர்கள் எப்போதும் தனிமையை விரும்புவதுடன் தவறான நபர்களுடன் முகநூல் வழியாக இணைந்து கொள்ளவும் கல்வியில் நாட்டத்தைக் குறைக்கவும் தலைப்படுகின்றனர்.

தம்மிலும் வயதிலேயே கூடிய ஆண் நண்பர்களின் தொடர்புகள் ஏற்படுகின்ற போது இப்பருவ வயதுப் பிள்ளைகள் அவர்களின் ஏமாற்று வலையிலே வீழ்ந்து தமது எதிர்காலத்தை, பெற்றோரின் தொலைதூர கனவுகளை சிதைத்து விடுகின்றனர். இதனால் இன்று நாட்டிலே சிறுவர் திருமணங்கள் நடந்ததேறுவதும், இளவயதிலே தாய்மை அடைவதும் வாழ்க்கை சுமையாகின்றபோது தற்கொலை செய்து கொள்வதும் அரங்கேறுகின்ற அடையாளங்களாகும்.

பிள்ளைகளின் இவ்வாறான நடத்தைக் கோலங்களுக்கு தனியே அவர்களை மாத்திரம் குறை கூறிவிட முடியாது. இன்று பல குடும்பங்களில் நல்ல பெற்றோராக இருப்பது எப்படி என்பது தெரியாது பலர் வாழ்கின்றனர். ஆக்கத் திறன் கொண்ட பெற்றோர்களாக பிள்ளைகளின் ஆக்கத்திறன்களை மதிக்கின்ற வளர்க்கின்ற பெற்றோர்களாக அனைவரும் உருமாற்றம் பெறவேண்டியுள்ளது. நவீன வாழ்வின் அவசரங்களிடையே பொருளீட்டலை மையப்படுத்திய நோக்கில் பிள்ளைகளோடு உறவு கொள்வதற்கான பொழுதுகளை பெற்றோர் இழந்து விடுகின்றனர். கூட இருக்கின்ற பொழுதுகளைக்கூட தொலைக்காட்சியில் தொலைத்து விடுகின்றனர். இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டிய தேவை இன்றியமையாததாகும்.

இலத்திரனியல் ஊடகங்களை முற்றாகத் தவிர்த்தல் என்பது அசாத்தியமானது. எனினும் அந்த ஊடகங்களின் வல்லமையை சரியான முறையில் மாற்றுகின்றபோது பிள்ளைகளின் மன மேம்பாட்டுக்கான நல்ல பொழுதுகளாக கூட அமைக்க முடியும். பெற்றோர் பிள்ளைகளோடு ஒன்றாக அமர்ந்திருந்து கதைத்தல், உணவு உண்ணுதல் முதலிய செயற்பாடுகளில் கட்டாயம் ஈடுபட வேண்டும்.

பெற்றோராக கிடைத்த வாழ்வு அற்புதமானது. ஆனால் சுகமானதல்ல எனும் சமூக உளவியலாளரின் கூற்று இன்றைய பெற்றோருக்கான பொறுப்புக்களையும் அதனை எய்தலுக்கான அவர்களின் மன உறுதியையும் வேண்டி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப் பருவத்தில் உள்ள பிள்ளைகளால் சமூகத்தில் பிரச்சனைகள் தோற்றுவிக்கப்பட்டாலும் எல்லாப் பிள்ளைகளாலும் பிரச்சினைகள் எழுவதில்லை. சரியான முறையிலே ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து கல்வியில் முன்னேறி தமது பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பெருமையைத் தேடித்தருகின்ற பிள்ளைகள் பலரும் நம்மில் காணப்படுகின்றனர் என்பதும் மறுப்பதற்கில்லை.

எனவே பெற்றோர்கள் தம் பிள்ளைகளை நல்ல முறையில் வழிகாட்டி சமய, சமுதாய விழுமியங்களில் இருந்து தாமும் பிறழாது அவர்களையும் வளர்தெடுக்க வேண்டும். பாராட்ட வேண்டிய போது பாராட்டி, கண்டிக்க வேண்டிய போது கண்டித்து வளர்த்து வந்தால் அவர்களும் சமுதாயத்தில் நற்பெயர் பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்பர்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே"

எனும் சினிமா பாடல் வரிகளையும்

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"
எனும் வள்ளுவர் கூற்றையும் மனதிலே கொண்டு பெற்றோர் செயல்படும்போது பிள்ளைகள் நல்லவர்களாக வளர்வார்கள்.

"கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே அது உன்னைக் கொன்று விடும்.
உன் கண்ணைத் திறந்து பார் அதை வென்று விடலாம்"

எனும் அப்துல் கலாம் கூற்றுக்கிணங்க பிள்ளைகள் நெறிபிறழ்கின்ற போது பெற்றோர் அவர்களை வெறுத்து ஒதுக்காது பிள்ளைகள் எம்மவர்கள் எனும் தன்மையில் அவர்களை மதித்து நடக்க வேண்டும். யோகாசனம், உடற்பயிற்சிகள், கலை நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள், சாரணியம், ஜிம் முதலிய செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களின் உடலையும் உள்ளத்தையும் வலுப்படுத்த வேண்டியது பெற்றோரின் கடமையும் பொறுப்புமாகும்.

உசாத்துணை நூல்கள்

கல்வி உளவியல் அடிப்படைகள்:-யோ.பெனடிக்ற்பாலன்
கல்வி உளவியல் அடிப்படைகள்:- ச.முத்துலிங்கம்

திருமதி கணேஸ்வரி தனமூர்த்தி
ஆசிரியை
யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காப்புக் கலை

தற்காப்புக் கலை என்பது தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும் ஒரு உத்தியாகும். இக்கலையை அனைவரும் அறிந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பாதுகாப்பை பிறரிடமிருந்து தான் எதிர்பார்க்கிறார்கள் தவிர தாமே தம்மை பாதுகாக்கும் நோக்கம் எவரிடமும் காணப்படுவதில்லை. ஆனால் இக்கலையானது தற்காலத்தில் மிகவும் அவசியமானதொன்றாக கருதப்படுகிறது. மாறி வரும் நவீன காலத்தில் துஸ்பிரயோகம், களவு, கற்பழித்தல், கொலை போன்ற கொடூரமான செயல்கள் நடைபெறுவதை நாம் அனைவரும் காண்கின்றோம். அந்த வகையில் இக் கொடூரச் செயல்களில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள். நம் யாழ்ப்பாண சமூகத்தில் அதிகமாக பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள். பெண்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள தற்காப்புக் கலையை அனைவரும் பயில வேண்டும்.

அந்த வகையில் எமது இந்து மகளிர் கல்லூரியில் பெண்களைப் பாதுகாக்கும் நோக்கோடு பெண் பிள்ளைகளை தன்னம்பிக்கையுடன் எதையும் எதிர்கொள்ளும் ஆற்றலை வளர்க்கும் முகமாகவும் இத்தற்காப்பு கலைகளில் ஒன்றாக கராத்தே எனும் கலையினை எமது கல்லூரி முன்னெடுத்து வருகிறது. அதனை ஒரு விளையாட்டு துறை சார்ந்ததான விளையாட்டாக மாற்றி பல பெண்பிள்ளைகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தற்காப்புக் கலைக்கு திரு ரமணிகாந் அவர்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எமது கல்லூரியில் பயிற்சி ஆசிரியராக கடமையாற்றுகின்றார். அவர் பல மாணவர்களை பயிற்றுவித்து அவர்களை பாடசாலை மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற வைத்தவுடன் அதில் சிறப்பு தேர்ச்சி அடைய செய்து தேசிய மட்டம் வரை செல்ல வைத்துள்ளார்.

நம் சமூகத்தில் அவர்களை எதனையும் சாதிக்கும் தன்னம்பிக்கை உடைய மாணவர்கள் ஆக்கியதோடு எமது பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பயிற்சி வழங்கப்படுகிறது. எமது பாடசாலை ஒரு சிறந்த விளையாட்டுத் துறையினைக் கொண்டமைந்த பாடசாலை என்ற பெருமை இத்தற்காப்புக் கலைப் பயிற்சியினால் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் நம் சமூகச் சூழ்நிலை அறிந்து எமது பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். இக்கலையினை நாம் பெறுவதற்கு காரணமாகவிருந்த எமது கல்லூரிக்கும், எமது பயிற்சியாளரான ரமணிகாந் ஆசிரியருக்கும் நன்றி கூறுவதில் எமது கல்லூரி மாணவர்கள் பெருமையடைகின்றார்கள். ஏனெனில் இக்கலையானது வேறு எந்தப் பாடசாலைகளிலும் அதிகமாகக் காணப்படுவதில்லை. அந்த வகையில் எமது கல்லூரி மூலம் நாம் பயிலுவதற்குரிய வாய்ப்பினைப் பெற்றமைக்கு நாம் பெருமையடைகின்றோம். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளை எமது கல்லூரி நோக்கக் கூற்றான எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் ஆளுமை மிக்கவர்களாக ஆக்குவதற்கு இக்கலை உதவுகின்றது. எனவே இதனைச் சிறப்பான முறையில் பயின்று பயன் பெறுவோமாக.

ச. சானுஜா
12B, கலை 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவின் பதிவுகள்-----------!

மூன்று புறமும் கடல் சூழ நல்ல முத்தமிழ் ஓங்கிப்புகழ் பரப்ப
ஆன்றவிந்த அறிஞர்களும் அடல்வீரம் பொருந்திய மறவர்களும்
வாழ்ந்து சிறந்திட்ட யாழ் மண்ணில் புகழ்பூத்த பெண்கள் கல்லூரியில்
நான் பயின்ற காலத்தை எண்ணியே நனவிடை தோய்ந்திடகவி படைத்தேன்.
ஆழவேரூன்றி அகலக்கிளை பரப்பி சீலமும் பண்பும் சேர்த்தே வழங்கி
காலைப் பொழுதின் கதிர் பரந்தது போல் கல்வியறிவை ஊட்டியதோடு
உள்ளேயிருந்து உலகினைக் காட்டிய உத்தமப் பெண்களின்
பொற்பதம் பணிந்தே சொற்றமிழால் நினைவூட்டிடவந்தேன்.

கண்டிப்போடு கட்டுப்பாடும் கண்ணாடிக்குள்ளால் கனன்ற பார்வையும்
எண்ணிய கருமமும் இனிதே முடிக்கும் திண்ணிய மனமும் திடமுறு மொழியும்
கொண்ட அதிபர் விமலா ஆறுமுகம் கல்லூரிக்காக கடுமையாய் உழைத்தவர்
கட்டைச்சட்டை கண்டால் போதும் "மடிப்பை அவிழ்" என்பர் மறைந்தே திரிவோம்
கன்னியர் வாழ்வில் காவலாய் நின்றவர்

அடுத்து வந்தவர் அதிபர் பத்மாவதி இராமநாதன்
நெடுத்த தோற்றமும் நேரிய பார்வையும் நிமிர்ந்த நடையும் பாங்காய்
உடுத்த சேலை ஒழுங்கும் கண்டால் ஒதுங்கிப்பணிவோம்.
எங்கள் உயர்தரவகுப்பில் பொருளியல் ஆசிரியையாய் புகன்றது நிறைந்த அறிவுரைகள்
பழக்க வழக்கம், பணிவு, அடக்கம் பண்புகள் கொண்ட
பெண்களாய் மாற்றும் நன்மொழி நிறையவே நாளும் கேட்போம்
"பொம்பிளைப் பிள்ளையள் தம்மைச்சுற்றி ஒருகோடு
வரைந்து கொள்ளவேண்டும்"
அடிக்கடி சொல்லும் அமுதமொழிகள்! அனைத்தும் வைரம்!
அம்மையார் காலத்தில் கல்லூரிப் பெருமை மேன்மையடைந்தது.

காஞ்சிப்பட்டும் கஸ்தூரிச் சாந்தும்
மஞ்சள் மின்னும் மங்கையர் திலகமாய்
புவியியல் தந்திடும் புஸ்பா செல்வநாயகம்
வகுப்பறை வந்தால் 'கப்சிப்' எனவே சத்தம் அடங்கும்
சித்திரப் பாவைப் போல்இருந்திடும் வேளையில்
எங்கிருந்தோ வரும் ' கொட்டாவி ' கண்டால்
எழும்பி வெளியே நின்றிட வேண்டும்.
ஆளுமைமிக்க பெண்கள் வரிசையில்
ஆழப் பதிந்தவர் மறுப்பதற்கில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமிகும் எங்கள் கல்லூரி கண்ட தீரம் மிக்க பெண்களுக்குள்ளே
திருமதி சபாநாயகம் காரோட்டி வருவார்
தமிழைத் தமிழாய்க் கற்பித்த தாயவர் தரமிக்க கட்டுரைகள்
வகுப்பறை தன்னில் வாசிக்கச் செய்வார் வாழ்த்திடுவார்
தட்டிக் கொடுத்தே தமிழைத் தந்ததால் தமிழாசிரியையாய் ஆனேன் நானும்

குடுகுடுவெனவே வகுப்பறை வந்து
சடசடவெனவே எங்களை நோக்கி
கழுதைகள் குதிரைகள் காண்டாமிருகங்கள்
நிறைந்த வகுப்பறை இதுவெனக் கூறி
உயர்தர வகுப்பில் தமிழாசிரியையாய்
உன்னதமாகப் பாடம் நடத்தி சிரிப்பும் கதையுமாய்
சிந்தனை நிறைவைத் தந்தவர் திருமதி நாகரட்ணம்

தீராத்துன்பம் சூழ்ந்த போதிலும் சோராதிருந்தவர் தம்புமிஸ்
சைவமும் தமிழும் கணிதமும் தழைத்திட
தளராத சேவையைத் தானாய்வழங்கி கல்லூரியோடு கலந்தவர்
நேர்த்தியான ஆடை அலங்காரம் நிகரில்லாத கற்பித்தலாற்றலால்
சேர்த்தே எம்மைக் கட்டியேபோட்டு
சிந்தை நிறைந்திடும் சிரிப்பை வழங்கி
சிறப்புடை மாணவியரை சீர்தூக்கிப் பாராட்டி
இந்து நாகரிக பாடத்தைத் தந்த எங்கள் ஜெகநாதன் மிஸ்
நாங்கள் விரும்பும் நல்லாசிரியையாய் நாளும் இருந்தவர்
எழுதத் தூண்டும் எண்ணங்கள் வளர்த்து
ஏணியாக எம்முள்ளே நின்றவர்

கல்லூரி கண்ட கம்பீரமான பெண்கள் வரிசையில்
கலையா அழகும் குலையா மிடுக்குமாய்
கண்டிப்போடு காவலாய் வலம் வரும்
ரட்ணம் மிஸ்சைக் கண்டால் ஓடுவோம்

தன்பிள்ளைபோலத் தழுவிடும் வார்த்தைகள்
தடி எடுத்தாலும் தாய்போல் அணைக்கும்
சிரித்தபடியே பாடம் நடத்தும் சிவலிங்கம் மிஸ்சின்
சேலை கட்டும் அழகை ரசிப்போம்

பொருளியல் பாடம் புகட்டிட வந்து
புதிய கருத்துக்கள் மனங்களில் பதித்து
இருளை நீக்கிடும் எண்ணங்கள் விதைத்தவர்
யோகேஸ்வரி கந்தையா மிஸ்
சிரித்துச் சிரித்துக் குழப்படி செய்ததால்
பொறுத்துப் பொறுத்துப் பார்த்தே களைத்து
ஆசிரியர் ஓய்வறை அருகே எங்கள் அடங்கா
வகுப்பறை தன்னைமாற்றி அடக்கிவைத்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பாடம் அழகாய் நடத்தும் திருமதி பாலசுப்ரமணியம்
தினமும் எங்களை வாழ்த்தியே பேசுவார்
அதற்கு சிரித்து அடிவாங்கி நிற்போம்.

ஆங்கிலம் தன்னை அழகாய்ச்சொல்லும்
அமைதியின்வடிவம் வாசுதேவன் மிஸ்
ஆர்ப்பரிப்பில்லா மொழியால் பேசி
அழகாய் விளக்கும் விஸ்வநாதன் மிஸ்
கல்லூரிப் பண்பாட்டோடு கலந்துநின்ற காதர்மிஸ்
திருமதி சலாம் விவசாயம் தந்த சிவகுருநாதன்
விடுதிக் காவலர் வீரபத்திராய் குமாரசாமி மிஸ்
இப்படி எத்தனை எத்தனை ஏணிப்படிகள்
"உன்னுள்ளே நீ உன்னைத் தேடு" என
ஒவ்வொரு பிள்ளையையும் உன்னதப் பெண்ணாய்
உருவாக்கி விட்ட நல்லாசிரியர்களை மறந்திடமுடியுமா?
அவருக்கு விருதுகள் இல்லை ... ! விளம்பரமில்லை ...!
விளக்குகளாகி வித்தைகள் புகட்டிய மேன்மையால்
எங்கள் கல்லூரி ஓங்கிய நன்றியை நாங்கள் மறந்திடமுடியுமா?
கற்பனைச்சிறகுகள் விரித்து உயர்ந்திடும்
கல்லூரிக்காலம் கனவுகள் நிறைந்தது.
இந்து மகளிர் கல்லூரி என்னும் இமயத்திலேறி
சிகரம் தொட்டிட வழிகாட்டியாக நின்றவர்
பாதம் வணங்கிப்பணிவோம்.

திருமதி. சத்தியபவானி செபமாலைதாசன்
பழையமாணவி
ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

என்ன நடந்தாலும்
எதை இழந்தாலும்
சோர்ந்து போகமாட்டேன்
காரணம்
நான் 100 வெற்றிகளை பார்த்தவன்
அல்ல
1000 தோல்விகளை பார்த்தவன் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய காலகட்டத்தில் இரண்டாம் தேசிய மொழியின் (சிங்களம்) அவசியம்

ஒரு மனிதன் தன்னுடைய சிந்தனைகள், எண்ணங்கள், உணர்வுகள் தேவைகளை வெளிப்படுத்தும் ஊடகமே மொழியாகும். உலகில் பல்வேறுபட்ட சமூக கலாசார சூழலில் பல்வேறு வகையான எழுத்துருவிலான மொழிகளும் பேச்சு வழக்கில் மட்டுமே உபயோகிக்கப்படும் பாஷைகளும் உண்டு.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் பல்வேறு இனம், சமூக கலாசார பின்னணிகளை கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழ்கின்ற நாடாகும். இங்கே பெரும்பான்மை மக்களாக சிங்களவர் காணப்படுகின்றனர். அவர்கள் பேசும் மொழி சிங்களம். ஏனைய தமிழ் முஸ்லிம் இனத்தவர்கள் தம் தாய்மொழியாக தமிழைப் பேசுகின்றனர்.

எமது நாட்டின் தேசிய மொழிகளாக சிங்களம், தமிழ் மொழி என்பன விளங்குகின்றன. இணைப்பு மொழியாக ஆங்கிலம் காணப்படுகின்றது. நாட்டில் வாழுகின்ற சகல சிங்கள பிரஜைகளும் தமது இரண்டாம் தேசிய மொழியாக தமிழையும் தமிழ் முஸ்லிம் மக்கள் தமது இரண்டாம் தேசிய மொழியாக சிங்களத்தையும் கற்க வேண்டியது கட்டாயப்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில் அரச உத்தியோகத்தர்களும் இரண்டாம் தேசிய மொழியில் சித்தியடைதல் வேண்டும் என்று அரச சுற்றுநிருபம் சுட்டிக் காட்டி நிற்கின்றது. 2017ஆம் ஆண்டுக்குப் பின் நியமனம் பெறும் அரச உத்தியோகத்தர் அனைவரும் இரண்டாம் தேசிய மொழி சித்தியடைதல் வேண்டும்.

இப்பொழுது தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு என்பன அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இரண்டாம் மொழிச் சிங்களம், இரண்டாம் மொழி தமிழ் போன்றவற்றை அரச பாடத்திட்டத்தில் சேர்த்து உள்ளது. அத்தோடு அரசகரும மொழித் திணைக்களத்தால் மட்டம் 3, மற்றும் 2, மட்டம் 1 என்ற மொழிப்பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில் தமிழ் மாணவர்கள் தங்களது எதிர்காலத்தை வளமானதாக அமைத்துக் கொள்ள இரண்டாம் மொழி சிங்களத்தையும் ஊடக மொழியாக ஆங்கிலத்தையும் கட்டாயம் கற்க வேண்டிய தேவை உள்ளது.

இதன் மூலம் வேலை செய்யும் அரச உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பின் போது முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அத்தோடு கல்விப் புலத்தில் உள்ள அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வி நிறுவகத்தோடு சம்பந்தப்பட்ட அனைவரும் இன்று கட்டாயமாக இரண்டாம் மொழியை கற்க வேண்டி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசத்தில் தமிழ் மொழி பேசும் மாணவர்கள் ஏனைய இன மாணவர்களுடன் பழகும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைந்து காணப்படுவதால் ஏனைய மொழிகளைப் பேசுவதில் பின்தங்கி காணப்படுகின்றனர். ஆனால் ஏனைய பிரதேச தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியில் பரிச்சயமானவர்களாக உள்ளனர். சர்வதேச மொழியான ஆங்கிலத்திலும் பரிச்சயமாகக் காணப்படுகின்றனர். எனவே இரண்டாம் மொழியான சிங்களமும் ஊடக மொழியான ஆங்கிலமும் இன்றைய காலத்தின் தேவையாகும். இதை நாம் அனைவரும் விரும்பி கற்க வேண்டும்.

திருமதி ய. லோகேஸ்வரன்
ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

ஒரு பறவை மரத்தின் கிளையில்
அமரும் போது
அது எந்த நேரத்திலும்
முறிந்து விடும் என்ற
பயத்தில்
அமருவதில்லை
ஏன் என்றால்
பறவை நம்புவது
அந்த கிளையை அல்ல
அதன் சிறகுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்களும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளும்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்க நோயின்றி வாழ்வதே உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் மிகச்சிறந்த வாழ்வாகும். உலகில் வாழும் அனைத்து மக்களும் நீண்ட காலம் உயிர் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். ஆனால் இன்றைய நவீன காலத்தில் தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் என்று பல எண்ணிலடங்கா வியாதிகள் மனிதன் இடையே புகுந்து வருத்தி வாழ்நாளைக் குறைக்கின்றன.

மருத்துவ சோதனையில் ஒரு நோயானது நோயை உருவாக்கும் பண்பு கொண்ட வைரஸ், பக்டீரியா, புரோட்டோசோவா போன்ற உயிரினங்களின் காரணமாக ஏற்படுகிறது என்பது உறுதி செய்யப்பட்டால் அந்நோய் தொற்று நோய் என அழைக்கலாம். நேரடித் தொடுகையினால்,காற்றின் வழியாக, நீரின் ஊடாக, உணவினால், ஒரு நோய்க்காவி போன்றவற்றால் இத்தொற்று நோய்கள் பரவுகின்றன. தடிமன், காய்ச்சல், டெங்கு, மலேரியா, நுரையீரல் அழற்சி, எய்ட்ஸ், வயிற்றுப்போக்கு, காசநோய் போன்றன பிரதானமாக மக்களிடையே பரவிக் காணப்படும் தொற்றுநோய்கள் ஆகும்.

தொற்று நோய்களைத் தவிர இன்றைய சூழ்நிலையில் தொற்றாநோயே வாழ்நாள் முழுவதும் ஒரு மனிதனுக்கு பாரிய அசௌகரியங்களை அளிக்கிறது. உலக சனத்தொகையில் 33 வீதத்திற்கும் அதிகமானவர்கள் தொற்றா நோய்களுக்கு ஆளாகி உள்ளதாகவும் உலகில் ஏற்படும் மரணங்களில் 63 வீதமானவை தொற்றா நோய்கள் காரணமாகவே ஏற்படுகின்றது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. நீரிழிவு, ஆஸ்துமா, குருதி அழுத்தம், மாரடைப்பு, புற்றுநோய், கொலஸ்ட்ரால், ரத்தக் குழாயில் கொழுப்புப்படிதல், போன்றன மக்களிடையே பரவலாகக் காணப்படும் சில நோய்களாகும். இந்நோய்கள் பரம்பரை காரணமாக, உணவுப் பழக்கம் காரணமாக, உடற்பயிற்சி முறையான அப்பியாசம் செய்யாமை போன்ற பல காரணங்களால் ஏற்படுகின்றன. உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, கொலஸ்ரோல் என்பன சமூகத்தில் இன்று ஒரு சாதாரண விடயமாகி விட்டது. இவை எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும். எனவேதான் இவற்றில் இருந்து விடுபடுவதற்கான உத்திகளை நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் தேடி அவற்றைச் சிறு பராயத்திலிருந்தே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட சில தொற்றா நோய்களின் குணங்களும் அதன் அறிகுறிகளும் அந்த நோயைக் குணப்படுத்தக் கூடிய வழிகளையும் பற்றி நாம் நோக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளான நீரிழிவைப் பற்றி நோக்குவோமாயின் நீரிழிவு என்பது வளர்சிதை மாற்ற நோய்களின் ஒரு தொகுப்பாகும். நீரிழிவு தொற்றா நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தினசரி சர்வதேச ரீதியில் அதிகரித்து வருகிறது. 20 வீதம் பேர் இந்நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கும் அதேவேளை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் தற்போதுள்ள நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. நீரிழிவு சீனி வியாதி அல்லது சர்க்கரை வியாதி என்றும் அழைக்கப்படுகின்றது. தேவையான இன்சுலினை உடல் உற்பத்தி செய்யாத அல்லது உற்பத்தி செய்த இன்சுலினைப் பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்த இயலாத நிலைமையில் இந்நோய் உள்ளவர்களின் இரத்தத்தில் அதிக அளவு சர்க்கரை இருக்கும். ஆனால் நீரிழிவு என்பது ஒரு நோயல்ல. இன்சுலின் சமச்சீர் நிலையை இழப்பதால் ஏற்படுவதாகும். மனித உடலில் சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்ற இன்சுலின் அத்தியாவசியமாகவுள்ளது.

குறிப்பாக இரத்த சர்க்கரையளவு சரியாக கட்டுப்படுத்தப்படவில்லை எனின் உயர் இரத்த அழுத்தம், நாடிகளின் சுவர்களில் கொழுப்பு படிந்து அது நாளடைவில் அடைபடுதல், இதய தசைகளுக்கு குருதி வழங்கும் நாடிகளில் ஏற்படும் நோய் மற்றும் பாரிசவாதம் ஆகியவை ஏற்படக்கூடிய ஆபத்தை அதிகரிக்கிறது.

நீரிழிவு நோயினை உறுதி செய்வதற்கு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அல்லது சர்க்கரையின் அளவானது அளவிடப்படுகிறது. உண்ணாநிலை குருதிச்சக்கரை அளவு 7 மில்லி லீற்றரிலும் அதிகமாக அல்லது எதேச்சையாக குருதிச்சர்க்கரையின் அளவு 11.1 மில்லி லீற்றரிலும் அதிகமாகக் காணப்பட்டால் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது என்று உறுதி செய்யப்படும். இதனை அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ள முடியும். நீரிழிவு நோயின் அனைத்து வகைகளும் 1921-ஆம் ஆண்டு இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திற்கு வந்ததிலிருந்து சிகிச்சை அளிக்க கூடியதாகவே உள்ளது.

நீரிழிவு நோயானது யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இருப்பினும் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள், பரம்பரையில் நீரிழிவு நோய் இருப்பவர்கள், உடல் எடை அதிகமாக இருப்பவர்கள் ஆகியவர்களுக்கு நீரிழிவு நோய் வர அதிக வாய்ப்புண்டு. நீரிழிவு நோயின் அறிகுறிகள் பல சமயங்களில் சரியாக தென்படாமல் போகிறது. சில பொதுவான அறிகுறிகள் பின்வருமாறு அடிக்கடி சிறுநீர் கழிப்பது, அடிக்கடி தாகம், அதிக பசி, மிக வேகமாக எடை குறைதல், அதிகமாக சோர்வடைவது, கண்பார்வை மங்குதல், வெட்டுக்காயம் சிராய்ப்புகள் என்பன மாறுவதற்கு அதிக காலம் எடுத்தல், சருமம், சிறுநீர்ப்பையில் தொற்று நோய், பாதங்களில் உணர்ச்சிக் குறைவு ஆகியவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய விளைவுகள் பின்வருமாறு. பார்வை இழப்பு, மாரடைப்பு, சிறுநீர் கோளாறு, பக்கவாதம், கால்களை இழுத்தல், கோமா, மற்றும் மரணம் ஆகியவை. மேற்குறிப்பிட்ட இந்த நீரிழிவு நோயானது சிறியவர் முதல் பெரியவர்கள் வரை மிகவும் அபாயகரமான பாதிப்பையும் ஆபத்தையும் ஏற்படுத்தும் என்பதால் மேற்குறிப்பிட்டவாறு இந்த நீரிழிவு நோயின் குணாதிசியங்கள் வகைகளையும் தீர்வுகளையும் கண்டறிந்து மருத்துவரின் ஆலோசனையுடனும் உதவியுடனும் உரிய வைத்தியத்தினைப் பெற்று அந் நோயிலிருந்து விடுபடுவதே மிகச்சிறந்ததாகும்.

ஆஸ்துமா என்ற தொற்றா நோயினை எடுத்துக்கொண்டால் ஆஸ்துமா அல்லது மூச்சுத் தடை நோய் என்பது நுரையீரலில் ஏற்படும் நீடித்த அல்லது நாள்பட்ட அழற்சியினால் (சிவந்த வீக்கம் போன்ற தன்மை) மீண்டும் மீண்டும் வரக் கூடிய மூச்சு எடுத்தலில், விடுவதில் சிரமத்தை கொடுக்கும் மூச்சுத்திணறல் அல்லது மூச்சிரைப்பு நிலையாகும். அதற்கு முக்கிய காரணம் சுவாசக் குழாய்களின் உட்படலத்தில் ஏற்படும் வீக்கத்தால் காற்று உட்சென்று வெளியேறும் பாதை ஒடுக்கம் ஏற்பட்டு காற்றின் ஓட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சியாகும். சுவாச குழாய்களை சுற்றி இருக்கும் தசைகளில் ஏற்படும் மீளும் தன்மை கொண்ட சுருக்கம் மற்றும் இறுக்கம் போன்றவையும் நுரையீரலில் ஏற்படும் அழற்சியினால் ஏற்படும் புண்பட்ட நிலை, வீக்கம் என்பனவும் அசௌகரியமான நிலையை ஏற்படுத்தும்.

இதன் தீவிரத்தன்மையும் நிகழ்வுகளுக்கு இடையிலான இடைவெளியும் மனிதனுக்கு மனிதன் வேறுபடும். இந்நோய் எல்லா வயதினரிலும் காணப்படுவது ஆயினும் பொதுவாக குழந்தைகளிலேயே ஆரம்பிக்கும். இந்த நோயின் முக்கிய அறிகுறிகளாக இழுப்பு, இருமல், நெஞ்சு இறுக்கம், விரைவான குறுகிய மூச்சு என்பன அமைகின்றன. மீண்டும் மீண்டும் இந்த நோயின் பாதிப்புக்கு உட்பட்டவருக்கு தூக்கமின்மை, பகலில் களைப்பு போன்றவை இருப்பதால் அவர்களால் தமது நாளாந்த செயல்களைச் சரிவரச் செய்ய முடியாத நிலை காணப்படும். இந்த ஆஸ்துமா நோயானது தொய்வு, இழுப்பு, முட்டு, மூச்சுத் தடை நோய், இளைப்பு நோய், என்று பல்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனம் கொடுத்துள்ள அறிக்கையின்படி உலகில் 235 மில்லியன் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதை தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ஏனைய நீடித்த அல்லது நாட்பட்ட நோய்கள் உடன் ஒப்பிடுகையில் இறப்பு வீதம் குறைவாக இருப்பினும் 2005ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 255,000 மக்கள் இந்நோயினால் இறந்திருப்பதை உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. குழந்தைகளில் வரும் நாட்பட்ட நோய்களில் மிக அதிக அளவில் இருப்பதும் இந்நோயே என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. அத்துடன் இந்நோய் உள்ளவர்களில் 80 வீதமானோர் குறைவான அல்லது நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இருப்பதாகவும் கூறுகிறது.

ஐக்கிய அமெரிக்க மக்கள் தொகையில் 7 வீதம் மக்களையும் பிரிட்டிஷ் மக்களில் 6.5 வீதம் உலக அளவில் மொத்தம் 300 மில்லியன் மக்களும் இந்நோயினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் ஒரு வருடத்தில் 4000 மக்கள் இந்நோயினால் இறக்கின்றனர். இத்துடன் 2025 ஆம் ஆண்டில் உலகில் 100 மில்லியன் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்படக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது. எமது நாடும் இந்நோய் தாக்கத்தினால் வெகுவிரைவாக பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

இந் நோய் தீவிரமடையும் நிலையில் அவசர சிகிச்சையாக உடனடியாக செயல்புரியும் பீட்டா-2 இயக்கிகள் சுவாசத்தோடு உள்ளெடுக்கப்படும். இந்த நோயைத் தூண்டும் காரணிகளாக ஒவ்வாமை ஊக்கிகள் அல்லது அதிவேகமாக வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பதன் மூலமாக ஆஸ்துமா நோய் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கலாம். அத்துடன் நீண்ட நேரம் வரை செயல்புரியும் பீட்டா-2 இயக்கிகள் போன்றவை சுவாசத்தின் வழியாக உள்ளே இழுக்கப்படுதல் போன்ற மருந்து சிகிச்சை மூலமாகவும் ஆஸ்துமா நோயின் பாதிப்பை தடுக்கலாம். வளர்ந்த நாடுகளில் இருக்கும் பொதுமக்கள் இந்நோய் தாக்க நிலையில் தங்கள் கவனத்தை தற்போது திருப்பியுள்ளனர். நகர்ப்புற குழந்தைகளில் நான்கில் ஒரு பங்கு குழந்தைகள் இந்நோயினால் பாதிக்கப்படுவதே இந்நோய் அதிவேகமாகப் பரவுவதற்கான காரணியாகக் கருதப்படுகிறது. இந் நோயின் அறிகுறிகளாக இரவில் இருமல் அதிகரித்தல், உடற்தொழிற்பாடுகளின் போது இருமல், மூச்சடைப்பு ஏற்படல், இலகுவாக செய்யக்கூடிய வேலையின் போது களைப்பு உண்டாதல், நெஞ்சிறுக்கம், தூக்கமின்மை போன்ற பல அறிகுறிகளும் காணப்படும். இந்த நோய்க்கான அடிப்படைக் காரணங்கள் மிகச்சரியாக இது தான் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாததாக உள்ளது. சூழல் காரணிகளுடன் மரபியல் காரணிகளும் இணைந்தே இந்நோயை ஏற்படுத்துகின்றது. இந்நோயைத் தீவிரமான மருத்துவ சிகிச்சை மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

அடுத்து இரத்த அழுத்த நோயினை எடுத்துக் கொண்டால் இரத்த அழுத்தம் என்பது இரத்தக் குழாய்களின் சுவர்களில் இரத்த ஓட்டத்தினால் ஏற்படும் அழுத்தமாகும். இது பிரதான உயிர்வாழ்தலுக்கான அறிகுறிகளில் ஒன்றாகும்.

உயர் அழுத்தங்கள் இதயத்தின் வேலையை அதிகரிக்கிறது. மற்றும் ஆரோக்கியமற்ற சிசு வளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இது இரத்த நாடிகளின் சுவர்களுக்குள்ளேயே உருவாகின்றது. அழுத்தம் உயர்வதால் அதிகமான தகைவு ஏற்பட்டு கூழ்மைக்கரடு அதிகமாகிறது. இதனால் இதயத் தசை தடிப்படைந்து விரிவடைந்து பிறகு பலவீனமடைகின்றது. பக்கவாதம், மாரடைப்புக்கள், இதய செயலிழப்பு, மற்றும் இரத்தநாடி சார்ந்த ஊறுகள் ஆகியவற்றை ஏற்படுத்தும் ஆபத்து காரணிகளில் நீடித்த உயர் அழுத்தமும் ஒன்றாகும். நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு இது முக்கியகாரணமாக இருக்கின்றது. மிகவும் கடுமையான உயர் அழுத்தங்களில் சராசரி இரத்த நாடி சார்ந்த அழுத்தங்கள் 50 வீதம் அல்லது அதைவிட அதிகமாக இருந்தால் சில வருடங்களுக்கு மேல் ஒரு நபர் உயிர் வாழ முடியாது. தகுந்த முறையில் வைத்திய சிகிச்சை அளிப்பதன் மூலம் இதனை தவிர்க்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தொற்றா நோயான மாரடைப்பை எடுத்துக்கொண்டால் இதயத்தின் பகுதிகளால் குருதி ஓட்டம் தடைப்படும்போது இதயத்திசு இழப்பு அல்லது இதயத்தசை இறப்பு ஏற்படுகிறது. இது பெரும்பாலும் இரத்த நாடிகளின் சுவர்களில் கொலஸ்ரோல் போன்ற கொழுப்புப் பொருட்களும் வெள்ளைக் குருதி அணுக்களும் சேர்ந்து உட்புறத்தில் வீக்கத்தழும்பு உருவாதலால் இரத்த நாடியின் அளவு குறுகி விடுகிறது. இதனால் இதயத் தசைகளுக்கு குறைந்த அளவு குருதி செல்வதால் உயிர்வளிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்நிலை கொண்டுள்ளவர் கடுமையான வேலை செய்யும் போது அவர்களுக்கு நெஞ்சு நோ ஏற்படும்.

ஆகவே தொற்றா நோய்களின் அதிகரித்த தாக்கத்திற்கு எங்களது உணவு உள்ளிட்ட அன்றாட வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களே காரணம். நல்ல உணவுப் பழக்க வழக்கம் என்பது தனி நபரது ஆரோக்கியமான வாழ்க்கைக்கும் நீண்ட ஆயுட்காலத்திற்கும் வழிகாட்டியாக அமையும். தியானம், யோகா என்பன பல நோய்களை குறைக்கும் ஒரு உத்தியாகும். எனவே தான் ஆரோக்கியமான நல்ல எதிர்காலத்தை உருவாக்க சிறுபராயத்திலிருந்தே சிறுவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை பெற்றோரும் சமூகமும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். நாளைய தலைவர்களை உருவாக்க இன்றே கைகளை உயர்த்துவோம். ஒன்றாய் இணைந்து பிள்ளை பருவத்தை ஆரோக்கிய மாக்குவோம்.

அருந்ததி சற்குணானந்தசர்மா
2019 உயிரியல் பிரிவு
யாழ் இந்து மகளிர் கல்லூரி

முயற்சி என்பது
விதை போல....
அதை விதைத்துக்
கொண்டே இரு...
முளைத்தால் மரம் ...
இல்லையென்றால் – அது
மண்ணிற்கு உரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மன வானில்

ஆயிரம் ஆசைகள், கனவுகள்
அத்தனையும் என் மனதில்
வட்டமிட்டுப் பறக்கின்றன
அந்த இனிய நாளை எண்ணி எண்ணி....

காலம் போன போக்கில் கரைந்து போகும்
கனவுகளைக் கூட, வீசி எறிந்து வெற்றி நடைபோட எண்ணும் என் மனதை
நித்தம் கண்டு நித்தமும் வியக்கின்றது என் உள்ளமும்

என் இதய வானில் சுழன்று கொண்டிருக்கும்
எல்லையில்லா ஆசைகளை
வர்ணிக்க வார்த்தைகளுமில்லை
வாய் கொள்ளாத இளம் புன்னகை

கைகளை விரித்தும் சொல்லமுடியாத
பாசநேசத்தில் கூட விதைவிட
தொடங்கிய ஆசைகள் தான்
என் மன ஆசைகள்

சிட்டுக்களாய் பறந்த சின்னஞ்சிறு வயதில்
எம் மனதில் எட்டிப் பார்த்த
ஆசைகளோ ஏராளம்
மணல் வீடு கட்டி மணலேறிய தருணங்களும்

மழையில் நனைந்து அடிவாங்கிய தருணமும்
பள்ளியில் தவறிழைத்து அடி வாங்கிய தருணமும்
இன்னும் நினைக்க இனிக்கும் அழகான நிமிடங்கள்
பருவம் மாறிப்போனாலும் விதைத்த ஆசைகள் என்றும் அழியாது

அறியாத வயதானாலும் அதீத தருணம்
அறிய விரும்பிய விடயங்களோ
ஏரா‌ள மன ஆசைகள்
இன்னும் வியக்கின்றேன் என் மனதில்

எல்லையில்லா வட்டமிடும் என்மன எண்ணங்களைக் கண்டு
அத்தனையும் நிஜமாகும் அந்தநாளே
இந்த உலகம் என்னை பார்த்து வியக்கும்
அழகிய தருணம் - இதுவே

என் மன வானில் நித்தம்
உலாவிடும் வசந்த காவியம்......

தேனுஷா செந்தூரன்
12^A கலைப்பிரிவு 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்தரத்தில் கணித விஞ்ஞானக் கல்வி
## (பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை – வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்)

இக்கட்டுரையின் பிரதான நோக்கம் க.பொ.த (சா.த) பரீட்சையில் க.பொ.த உயர்தரம் கற்க தகுதி பெற்ற மாணவர்களை உயர்தரத்தில் கல்வி கற்க ஊக்குவிப்பதும் கணித அல்லது விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்க தகுதி பெற்ற மாணவர்களை அப்பிரிவுகளைத் தெரிவு செய்ய வழி காட்டுவதும் ஆகும்.

க.பொ.த (சா.த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். ஒவ்வொரு பிரிவுத் தெரிவிற்கும் சில நிபந்தனைகள் இருக்கின்றன. இன்று க.பொ.த (சா.த) பரீட்சை டிசம்பரில் முடிந்தகையுடன் மாணவர்கள் தம் பரீட்சைச் செயற்பாட்டை சுயமதிப்பீடு செய்து தம் விருப்பத்திற்கேற்ப க.பொ.த (உ.த) துறையைத் தெரிந்து தனியார் வகுப்புக்களுக்கு ஆண்டுத் தொடக்கத்திலேயே செல்கின்றனர். பாடசாலைகளில் க.பொ.த (உ.த) வகுப்புகள் மே யூன் மாதங்களிலேயே ஆரம்பமாகின்றன. இதனால் மாணவர்களின் பாடத்தெரிவில் பல பாடசாலைகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இல்லை.

மாணவர்களின் பாடத்தெரிவினைத் தீர்மானிக்கின்ற காரணங்கள் பல. மாணவர்கள் சரியான பாடப்பிரிவை தேர்வு செய்யாதவிடத்து வாழ்நாள் முழுவதும் துன்பப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படலாம். இதனால் சரியான பாடப்பிரிவுத்தெரிவு ஒவ்வொரு மாணவருக்கும் முக்கியமானதாகும். மாணவர்கள் தங்கள் சுய விருப்பத்திலா அல்லது நண்பர்களின் செல்வாக்கிலா அல்லது எதிர்கால வேலைவாய்ப்பு பின்புலங்களை கருத்திற்கொண்டா தீர்மானம் எடுக்கின்றனர். மேலும் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள், சீனியர் அண்ணா, அக்கா முதலியோரின் வழிகாட்டல்கள் செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பது கேள்விக்குரியது. மேலும் பாடசாலைகளில் இடவமைப்பு, பாடசாலை வழங்கும் கற்கை வசதிகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு ஆகியவை இவ்விடத்தில் முக்கியம் பெறுகின்றன.

இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடுகள் சார்ந்த பல பிரச்சனைகளுக்கு முக்கிய காரணம் காலத்திற்கேற்ற உரிய கல்வியைப் பெறத்தவறியமை ஆகும். இன்று எம்மக்கள் மத்தியில் கணித விஞ்ஞானத் தொழில்நுட்ப பட்டதாரிகளதும் மற்றும் க.பொ.த (உ.த) பிரிவில் கணித விஞ்ஞான தகைமை பெற்றவர்களினதும் எண்ணிக்கை மிகக் குறைவாகும். இதனால் தமிழரிடையே கணித விஞ்ஞான நிபுணர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், வினைத்திறன் கொண்ட வேலை படையினர் மிகவும் குறைவு. இதனால் கிடைக்கக்கூடிய தொழில்களைக் கூட பெறமுடியாதுள்ளது. இலங்கை பூராகவும் தமிழ் பாடசாலைகளில் கணித விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்க போதியளவு ஆசிரியர்கள் இல்லாது உள்ளனர். கணித விஞ்ஞான பாட ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. பல்வேறு தொழில்நுட்ப பதவிகளும் தாதியர் பதவிகளும் வெற்றிடமாக இருக்கின்ற பொழுதும் இப்பதவிகளுக்கு உரிய தகுதி பெற்றவர்கள் இல்லாதிருப்பது கவலை தருவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சூழ்நிலையில் தமிழ் மாணவர்கள் தமது நலனுக்காகவும் தமிழ்ச்சமூகம், நாட்டு நலனுக்காகவும் க.பொ.த (உ.த) கணித விஞ்ஞான பிரிவுகளில் இணைய வேண்டும் என்ற கோரிக்கை இன்று பலராலும் முன்னெடுக்கப்படுகின்றது. க.பொ.த (உ.த) வகுப்புக்களில் கணித விஞ்ஞான மாணவர்களின் வீதம் 50 வீதத்திற்கு மேற்படின் அது எமது பிரதேசத்தின் முன்னேற்றத்தில் பெரும் பங்களிப்பிற்கு வழிவகுக்கும்.

இலங்கையில் அரச தனியார் பல்கலைக்கழகங்களில் கணிதம் விஞ்ஞானம் சார்ந்த கற்கைநெறிகள் பெருமளவு விரிவாக்கம் பெற்றிருப்பதால் குறைந்த பெறுபேற்றுடன் பல்கலைக்கழக கல்வியை முன்னெடுக்கலாம். மேலும் எதிர்காலத்தில் பொருத்தமான தொழில்களை கணித விஞ்ஞான பட்டதாரிகள், க.பொ.த (உ.த) பிரிவினர் பெறக் கூடியதாக இருப்பதுடன் விரும்பின் கௌரவமான வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதும் இலகுவாக அமையும். இன்று வளர்ந்துவரும் அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்பில் கணித விஞ்ஞான துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழில் உலகில் முக்கிய இடம் வகிக்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் வேலைவாய்ப்பையும் சமூக பொருளாதார மேம்பாட்டையும் வழங்கக்கூடிய மூன்றாம் நிலைக் கல்வியைப் பெறுவதற்கு கணித விஞ்ஞானப் பாடத் தெரிவு முக்கியமானதாகும். இப்பாடங்களை கற்பது கடினம் என எண்ணி மாணவர்கள் இவற்றைப் புறந்தள்ளக் கூடாது.

பொதுவாக கற்பது கடினம் எனினும் கற்றபின் நல்வாழ்வு கிட்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை. மேலும் க.பொ.த (சா.த) வகுப்பு வரை கணித விஞ்ஞான பாடங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்கள் உயர்தரத்தில் இப்பாடங்களை கற்பது பெரும் சவாலாக இருக்காது.

1970களில் தமிழ் மாணவர்கள் கணித விஞ்ஞான துறைகளில் சிறந்து விளங்கியதால்தான் பல்கலைக்கழக அனுமதிக்கு மொழி வாரித்தரப்படுத்தலும் மாவட்டக் கோட்டா முறையும் அமுல்ப்படுத்தப்பட்டு எமது மாணவர்களின் பல்கலைக்கழக பிரவேசமும் குறையலாயிற்று. இன்று எமது கல்வி நிலை குறைந்த படியால் இதே மாவட்டக்கோட்டா முறை மூலம் தமிழ் மாணவர்கள் குறைந்தளவான பல்கலைக்கழக அனுமதியை பெறக்கூடியதாக இருக்கின்றது என்பது கசப்பான உண்மையாகும்.

க.பொ.த உயர்தரத்தில் கணித விஞ்ஞானப் பிரிவுகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் கல்வித்தரத்தை உயர்த்தவும் கல்வி நிர்வாகிகள் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பல்துறைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் இணைந்து செயல்பட்டால் ஓரிரு ஆண்டுகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரலாம். ஒவ்வொரு வலயமும் தனது வலயத்துக்குள் இருக்கும் 1AB பாடசாலைகளை விருத்தி செய்ய குறித்த வலயத்துக்குப் பொருத்தமான தூரநோக்கு, பணி இலக்குகள், தந்திரோபாயங்கள், வழிநடத்தும் செல்நெறிகள் போன்றவற்றைக் கொண்டு செயல்படுவது சிறந்ததாகும். இதன் மூலம் இப் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறைய கல்வி விருத்தி முன்னேற்றம் காணும். இச்செயற்பாடுகள் க.பொ.த (உ.த) கணித விஞ்ஞான பிரிவுகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் கல்வித்தரத்தை உயர்த்தவும் முடியும். இணைந்து செயற்படின் சாதனை படைக்கலாம்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர் - முன்னாள் துணைவேந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமை நிறைந்த நினைவுகள்

யாம் அறிவு பெற்று மக்களாய் நிமிர்ந்து வாழ எம்மை நெறிப்படுத்தி அன்னம் ஊட்டிய அன்னையாம் யாழ் இந்து மகளிர் கல்லூரி பற்றிய பசுமை நிறைந்த இனிய நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மேற்படி கல்லூரியின் பழைய மாணவியாகிய யான் பரவசமடைகின்றேன். யாழ் இந்துக்கல்லூரியிலிருந்து பிரிந்து எமது கல்லூரி உருவாகியபோது ஆரம்பக்கட்ட மாணவிகளாக யாம் அமைந்ததில் எமக்கோர் தனிப்பெருமை. எனவே எம்மை யாம் கல்லூரியின் தளம் என்பதா? பலம் என்பதா? இல்லை பாக்கியசாலிகள் என்பதா? பாக்கியசாலிகள் என்றே எடுத்துக் கொள்வோம்.

இவ்விடத்தில் எமது பாடசாலையின் ஆரம்பத்தைச் சற்று நோக்குவோம். கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ் வண்ணார்பண்ணையில் கொடிகட்டிப் பறக்கும் ஒரு சைவ ஆலயத்துக்குச் சமனான ஈடான எமது பெருமைக்குரிய யாழ் இந்துக்கல்லூரியிலே விதையிட்டு பின் யாழ் இந்துவின் விளையாட்டு மைதானத்தில் முளைவிட்டு தொடர்ந்து நல்ல மனம் கொண்ட திரு. பொன்னுச்சாமி அவர்களின் இல்லத்தில் துளிர்விட்டு தொடர்ந்து வள்ளற்றன்மை நிறைந்த திரு திருமதி சிவகுருநாதன் அவர்கள் வழங்கிய யாழ் நீராவியடியில் அமைந்த நடுத்தோட்டம் காணியில் காலூன்றித் தடம் பதித்து இலைவிட்டு கிளை பரப்பி வளர்ந்து இன்று மலர் தந்து காய் தந்து கனிந்து பெருவிருட்சமாக நிழல் பரப்பி நிற்கின்றது எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி என்றால் அது மிகையாகாது. இது யதார்த்தம்.

கல்லூரியின் ஆரம்ப நிர்வாகத்தை ஆளுமையுடனும் ஆற்றலுடனும் அழகுடனும் வழிநடத்தியவர் யாழ் இந்துவின் அன்றைய அதிபர் திரு ஏ குமாரசாமி என்பதை யாம் இவ்விடத்தில் நன்றியுடன் குறிப்பிட்டாக வேண்டும். அவரது சேவை பொன்னான சேவை என்றே கூறலாம். அவர் ஓர் M.A பட்டதாரி. அன்றைய காலத்தில் யாழ் இந்துவில் அதிபராக கடமையாற்றி கொண்டிருந்தவர். நாடு போற்றிய கல்விமான். அன்பும் அடக்கமும் செயலாற்றலும் மிக்கவர். அவருடைய அடக்கமான ஆனால் அதிசயிக்கத்தக்க நிர்வாகத்தை யாம் அன்று காணமுடிந்தது. அவருடைய இளகிய மனதை நோக்கி அன்றைய யாழ் இந்து மாணவர்கள் செல்லமாக தமக்குள்ளே அவரை தங்கச்சி என்று அழைத்துக் கொள்வார். அணைத்தும் கொள்வர் மனதால் என்றும் கூறலாம்.

இந்த வகையில் நடுத்தோட்டத்தில் எங்கள் கல்லூரி தடம் பதித்தது. உடனடியாக பெரிய கட்டிடங்களை நாம் எதிர்பார்க்க முடியாது தானே.

கல்வி பயிற்றுவிக்க போதுமான வகுப்பறைகள் எழுந்தன. நிலத்தில் வெண்மணல், மேலே ஓலையால் வேய்ந்த கூரை, தட்டிகள் வகுப்பறைகளின் இடையே, உயர்ந்த சுற்றுமதில்கள் எழும்பவில்லை. ஆனால் கல்வியின் தரம் மிக மிக உயர்ந்த வண்ணம் இருந்தது. எமக்கு அதுதானே வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலை வளாகத்துக்குள்ளே அமைந்திருந்த இராஜவரோத பிள்ளையார் ஆலயம் எமக்கு ஓர்வரப்பிரசாதம். நாம் கல்லூரி வளாகத்தில் கால் வைக்கும் முன்னமே அங்கு அமைந்த ஆலயத்தில் எழுந்தருளி இருந்த இராஜவரோதயப் பிள்ளையாரை அவரது இன்னருளை வழிகாட்டலை காலம் காலமாக பெற போன ஜென்மத்தில் என்ன தவம் செய்தோமோ?

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற வாக்கிற்கிணங்க எமது வளாகத்தில் அமைந்த ஆலயம், அங்கு அருள்புரியும் விநாயகன் பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் என நான்கினையும் ஏற்றுக்கொண்டு சங்கத்தமிழ் மூன்றினையும் அவ்வைக்கு அருளிய அண்ணல், தம்பிக்காக யானை உருவில் வந்த மூத்த பிரான். இவரது இன்னருள் கிடைக்கும்போது இந்து மகளிருக்கு வேறு என்னதான் வேண்டும்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக கல்லூரி அன்னை வளரலானாள். மாணவர் தொகை பெருகியது கற்றோர் மற்றோரது நல்லாதரவுகள் வாழ்த்துக்கள் ஆகியன கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்கு வழிகோலின. கல்லூரியின் முகாமைத்துவ சபை நற்பணி சபை என்ற பெயரில் பின்வரும் நல்ல உள்ளங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது சலியாது தன்னலமற்ற சேவை புரிந்து கல்லூரிக்கு மெருகும் மேன்மையும் நல்கினர். இந்த நல் உள்ளங்களை நன்றியுடன் இங்கு யாம் குறிப்பிட்டாக வேண்டும். அவர்களே இவர்கள்.

கல்லூரிக்கு தளம் தந்த திரு திருமதி விசாலாட்சி சிவகுருநாதன் இவர்களோடு சேர்ந்து சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி (சபாநாயகர் சட்டசபை), திரு R.R நல்லையா(JP), முடிக்குரிய நீதிபதி திரு முத்துச்சாமிப்பிள்ளை, யாழ் இந்துக் கல்லூரி தமிழ் போதனாசிரியரும், சைவ அபிமானியும் இந்து கல்லூரி இந்து சாதன பத்திராதிபருமான ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை, யாழ் இந்து ஆசிரியர் மு.மயில்வாகனம், திரு இராசரத்தினம் ஆகியோர் இக் கல்லூரியின் ஆரம்ப வளர்ச்சிக்கு அயராது உழைத்த நல்லவர்கள். பட்டாம் பூச்சிகளாக ஆடிப்பாடி ஓடிக் கல்வி கற்று கலைகள் பயின்று ஓவியம் தீட்டி தையல் கற்று அறுசுவை உண்டி ஆக்கக்கற்று நாடகங்கள் நடித்து பெரியோரைப் பேணக்கற்று எளியோர்க்கு இரங்கக்கற்று பொறுமை காத்து ஒழுக்கம் கற்று சைவமும் தமிழுமே எமது இரு கண்கள் என்பதை உணரக் கற்று வந்த நாம் இக்காலகட்டத்தில் வளர்ந்துவிட்டோம். பருவ மங்கையர் ஆகிவிட்டோம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வளமை அன்றோ. எமது அன்னையும் புது மெருகோடு வகுப்புகள் தோறும் தட்டிகள் இருந்த இடத்தை கற்சுவர்கள் நிரப்பின. பாடசாலை வளாகத்தைச் சுற்றி பெருமதில், உயர் வகுப்புகள், ஆய்வு கூடங்கள் எழுந்தன. திறந்தவெளி அரங்கம் நிரந்தரமான ஒரு சிமெந்து மேடையுடன், மாணவர் விடுதி, விளையாட்டு மைதானம் என எத்தனை எத்தனை மாற்றங்கள். யாழ் நகரிலே எம் அன்னையாம் இந்து மகளிர் கல்லூரி ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொண்டாள். சுருங்கச் சொல்லின் எங்கள் அன்னையின் மடியில் சைவம் தழைத்தது. தமிழ் மிளிர்ந்தது. ஒழுக்கம் ஓம்பியது. பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமளித்தது. மாணவர்களின் கல்வித்தரம், கல்வி வளம் யாவும் கவின் பெற்றன.

காலம் புரண்டு ஓடியது. ஒவ்வொரு வகுப்பாகத் தேறிக் கடைசிப் படியில் நின்று கல்லூரி அன்னையை யான் நோக்கும்போது தாய்நாடு சென்று உயர்கல்வி கற்று வா என வாழ்த்தி என்னை அனுப்பி வைத்தாள் என் கல்லூரித்தாய். அன்னையே உன்னையும் பிரிவதா? நெகிழ்ந்தது நெஞ்சம்! அன்னை என்னை தேற்றினாள்.

புக்ககம் புகும் பெண்மகள் பிறந்தகம் விட்டுப் பிரிவதில்லையா? இன்று நீயும். அன்னை நான் வழங்கும் ஆசியோடு உயர்கல்வி கற்று வெற்றியோடு திரும்பிவா என அறிவுரைகள் தந்து அனுப்பினாள் அன்னை. அவளது ஆசியோடு உயர்கல்வி நாடி தாய்நாடு சென்ற எனக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது என்பதை சொல்லவும் வேண்டுமா? தாய்நாடு சென்று உயர்கல்வி கற்றேன். பட்டமும் பெற்றேன். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கற்ற கல்லூரிக்கும் இந்த வகையில் பெருமதிப்பும் தேடித் தந்தோம்.

யாழ் இந்து மகளிரிலே எமக்கு அறிவூட்டிய ஆசிரியப் பெருந்தகைகளைப் பற்றியும் எம்மையும் கல்லூரியையும் வழிநடத்திய அதிபர்கள் பற்றியும் இங்கு சொல்லித்தானே ஆகவேண்டும். எழுத்தறிவித்தவன் இறைவன் அல்லவா! நான் கண்ட கல்லூரி அதிபர்கள் பலர். குறுகிய காலத்திலும் பல அதிபர்களை கண்டோம்.

முதலில் செல்வி காயத்திரி பொன்னுத்துரை. சிறிய உருவம். ஆனால் பெரிய ஆற்றல் உற்சாகம் சிட்டுக்குருவி போல அங்குமிங்கும் ஓடி நிர்வாகத்தில் நிறைந்த கட்டுக்கோப்பை வழங்கியவர் இவர். உருவுகண்டு எள்ளாமை வேண்டும் என்னும் உண்மையை இவரில் நாம் கண்டோம். அடுத்து அதிபராக இருந்தவர் திருமதி சிற்றம்பலம். அடக்கமும் அன்பும் நிறைந்தவர். அன்பாலும் சாதுரியத்தாலும் எம்மைக் கட்டி ஆண்டவர். அடுத்து செல்வி முத்து அச்சையா அவர்கள். ஏறக்குறைய இரண்டு வருடங்கள் எமது கல்லூரி அதிபராக கண்ணியத்தோடு கடமையாற்றி தந்தவர். இவரைத் தொடர்ந்து செல்வி சாந்தா அவர்கள். சிறிது காலம் அதிபர் சேவையை செவ்வனே செய்தவர். தொடர்ந்து அதிபர் ஒரு ஆங்கில நங்கை. திருமதி கிளேரா மொற்றுவாணி. இவர் மேல் நாட்டவர் ஆனாலும் எமது கலாச்சார பண்பாடுகளை விரும்பி ஏற்று எம்மை போன்று உடையணிந்து எம்மை தம் சேய்களாக போற்றி ஆதரித்து கல்வி நிர்வாகம் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்படுத்தியவர். அடுத்தவர் பாரதம் தந்த பெண்மணி. ஒரு கண்மணி. திருமதி சரோஜினி ராவ் அவர்கள். கம்பீரமான தோற்றம், நடையிலே மிடுக்கு, பேச்சிலே கண்டிப்பு, இடுப்பிலேயே சாவிக்கொத்து, பேச்சுவன்மை கேட்போரையும் கவரும் எமது பாடசாலைக்கு அரும்பணியாற்றியவர். அதிபர் பணிகளோடு எமது சிரேஷ்ட வகுப்பில் வீட்டு பணி, சுகாதாரம் ஆகிய பாடங்களையும் கசடறக் கற்பித்தவர். தாய் நாட்டிலிருந்து சேய் நாட்டிற்கு வந்தவர். இங்கு நற்பணி செய்யாமல் விடுவாரா என்ன? தொடர்ந்து திருமதி விமலா ஆறுமுகம். அன்பும் பண்பும் அமைந்த இவர் சலசலப்பின்றி நிதானமாக ஓடும் ஆற்றைப் போல் அமைதியாக சிறப்பாக கடமை ஆற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகுடம் தளம்பாது. தொடர்ந்து எங்கட்கு ஆசிரியர்களாக பணிபுரிந்த செல்வி பத்மா ராமநாதன், அதிபர் பதவி ஏற்று அசாத்தியமாக தன் பணியை ஆரம்பித்தார். பிரமாதமாக அவரது பணி நீடித்தது. அப்போது யான் தமிழ்நாட்டில் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன்.

இந்நேரத்தில் ஆரம்பத்திலிருந்து எமக்கு கல்வி போதித்த ஆசிரிய மணிகளைப் பற்றியும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாணிக்கமணி என்றால் மிகையாகாது. செல்வி கனகசபை, செல்வி விஜயலட்சுமிபதி, செல்வி லீலாவதி பொன்னையா, செல்வி ஐயர், செல்வி வல்லிபுரம், திருமதி குமாரவேல், திருமதி வைத்திலிங்கம், செல்வி சுப்பிரமணியம், இவர்கள் என் மனதில் என்றும் நிலைத்து நினைவாகி நிற்பவர்கள்.

இவர்கள் எமக்கு கல்வி கற்பிக்க முன் கல்வியைப் பற்றி எமக்கு மணிமணியாக சுருங்கச் சொல்லி விளங்க வைத்தவர்கள்.

ஊனக்கண்ணிலும் ஞானக்கண்ணே சிறந்தது என்பார்கள் ஊன கண்ணின் காட்சிக்கு ஒரு எல்லை உண்டு. ஆனால் ஞானக்கண்ணோ மூன்று காலத்தையும் கண்டறியும் சக்தி வாய்ந்தது. ஞானக் கண் மூப்பாலோ நோயாலோ பாதிக்கப்படாதது. ஊனக்கண்ணின் ஒளி காலப்போக்கில் மங்கும் தன்மையது. ஞானக் கண்ணின் ஒளியோ காலப்போக்கில் மிளிர வல்லது என்றெல்லாம் போதித்து எமக்கு கல்வி கற்க வேண்டும் என்ற தாகத்தை எம்மிடையே எழுப்பியவர்கள் இந்த ஆசிரியப் பெருந்தகைகள். உடற்பயிற்சி, புவியியல் ஆகிய பாடங்களை எமக்குக் கற்றுத் தந்து எம்மை நெறிப்படுத்திய திருமதி லீலாவதி நாகரத்தினம் (செல்வி லீலா பொன்னையா), எமக்கு ஆங்கில இலக்கிய பாடத்தை மிக சுவாரசியமாக கற்றுத் தந்த செல்வி விஜயலட்சுமிபதி. இவர் பாடம் கற்பிக்கும் போது ஆங்கில இலக்கிய கதைகளை நடித்துக் காட்டி அவ்விலக்கியம் உருவாகிய ஐரோப்பிய நாடுகளுக்கே எம்மை மானசீகமாக அழைத்துச் சென்று விடுவார். உதாரணமாக Merchant of Venice, Macbeth, Romeo and Juliet, Antony and Cleopatra, Julius Caesar, Mid Summer Night's Dream, ஆகிய நாடகங்களின் கதாபாத்திரங்களை நடித்தே காட்டி எம்மை பாடத்தின்பாலும் தன்பாலும் கவர்ந்தவர். இவ்வண்ணம் எம்மை அசத்திய நல்லாசிரியை செல்வி பதி.

அடுத்து எமக்கு அழகு தமிழ், இனிய தமிழ் கற்பித்த எமது அன்பிற்குரிய ஆசிரியை செல்வி சிவபாக்கியம் கனகசபை. கணித பாடத்தையே கலகலப்பாகக் கற்றுத்தந்த ஆசிரியை செல்வி தம்பு. ஆங்கில பாடத்தை அட்டகாசமாக கற்றுத்தந்த ஆசிரியை செல்வி ஐயர் அவர்கள். ஓவிய பாடத்தை மிக உன்னிப்புடன் புகட்டிய செல்வி சுப்பிரமணியம். சைவ சமயத்தை மிக ஆன்மீக பண்போடு கற்றுத்தந்த திருமதி. குமாரவேலு ஆசிரியை. ஒரு தாயைப் போன்று மாணவிகளை அனுசரித்தவர். இவர்கள் எல்லாம் எம் மாணவப் பருவத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிலே ஜொலித்த நட்சத்திரங்கள் என்றால் மிகையாகாது.

பசுமை நிறைந்த பள்ளிக்கூட நாட்களை இங்கு கொழும்பில் என் மனதில் மீட்ட நட்பின் இலக்கணமாய் இங்கு கொழும்பில் யான் அடிக்கடி சந்திக்கும், சந்தித்த எனது பாடசாலை தோழிகளையும் யான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எத்தனை தோழிகள்! அத்தனை நட்பு! திருமதி பத்மா சோமகாந்தன், திருமதி திலகா விஜயரட்ணம், திருமதி தயாநிதி செல்வநாயகம், திருமதி நீலாயதாட்சி பினாகபாணி, "புவனா" என்று யான் செல்லமாக அழைக்கும், திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம், திருமதி தற்பரா, திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி அபிராமி கைலாசபிள்ளை, திருமதி ருக்குமணி அரசரட்ணம், அமரர் ஆகிவிட்ட செல்வி சற்சொரூபவதி நாதன், பஞ்சலட்சுமி, வள்ளி அக்கா, வாலாம்பிகை ஆகியோர் நட்பெனும் பூங்காவில் நறுமணம் மணம் வீசும் மலர்களாய் திகழ்பவர்கள். வாழ்க நீவிர் பல்லாண்டு.

எம் கல்லூரி அன்னையே!

கவினுறு கல்வி தந்து சமுதாயத்தில் என்னையும் ஒரு கற்றவளாக இனங்காட்டிய என் உயிரினும் இனிய அன்னையே! என் நெஞ்சைவிட்டு என்றுமே அகலா யாழ் இந்து மகளிர் கல்லூரிச் செல்வமே!

பூமி உள்ளவரை நீ பூத்துக் குலுங்கிட சாமி உனக்கு அருள வேண்டி நிற்கிறேன். வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே.

என்றும் உன் அன்பகலா
பழைய மாணவி
திருமதி ராஜேஸ்வரி ஜெகானந்தகுரு (BA,MA)
முன்னாள் அதிபர்
யாழ் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்

உன் மனம் ஒன்று தான்
உன்னை வீழ்த்தக் கூடிய
ஒரே ஆயதம்
அது தெளிவாக இருக்கும் வரை
உன்னை வீழ்த்த யாரும்
இல்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித இயல்பும் பாடசாலைக் கல்வியும்

அறிமுகம் :

"வாழ்க்கை படிநிலைகளை கடப்பதற்கு, கணிதத்தை கடினமாக எண்ணாமல், அடிப்படை தத்துவமாக எடுத்துக்கொள்ள வேண்டும்" வாழ்வின் தீர்வுகளுக்கு ஆணிவேராக இருப்பது கணிதம் என உணர்த்தியவர் ராமனுஜர். ஒருவரது வாழ்வில், பிறப்பு முதல் இறப்பு வரை பின் தொடரும் பாடம் கணிதம் மட்டுமே. ஆராய்ச்சியில், புதையலை கண்டறிய முடியாத பாடமே கணிதம். இப்பாடத்தைக் கற்க ஆர்வமும், முனைப்பும் இருந்தால் போதும் எளிதில் புரிந்து கொள்ளலாம். இவ்விடயத்தை நோக்கும்போது பின்வரும் எண்ணற்ற வினாக்கள் எழுப்பப்படுகின்றன.

- கணிதம் என்றால் என்ன? அதை ஏன் பாடசாலையில் கற்பிக்க வேண்டும்?
- கணித பாடத்தில் எழும் பிரச்சினை, கணிதத்தின் இயல்பு ஏதாவதுடன் சம்பந்தப்பட்டதா அல்லது அது கற்பிக்கும் முறையிலா அல்லது இரண்டுமா?
- குறித்த அளவிற்காவது ஒவ்வொருவரும் கணிதம் கற்றுக்கொள்ள முடியுமா?
- பாடசாலை கணிதத்தில் எதைக் கற்பிக்க வேண்டும்?
- எப்படி கணிதத்தை கற்பிக்க வேண்டும்?

இவற்றிற்கு பதிலளிக்க முயற்சிப்பது பேராசையாகவும், ஏன் அசட்டுத்தனமாகவும் கூடக் காணப்படும். கடந்த காலங்களில் பாடசாலை கணிதம் பற்றிய சிந்தனையில் ஏற்பட்ட சில மாற்றங்களையும், அவைகளின் தாக்கத்தினால் கடந்த சில வருடங்களாக உணரப்பட்ட விளைவுகளையும் குறித்து இந்தக் கட்டுரையில் நாம் கவனம் செலுத்துவோம்.

அனைவருக்கும் கணிதம் :

சமகாலத்துப் பாடசாலை கணிதம் பற்றிய எந்தவொரு கலந்துரையாடலிலும் ஆரம்பக் கல்வியை உலகமயமாக்கல் (Universalisation of Elementary Education - UEE) என்கின்ற சந்தர்ப்பத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். இது கனவாக இல்லாமல் அடையக்கூடிய இலக்காகவே தெரிகின்றது.

ஒவ்வொருவராலும் கணிதம் கற்றுக் கொள்ள முடியுமா? ஐம்பது வருடத்திற்கு முன்பு என்றால் இதற்கு தெளிவாக "இல்லை" என்பது தான் பதிலாக இருந்திருக்கும். இப்பொழுதும் கூட "ஒரு போதும் கணிதம் கற்றுக் கொள்ளப்போவதில்லை" எனக் கூறும் குழந்தைகளைப் பற்றிப் பெரியவர்கள் பேசுவதை நாம் கேட்கின்றோம்.

"எல்லா மாணவர்களாலும் கணிதம் கற்றுக் கொள்ள முடியும், எல்லா மாணவர்களும் கணிதம் கற்றுக் கொள்ள வேண்டும்" என்கிற இரண்டு கூற்றுக்களின் அடிப்படையில் தான் சிறப்பான கணிதக் கல்வி பற்றிய எங்கள் தொலைநோக்குப் பார்வை அமைகின்றது. ஆகையால், எல்லாக் குழந்தைகளுக்கும் மிகவும் உயர்தரமான கணிதக் கல்வியை நாங்கள் கொடுக்க வேண்டியது கட்டாயமான ஒன்றாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சம்பந்தமாக எழும் கேள்வி என்னவெனில் : "எந்த வகையான கணிதம் கற்பித்தால் அனைத்து மாணவர்களின் தேவைகளும் பூர்த்தியாகும்?" இதற்கு பதிலளிக்க வேண்டுமெனில், கணிதக் கல்வியின் குறிக்கோள்கள் பற்றி நாம் தெளிவான கருத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

**கணிதக் கல்வியின் குறிக்கோள்(கள்)**

"குழந்தைகளின் சிந்தனைச் செயல்பாடுகளை கணிதமயமாக்கல் என்பதே ஒரே முக்கிய குறிக்கோள்" என்று மிக எளிதாகச் சொல்லிவிடலாம்.

வேறுவிதமாகச் சொல்லவேண்டுமெனில், கணித மொழியில் உலகத்தைப் பற்றிச் சிந்திக்கக் கற்றுக் கொள்வதும், கணிதத்திற்கே உரித்தான பிரத்தியேக முறையில் சிந்திப்பதை மேம்படுத்தக் கற்றுக் கொள்வதும் தான் இதன் குறிக்கோள். ஆனால் கடந்த ஐம்பது வருடங்களாக நாட்டில் இருந்து வரும் பாடத்திட்டத்தையும், புத்தகங்களையும் பார்க்கும்போது உண்மை வேறுவிதமாக இருப்பதைக் காட்டுகிறது. பாடசாலைக் கணிதத்தின் உள்ளடக்கம், நடைமுறை ஆகியன "பல்கலைக்கலைக்கழக கல்வி"யைப் பிரதானமாகக் கொண்டிருக்கின்றது எனத் தோன்றக்கூடும். அதனால், கடந்த காலம் மற்றும் நிகழ்காலம் ஆகியவைகளில் பாடசாலை செல்பவர்கள் பெரும்பாலானோருக்கு கணிதப் பாடத்தின்மேல் விருப்பம் இல்லாமல் இருப்பதில் வியப்பில்லை.

**கணிதம் என்றால் என்ன?**

சிந்தனையைக் கணிதமயமாக்கல் தான் கணிதக் கல்வியின் முக்கியமான குறிக்கோள் என்றால் கணிதம் எதைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் ஒரு உடன்பாடு இருப்பது நமக்கு அவசியமாகும். "கணிதம் என்றால் என்ன?" என்ற கேள்வியை ஒரு சிலரிடம் நீங்கள் கேட்டால், "கணிதம் என்றால் கூட்டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல்" என்ற பதில் உடனடியாக உங்களுக்கு அநேகமாகக் கிடைக்கும். (அதற்குப் பிறகு சிந்தித்து அல்லது அழுத்திக் கேட்டால் அட்சர கணிதம் (algebra) மற்றும் கேத்திர கணிதம் (Geometry) எனக் கூறுவார்கள்). சந்தேகமில்லாமல் எண்கள் சம்பந்தப்பட்ட இந்த வழிமுறைகள் கணிதத்தின் முக்கியமான பகுதிதான். ஆனால், இவைகள் மட்டும் கணிதத்தையோ அல்லது கணிதச் சிந்தனையோ வரையறுக்கப் போதாது. கணிதச் சிந்தனை பற்றிய சில உதாரணங்களை நாம் நோக்கும்போது

"இரண்டு வீட்டிற்கு இடையில் மதில் இருக்கிறது"

"அந்தக் குடுவையில் ஏறத்தாழ ஐம்பது மிட்டாய்கள் உள்ளன"

"இந்தக் கண்ணாடிப் பாத்திரம் உயரமானது ஆனால் மெல்லியது. அகலமான கூஜாவை விட இதில் குறைவாகத்தான் நீர் இருக்கும்"

"பாதை வழியாகப் போனால் புகையிரத நிலையம் கிட்டத்தட்ட 15 நிமிடந்தான் ஆனால் அங்கு ஒரு குறுக்கு வழி உள்ளது. அதில் போனால் பத்து நிமிடந் தான் ஆகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கூற்றை முதன் முதலாகப் பார்க்கும்போது, அதில் எந்தவொரு கணிதச் சிந்தனையும் இல்லாதது போலத் தோன்றும், அதில் உள்ள இடம் சார்ந்த தொடர்பு வார்த்தைகளான "மேலே", "கீழே", "இடையில்", "அப்பால்" போன்றவைகள் குழந்தைகளுக்கு கணிதமயமாக்கலின் முக்கியமான பகுதியாகும்.

கணிதமயமாக்கல் சிந்தனை என்பது முழுமையான, ஒரு தடவைக்கான நிகழ்வு இல்லை. பாடசாலை மற்றும் அதற்கு அப்பாலும் குழந்தைகளும், பெரியவர்களும் கணிதமயமாக்கலைத் தொடர வேண்டும். வேறொரு வகையில், நமது பாடத்திட்டத்தில் உள்ள பல விடயங்கள் அவைகள் சம்பந்தப்பட்ட எந்தவொரு வழிமுறைகளும் இல்லாமல் மாணவர்கள் கற்கும் நிலையில் இருக்கும் காரணத்தால், அத்தகைய பாடத்திட்டம் கணிதத்தை உண்மையாகக் கற்றுக் கொள்வதற்குப் பயனளிக்காது. இங்கு சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன. இவைகளுக்குத் தகுந்த வகுப்பறைப் பயிற்சிகள் இல்லையெனில், கணிதம் மனப்பாடம் செய்து கற்கும் நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்.

"ஏதாவது ஒன்றை $\frac{m}{n}$ ஆல் வகுப்பதற்கு நீங்கள் $\frac{n}{m}$ ஆல் பெருக்க வேண்டும்

"a மற்றும் b யினுடைய மிகச் சிறிய பொது மடங்கு (lowest common multiple) – LCM என்பதும் a மற்றும் b யினுடைய மிகப்பெரிய பொது காரணி (Highest common factor) - HCF ஆல் தரப்படும்.

"ஒரே அளவு நீளமான அடியையும், உயரத்தையும் கொண்டுள்ள எல்லா முக்கோணிகளும் ஒரே பரப்பளவைக் கொண்டிருக்கும்."

**மனக்கண் தோற்றத்தின் பிரச்சினை**

திண்மப் பொருட்களைக் கையாள்வதன் மூலம் சிறு குழந்தைகள் உலகத்தைப் பற்றிக் கொள்கின்றன. ஆகையால் அவர்களுடைய கணிதத்திற்கான அறிமுகமும் அதேவழியில் தான் இருக்க வேண்டும். ஆனால் முதலாம் வகுப்பில் கூட கணிதத்தில் உருவத்தை மனக்கண்ணால் பார்த்து அறியும் நிலை காணப்படுகிறது.

**உதாரணம் :**

"இரண்டும், இரண்டும் நான்கை உருவாக்குகிறது"

இந்தக் கூற்று இரண்டையும் நான்கையும் பற்றியது. இவைகள் மனக்கண் தோற்றத்தின் அடையாளங்கள், சைக்கிளின் சக்கரங்கள், இரண்டு ஆப்பிள்கள் போன்றவற்றில் சில பொதுவான பண்பு இருக்கிறது. நாம் இதை "இரட்டைத் தன்மை" கொண்ட பண்பு என அழைக்கலாம். "இரண்டு ஆப்பிள்களும், இன்னொரு இரண்டு ஆப்பிள்களும் சேர்ந்தால் நான்கு உருவாகும்" என்கிற கூற்று பௌதிக உலகத்தைச் சார்ந்தது. மேலே கூறப்பட்ட கணிதக் கூற்றைப் போல் அல்லாமல் இதை உண்மையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

"குழந்தைகளும், எண்களும்" என்கிற 1986இல் வெளியிடப்பட்ட தனது புத்தகத்தில் மார்ட்டின் ஹ்யூக்ஸ் (Martin Hughes) குழந்தைகளுடன் தாம் உரையாடிய பலவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்திருக்கிறார். ஆச்சரியப்படும் அளவுக்கு அதிகமாக எண் பற்றிய அறிவு அவர்கள் பாடசாலைக் கல்வியை ஆரம்பிப்பதற்கு முன்பே குழந்தைகளுக்கு இருக்கிறது என்பது இதன் மூலம் தெரியவந்துள்ளது. இருப்பினும் இந்த ஞானம் கணித வகுப்பறை உரை மொழியில் இல்லை, குழந்தைகள் பெட்டியில் உள்ள கட்டைகளைச் சரியாக எண்ணி, எட்டுக்கட்டைகள் அதில் இருக்கும் பட்சத்தில் இன்னும் இரண்டு கட்டைகள் சேர்த்தால் கட்டைகள் சரியாக எண்ணி, எட்டுக் கட்டைகள் அதில் இருக்கும் பட்சத்தில் இன்னும் இரண்டு கட்டைகள் சேர்த்தால் மொத்தம் பத்து ஆகிவிடும் என்று சரியாகக் கணித்துச் சொல்லி விடுவார்கள். இருப்பினும் அதே குழந்தையிடம் "எட்டும் இரண்டும் சேர்ந்தால் எவ்வளவு?" என்று எந்த திடப்பொருளும் இல்லாமல் மனத்தால் ஊகிக்கும் கேள்வியைக் கேட்டால் அந்தக் குழந்தைக்கு விடை பற்றிய எந்தவிதமான ஊகமும் இருக்காது.

இதைத் தொடர்ந்து பலராலும் செய்யப்பட்ட பரிசோதனைகளும் இதேமாதிரியான கண்டுபிடிப்புக்களைத் தான் கொண்டிருந்தன. வகுப்பறையில் இதனால் அறியப்படும் கருத்து என்னவெனில் ஒரு வரையறைக்கு உட்பட்ட மனத்திரையில் தோன்றும் மொழியால் பொதுவாக உருவாக்கப்பட்ட கணித பாடத்திற்கு மாறுவதற்கு முன்பாக, இந்த தூலமான பொருட்களைக் கொண்ட பயிற்சிகள் இருக்க வேண்டும். மேலும், முறைசாரா நிலையிலிருந்து முறையான நிலைக்கு மாறும்போது ஏற்படும் விளைவுகளை முக்கியமாக எதிர்கொள்ளும் வழிகள் நமது வகுப்பறை செயல்முறைகளில் காணப்பட வேண்டும்.

**கருத்துக் கட்டுமானக் கற்றல் முறையில் கணித அறிவு**

கணிதத்தினுடைய அடிப்படைக் கருப்பொருட்கள் ஜடத் தோற்றமில்லாதவைகளாக இருக்கும் காரணத்தினால், அத்தகையவைகள் மனித மனத்திலிருந்து தனிப்பட்ட பொருட்களாகத் தோற்றம் பெற்றுள்ளதாக அல்லது அவைகள் மனம் எழுப்பிய கருத்துக் கட்டமைப்புகளா என நாம் வியப்படையக்கூடும். இது தத்துவ ஞானிகளால் விவாதிக்கப்படும் ஒரு விடயமாக இருந்தது. தத்துவஞானி – கணிதவியலாளர் ரெனெ டெஸ்கார்டெஸ் (Rene Descartes) (1596-1650) காலந்தொட்டு விவாதித்து வருகிறார்கள். உதாரணமாக எண்கள் என்பது "அங்கே இருக்கிறதா" அல்லது "அவைகள் நம் மனதில் மட்டுமே இருக்கிறதா?" என்பதைக் குறிப்பிடலாம். இதன் பலவிதமான பரிணாமங்கள் பெர்ட்ரண்ட் ரகஸ்ஸலின் (Bertrand Russell) "கணிதத் தத்துவத்திற்கான அறிமுகம்" (Introduction to Methematical Philosophy) என்கிற நாம் எளிதாகப் படித்துப் புரியக்கூடிய சிறிய புத்தகத்தில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளதை உதாரணமாகக் காட்டலாம்.

பியாகெட் (Pieget), வைகாட்ஸ்கி (Vygotsky) மற்றும் பிற படைப்பாளர்களின் நூல்களைப் பின்பற்றி, ஒரு பொதுவான உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. "குழந்தைகள் அறிவை மந்தமாகப் பெறுவதில்லை" என்பது தான் அதன் உடன்பாடாகும். கற்றுக் கொள்பவர் ஒவ்வொருவரும் செயல்திறமையுடன் தங்கள் அறிவை அவர்களாகவே கட்டுமானம் செய்து கொள்கிறார்கள். அறிவுக் கட்டுமானத்தின் செயல்முறையில் வெளி உலகம் மற்றும் மற்ற மக்களுடன் கலந்துரையாடுவதும் உட்படும். எனவே, கணிதத்திற்கான அடையாளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தன்மையானதா, இல்லையா என்பது விடயமல்ல. அவைகளின் கட்டுமானச் செயற்பாட்டில்தான் நாம் எல்லோருமே ஈடுபட வேண்டும்.

உண்மையிலேயே பியாகெட் பாடசாலை கணிதம் பற்றி அக்கறை கொள்ளாவிட்டாலும் அவருடைய ஆய்வு ஆரம்ப காலகட்டங்களில் கணிதக் கற்றலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, கான்ஸ்டென்ஸ் கமீ (Constance Kamii) "சிறு குழந்தைகள் எண் கணிதம் (arithmetic) கண்டுபிடிப்பதில்லை. அவர்கள் அதை புதிதாக உருவாக்குகிறார்கள்" என்று விவாதிப்பதை உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். இந்த அவரது விவாதம் - "பாடசாலை செல்வதற்கு முன்பே குழந்தைகளுக்கு கணிதம் பற்றிய போதுமான அல்லது குறைந்தபட்சம் எண்கள் பற்றிய அறிவு இருக்கும்." என்ற கருத்துக்கு முரணாக இது இருப்பது போல முதல் பார்வையில் தோன்றும். இருப்பினும், குழந்தைகள் பாடசாலை செல்வதற்கு முன்பே பலவிதமான சூழ்நிலைகளில் கணித அறிவிற்கு ஆட்படுத்தப்படுகின்றார்கள் என்பதை நீங்கள் நினைவு கூர்ந்தால் உண்மையிலேயே இதில் முரண்பாடு இருப்பதாகத் தோன்றாது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கணிதத்தின் பல்வேறு மரபுகளை ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். அவற்றில் சில பழங்குடியினர் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களிலும், மேலும் சில "தெருவோரக் கணிதம்" - அதாவது "பாமர படிக்காத மக்களிடம் காணப்படும் கணிதம்" என முத்திரை குத்தப்பட்டவைகளாக இருக்கும் அவைகள் பாடசாலையில் கற்றுத்தரப்படும் கணிதத்தில் சேர்ந்து இருப்பதையும் நாம் காணலாம். கட்டுமானப் பணிபுரிபவர்கள், குழாய் வேலை செய்பவர்கள் மற்றும் வேறு கலைஞர்கள் தங்களுக்கே உரித்தான தங்கள் தொழில் சம்பந்தப்பட்ட கணிதத்தை உபயோகித்து வருவதை நாம் காண்கின்றோம்.

இன்னும் சிறிது ஆழ்ந்து நோக்கும் நிலையில், இடம் காலம் கடந்த கணிதவியல் சமூகத்தினர் கடைப்பிடிக்கும் கணிதத்தின் தன்மை, அந்த கணித இயல் வல்லுனர்கள் சார்ந்துள்ள மற்ற சமூகக் குழுக்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. இதன் காரணமாக, இனம், மொழி, தேசபற்று மற்றும் மதம் ஆகிய அம்சங்களையும் கணித வல்லுனர்கள் கவனத்தில் கொள்ளும் நிலை இருப்பதை நாம் மறந்துவிட முடியாது. கணித வல்லுனர்கள் தாங்கள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள் என்று நம்மை நம்ப வவைக்க விரும்பினாலும், உண்மை நிலை இதுதான். கணிதம் ஒரு பாடமாக உருவாகி வளர்ந்ததை ஒரு சித்திரமாகப் பார்த்தால், அது ஒரு நீண்ட சரித்திர நேர்கோடு போல் பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளில் யூக்ளிட்டிலிருந்து நியூட்டன் (Euclid through Newton) வழியாக இன்றைய தினம் வரை நீண்டு, இன்றைய நாட்களின் அதிகமான அளவில் சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்கு உள்ளாகியிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணித அறிவு தனிச் சிறப்புள்ளதா?**

வகுப்பறையில் இந்த கருத்துக்கள் ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்பாக, "கணிதம் என்ன கற்றுக் கொடுக்க வேண்டும்"? என்கிற விடயத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். கணித அறிவின் அமைப்பு மட்டுமே நம்முடைய பாடத்திட்டத்தை ஆளுமை செய்ய வேண்டுமா? அப்படியென்றால், இந்த அமைப்பு தனிப்பட்டது மற்றும் உலக அளவில் பொதுவானதா? இந்தக் கேள்வியை கணிதவியலாளரிடம் கேட்டால், அதற்கான பதில் "ஆமாம்" என்ற அழுத்தமான பதிலாகவே இருக்கும். இருப்பினும், கணித ஆய்வு சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுய வரையறை செய்து கொண்ட நெருக்கமான சமூகம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். முன்பே விவாதித்தபடி, பாடசாலை கணிதத்தின் குறிக்கோள் கற்பவர்கள் இந்த உயர்ந்த குழுவில் உறுப்பினர் ஆவதற்காக இல்லை.

**கணிதம் கற்பிக்கும் கலைக்கான விளைவுகள்**

மேலே சொல்லப்பட்ட கருத்துக்கள் இயல்பாகவே கணிதம் எப்படி கற்பிக்க வேண்டும் என்பதற்கான முடிவுகள் சிலவற்றிற்கு இட்டுச் செல்கிறது. இந்தத் தொகுதியில் கணிதப் பயிற்றுவிப்புக்கலை பற்றிய கட்டுரையாக இருப்பதால், அவைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும்போது,

1. எந்தச் சந்தர்ப்பத்தில் கணிதம் கற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற பாட விவரங்கள் குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும். இந்தப் பாட விவரங்கள் "உண்மை சார்ந்ததாக" இருந்தால் போதும் "உண்மை" யானதாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.
2. ஆரம்ப வகுப்புக்களில் குழந்தைகள் திடமான பொருட்களைக் கையாளுவதற்கான வாய்ப்புக்கள் நிறைய இருக்க வேண்டும்.
3. குறியீட்டு முறைகளுக்கு முறையாக மாறும்போது சிறப்புப் கவனம் செலுத்த வேண்டும். ஆரம்பித்தில் "சூத்திர வழிமுறைகள்" (algorithms) கற்றுக்கொடுப்பதை ஊக்குவிக்கக்கூடாது.
4. கணித அறிவு ஒரு முடிவான பொருள் என்கிற தோற்றத்தை கற்பவர்களிடத்தில் ஏற்படுத்தக்கூடாது.
5. ஆசிரியர் என்பவர் கணிதம் கற்பதன் வழி முறையில் மும்முரமாகச் செயல்பட்டிருக்கும் ஒவ்வொரு கற்பவரிடமும் ஒரு உதவியாளராக இருந்து செயல்பட வேண்டும் என்பது தான் ஒட்டுமொத்த கருத்தாகும்.

**முடிவுரை :**

கணிதத்தின் இயல்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் தத்துவத்துடன் தொடர்பு கொண்டது போலவும், அவை ஆரம்ப வகுப்புகளில் கணிதம் கற்பிப்பதில் அவ்வளவு பொருத்தமற்றதாகத் தோன்றக் கூடும். இருப்பினும் முன்பே குறிப்பிட்டது போல, அவை ஆழ்ந்த தொடர்பு உள்ளது என்பது தான் உண்மை, ஆகையால், பாடசாலை கணிதத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்டவர்கள் - ஆசிரியர்கள், பாடசாலை தலைமையாரிசியர்கள், ஆசிரிய கல்வியாளர்கள் போன்றவர்கள் - இங்கு குறிப்பிட்ட விடயங்களில் ஓரளவிற்காவது ஈடுபாடு கொள்ளவேண்டும். இதை எப்படிச் சிறப்பாகச் செய்வது என்பது இன்னும் ஒரு முடிவுற்ற கேள்வியாகவே உள்ளது.

## உசாத்துணை :


1. கலாமணி, த.(2011). கேத்திரகணிதம் கற்பித்தல்: சில சிந்தனைகள், ஆசிரியம், 005, 18-20.
2. தேசிய கல்வி நிறுவகம் . (1989). கணிதம் கற்பித்தல் முறைகள் பகுதி II
3. அமித்தபா M. (2013) கணிதக் கருத்துக்கள், ஆசிரியர் மேம்பாடு.
4. எழுகதிர், (2009), கணித பாடம் கற்பித்தலின் அவசியம், தினகரன்.



ஆசிரியர் : திரு.விநாயகமூர்த்தி குகநாதன்,
M.Ed ($2^{nd}$ upper) , B.Ed - Maths (Hons)
NDT – Maths
Dip. in office Admin.
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.


ஒரு பறவை
உயிருடன் இருக்கும்
போது எறும்பை
சாப்பிடுகிறது

பறவை இறந்த போது
எறும்பு தின்கிறது

நேரமும் சூழ்நிலையும்
எந்த நேரமும் மாறலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் உபதேசித்த கீதை
# அதன்வழி நடந்த கர்ணன் !

கர்ணன் என்ற பெயர் உள்ளவர்களே நல்ல பண்புகள் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் தீயவர்களின் நிழலில் அவர்கள் வாழ நேரிடும். பின் அவர்கள் ஆதரவிலிருந்த செஞ்சோற்றுக்கடனைத் தீர்க்க, அவர்கள் கடைசியில் தங்கள் உயிரை ஈந்து கடமையை முடிப்பார்கள். மகாபாரதத்தில் வரும் கர்ணன், விகர்ணன் ஆகியோருக்கும் ராமாயணத்தில் வரும் கும்பகர்ணனுக்கும் இது பொருந்தும்.

உலகறியத் தேர்ப்பாகன் மகனாகவே வளர்ந்து, பிறகு துரியோதனனால் அங்க தேச அரசனாக ஆக்கப்பட்ட கர்ணனின் ஒரே குறை, தன்னை எல்லோரும் தாய்-தந்தை யார் என்று தெரியாத அநாதை என்று அழைப்பது தான். மகாபாரதம் முழுவதுமே கர்ணனை வேறு வகையில் வில்லம்பு கொண்டு வெல்ல முடியாதவர்கள், இந்தச் சொல்லம்பைக் கொண்டுதான் மடக்குகிறார்கள்.

கர்ணனுக்கு மனவேதனை தரும் இந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபட அவருக்கு ஒரு வாய்ப்பை தருகிறார் கண்ணன். ஆனால் அதுவும் கர்ணனுக்கு ஒரு சோதனையாகவே வருகிறது. கர்ணனைப் பெற்ற தாய் தானே என்று சொல்லிக் கொண்டு வருகிறாள் குந்திதேவி. தனது ஐந்து பிள்ளைகளையும் காப்பாற்றத் தனது மூத்த மகனை இழக்கச் சித்தமாகி விடுகிறாள்.

"மகனே! உன்னிடம் இரண்டு வரங்கள் வேண்டும் தருவாயா?" என்று கேட்கிறாள்.

"நான் எதைக் கேட்டாலும் கொடுப்பவன். தாயாகிய நீ கேட்டு மறுப்பேனா? கேள் அம்மா?" என்று பதில் சொல்லுகிறான்

"மகனே! உன்னிடம் நாகாஸ்திரம் இருக்கிறது அல்லவா? அதை நீ அர்ச்சுனன் மீது ஒரே ஒரு முறைதான் பிரயோகம் செய்ய வேண்டும். இரண்டாவது தடவை பயன்படுத்தக்கூடாது. இது முதலாவது வரம். அர்சுனனைத் தவிர வேறு யார் மீதும் இந்த அஸ்திரத்தையோ, வேறு போர்கலன்களையோ நீ ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. இது இரண்டாவது வரம். கொடுப்பாயா ?" என்று கேட்கிறாள்.

சிறு தயங்குகிறான் கர்ணன். குந்திக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கர்ணனா கொடுப்பதற்கு தயங்குகிறான் ? என்ன காரணம் ?

கொடுத்தேன் தாயே! ஆனால் சிறிது தயங்கினதற்கு என்ன காரணம் தெரியுமா? என்று குந்திதேவியை நிமிர்ந்து பார்க்கின்றான் கர்ணன். "நான் துரியோதனனுக்காகப் போர் செய்து அவனுக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்க வேண்டியவன். அதற்குப் பயன்படுத்த வேண்டிய ஒரு முக்கியமான ஆயுதத்தை முழுவதும் நான் உபயோகிக்க மாட்டேன் என்று சொல்வதும் – அதையும் அவனுடைய அனுமதி இன்றி சொல்லி என்னை கட்டுப்படுத்திக் கொள்வதும் நான் அவனுக்குச் செய்யும் துரோகம் அல்லவா? அதனால்தான் தயங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பிறகு ஒப்புக் கொண்டேன் ஏன் தெரியுமா? ஒரு சுத்த வீரன் தன்னுடைய முக்கியமான போர்க்கலத்தை ஒருமுறை உபயோகித்துப் பயன்பெறாவிட்டால், அதை மறுபடியும் பயன்படுத்தமாட்டான். அதனாலேயே சம்மதம் கொடுத்தேன். பாண்டவர்களில் மற்ற நான்கு பேருடன் போரிட வேண்டாம் என்று சொன்னாயே அம்மா! அதைப்பற்றி எனக்குத் தயக்கமே இல்லை. ஏன் தெரியுமா? அவர்கள் என்னோடு சமமாக நின்று போரிடத் தகுதிவாய்ந்தவர்கள் இல்லை. அர்ச்சுனன் ஒருவனே எனக்கு நிகரானவன்!"

குந்தி கர்ணனிடம் கண்ணீர்விட்டு விடை பெற்றுக் கொண்டு திரும்புகிறாள். அவளைப் பார்த்துக்கொண்டே நின்றான் கர்ணன்.

"அம்மா! என்னிடம் மட்டும் வரங்களை வாங்கிக் கொண்டு போய் விட்டாயே? "மகனே உனக்கு ஏதாவது வேண்டுமா" எண்று ஒரு வார்த்தை கேட்கவில்லையே?" என்று கேட்கின்றான்.

குந்தி அழுது கொண்டே ஓடி வந்து அவனை அணைத்துக்கொண்டு "எது வேண்டுமோ கேள் மகனே?" என்று தடவிக் கொடுக்கிறாள்.

"எனக்கு இரண்டு வரங்கள் வேண்டும் அம்மா. முதலாவது வரம் இது. போரில் நான் தான் வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் முடிவு நம் கையில் இல்லை. நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்து போய் விடாது. ஒருவேளை நான் போர்க்களத்தில் உயிரிழக்க நேரிட்டால் எல்லோரும் என்ன சொல்லுவார்கள்? "அங்கதேசத்து அரசன் விழுந்து கிடக்கின்றான் என்றோ, துரியோதனின் ஆருயிர் நண்பன் உயிரிழந்தான் என்றோ சொல்லமாட்டார்கள். "தாயார் பெயர் தெரியாத அநாதை தொலைந்தான்" என்றுதான் சொல்லுவார்கள். அப்போது நீ என்னை மடிமீது வைத்துக் கொண்டு புலம்பி "மகனே! என்னை விட்டுப் போய் விட்டாயே?" என்று கதறி அழுது நீதான் எனக்குத் தாய் என்பதை உலகறியச் செய்ய வேண்டும் அம்மா!

இரண்டாவது வரம் இது. நான் இறக்கும் வரையில் நான் தான் உன் மூத்த புதல்வன் என்பதைப் பாண்டவர்களிடம் சொல்லக்கூடாது. சொல்லிவிட்டால் அவர்கள் போரிட மாட்டார்கள். ராஜ்ஜியத்தை எனக்கே கொடுத்துவிடுவார்கள். அப்படியும் நான் அந்த உரிமையை வாங்கித் துரியோதனனுக்கு கொடுக்கலாம். ஆனால் துரியோதனன் எவ்வளவு உயர்ந்தவன். அவனுக்கு நான் நன்கொடையாக ராஜ்யத்தைக் கொடுப்பதா? என்னுடைய திண்தோள் வலிமையைப் பயன்படுத்தி ஜெயித்துக் கொடுப்பது தானே முறை?" என்கிறான் கர்ணன்.

குந்தி அழுதபடியே அந்த இரண்டு வரங்களையும் கொடுத்துவிட்டுச் செல்கிறாள். கடமை உணர்ச்சியை முன்னால் வைத்து செய்யும் காரியத்தில் பற்றில்லாமல் ஈடுபட வேண்டும் என்பதை பின்னால் பகவான் பார்த்தனுக்கு கீதையாக உபதேசம் செய்கிறார். ஆனால் அதை கேளாமலேயே உணர்ந்து கீதைவழி நடந்தவன் கர்ணன் தான். இதைக் காட்ட போர்க்களத்தில் இன்னொரு நிகழ்ச்சி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் பார்த்தனிடம் "இதோ தேரைக் கர்ணனுக்கு மிக அருகில் கொண்டு போய் அவனை மடக்கி நிறுத்துகிறேன். நீ அம்பெய்து கர்ணனை வீழ்த்தி விடு!" என்று சொல்லி மிக லாவகமாக கொண்டுபோய் நிறுத்துகிறார். அர்ச்சுனன் வில்லை எடுத்து நிமிர்ந்து பார்த்து, சிறிது தயங்கிக் கலக்கத்துடன் "கிருஷ்ணா என்னால் அம்பைத் தொடுக்க முடியவில்லை. திரும்பி விடு!" என்று சொல்லி விடுகிறான். கண்ணன் தேரைத் திருப்பிக் கொண்டு வந்து விடுகிறார். பாசறைக்குச் செல்லும் வழியில் பகவான் பார்த்தனிடம் "அர்ச்சுனா! உனக்கு ஏன் மறுபடியும் இந்தக் கலக்கம்? கீதை உரையைக் கேட்ட பின்பும் உனது உள்ளத்தில் தெளிவில்லையா என்று கேட்கிறார். அர்சுனன் அவரிடம் "ஐயனே உமது யோசனையை ஆணையாக ஏற்று அம்பை போடத்தான் எண்ணினேன். ஆனால் கர்ணனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தபோது எனக்கு என் தமையனார் தருமனைப் பார்ப்பது போலிருந்தது. அம்பைத் தொடுக்க மனம் வரவில்லை என்று சொல்கிறான். உண்மையும் அதுதானே! ஆனால் உண்மை அறியாதவன் பார்த்தன். இருந்தும் ஒரு இனம்புரியாத உணர்ச்சியில் மனம் வசப்பட்டுத் தன் கடமையைச் செய்ய முடியாமல் கலங்குகிறான். ஆனால் கர்ணனுக்கோ தனது அருமைத் தம்பியே அர்சுனன் என்று தெரியும். ஆயினும் அவன் குழப்பமடையவில்லை. தனது கடமையே குறியாக நின்று பந்த பாசங்களை ஒதுக்கிப்போர் செய்கிறான். இப்போது கீதைவழி நடந்தவன் கர்ணனே என்பது தெரிகிறதல்லவா?

கர்ணன் தனது வீரப்போரின் கடைசி நிலையை அடைகிறான். தேரோட்டும் சல்லியன் இறங்கிப்போய் விட்டான். பரசுராமரின் சாபத்தால் அவனுடைய வில் வீரம் பழுதுபடுகிறது. தேர்ச்சக்கரம் சிக்கிக் கொள்கிறது. அப்போது அர்சுனன் அவன் மீது அம்பு மாரி பொழிகிறான். ஆனால் கர்ணன் செய்த புண்ணியம், கொடையால் வளர்த்த தருமம் அவனைக் காத்து நிற்கிறது. அதையும் நீக்கக் கர்ணனிடம் அந்தண வடிவில் வந்து யாசகம் கேட்கிறார் கண்ண பிரான். "ஐயா அந்தணரே! என்னிடம் இப்போது கொடுக்க ஏதும் இல்லையே! இந்தப் பாவியை மன்னியுங்கள் என்கிறான்" கர்ணன். பிறகு "இப்போது என்னால் கொடுக்க கூடிய ஏதேனும் ஒன்றை நீங்கள் கேட்க முடியும் ஆனால் உங்களுக்கு மனமார நன்றி சொல்வேன்" என்கிறான்.

"கர்ணா நீ செய்த தர்மங்கள் தந்த புண்ணியங்கள் இருக்கிறதல்லவா? அதைக் கொடேன்" என்று கேட்கிறார் கண்ணன். ஆனந்தக் கண்ணீர் சொரிய கர்ணன் "நன்றி பெரியவரே! செய்புண்ணியம் அனைத்தையும் தந்தேன் என்று தாரை வார்க்கிறான்.

செய் புண்ணியம் என்றால் செய்த புண்ணியம் செய்து கொண்டிருப்பது செய்யப்போவது மூன்றும் சேர்ந்தது என்று பொருள். அதாவது அப்போது கண்ணனுக்குத் தானம் செய்ததால் கிடைக்கும் நற்பலனையும் கூடக் கொடுத்துவிடுகிறான் கர்ணன். எத்தகைய கொடை அது?

பகவான் கர்ணனிடம் தானம் பெற்று அவனுக்கு விசுவரூபத்தைக் காட்டித் தரிசனம் கொடுக்கிறார். பாரதத்தில் மூன்று இடங்களில்தான் பகவான் விசுவரூபத்தைக் காட்டுகிறார். முதலாவது துரியோதனனிடம் தூது சென்ற போது, அவனிடம் தனது வல்லமையைக் காட்டி அச்சத்தை தோற்றுவிப்பதற்காக. இரண்டாவது அர்சுனனிடம் தனது உண்மை வடிவத்தை காட்டி அவனது மன குழப்பத்தை நீக்குவதற்காக. இவை இரண்டும் கூட அடுத்த பட்சம் தான். ஆனால் கர்ணனுக் தந்ததோ அந்த புண்ணியவான் கண்டு மகிழக் காட்டும் புண்ணிய தரிசனம். இதுவே மிக மேலானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் கர்ணனிடம் "உனக்கு எது வேண்டுமோ கேள்" என்கிறார்.

கண்ணா நான் மடியப் போகிறேன். இப்போது எனக்கு வரம் கொடுக்கிறாயா? அப்படியானால் நான் இன்னொரு பிறவியையை அடைந்து அதன் பலாபலன்களை அனுபவித்துத்தான் ஆகவேண்டும் என்பது பொருளா? ஆகட்டும். அப்படி நான் மீண்டும் பிறந்தால் எனக்கு, என்னிடம் "இல்லை என்று கேட்டு வருபவர்களுக்கு இல்லை" என்னாமல் கொடுக்கும் உள்ளம் இருக்க அருள வேண்டும் சுவாமி!" என்கிறான் கர்ணன்.

கர்ணனை விடச் சிறந்த கொடையாளி இல்லை. பொதுவாக தமிழ் புலவர்கள் சிறந்த கொடையாளியை மேகத்துக்குத்தான் ஒப்பிடுவார்கள். ஏனென்றால் மேகம் மறுபலனை எதிர்பாராமல் கொடுப்பது. அதன் பலனைப் பெறுவார் யார் எந்தவேளை என்றும் பாராமல் கொடுப்பதது. அதனால் மேகமே மிகச்சிறந்த கொடையாளிக்கு நிகராகக் கூறப்படுகிறது. ஆனால் வில்லிபுத்தூரரோ கர்ணனை "மேகத்தைக் காட்டிலும் சிறந்த கொடையாளி" என்று குந்தியின் வாய்சொல் மூலம் புகழ வைக்கிறார்.

அது எப்படி சரியாகும்? மேகத்தைப்போல கர்ணனும் யார் வந்து கேட்பினும், எந்த வேளையானாலும் கொடுக்கும் பண்பு கொண்டவன். ஆனால் மேகம் சமயமறிந்து பொழிவதில்லை. அதனால் சில வேளைகளில் அதன் பலன் கெடுதலாகவும் போய்விடுகிறது. ஆனால் கர்ணனோ சமயமறிந்து கொடை தந்து உதவுபவன். அவன் கொடுத்த கொடை யாருக்குமே கெடுதலாக வந்து முடிவதில்லை. அதனால் மேகத்தையும் விடச் சிறந்த, மிக உயர்ந்த கொடையாளி அல்லவா கர்ணன்?

புலவர் கீரன்
நன்றி : ஞானபூமி

வெற்றி பெறுவது
மிகவும் எளிதானதே
என்ன செய்கிறாய் என்பதை
அறிந்து செய் செய்வதை
விரும்பிச் செய் செய்வதை
நம்பிக்கையோடு செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு 13 வருட உத்தரவாதக் கல்வி......

**ஒரு சிறிய அறிமுகம்**

க.பொ.த உயர்தரத்தில் உள்ள பிரிவுகளில் அனுமதி பெற முடியாது இடைவிலக வேண்டி ஏற்படும் மாணவர்களுக்கான விசேட தொழிற்றுறைப் பிரிவாக ( Vocational Stream) இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு வருட காலம் (6 தவணைகள்) கொண்ட க.பொ.த உயர்தர பிரிவு போன்ற கற்கை நெறியே இதுவாகும்.

தொழிற்துறைப் பிரிவினுடைய ( Vocational Stream) முதலாம் தவணையானது ஒன்பது (09) பொதுப் பாடங்களைக் கொண்டிருக்கும். இவை தொழிற்பயிற்சிக்கும், தொழில் முயற்சியாண்மைகளுக்குமான அடிப்படைப் பாடங்களாக இருக்கும். இவைசெயற்பாட்டுக் கூட்டுக் கற்றல் ( Activity Based Collaborative Learning ) முறையில் நடாத்தப்படும் அனைத்துப் பிள்ளைகளும் இப்பாடங்களைப் பின்பற்றுவார்கள்.

1. தாய்மொழி (சிங்களம், தமிழ்)
2. வணிக ஆங்கிலம்மற்றும் தொடர்பாடல் திறன்கள்
3. அழகியல் ஆர்வம்
4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பதிறன்கள்
5. குடியியல் தொடர்பாடல் திறன்கள்
6. சமூக நலனுக்கான சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள்
7. சுயதொழிலாண்மைத் திறன்கள்
8. விளையாட்டு மற்றும் ஏனையபாடச் செயற்பாடுகள்
9. வாழ்க்கை வழிகாட்டி வேலைத்திட்டங்கள்

இரண்டாம் தவணையிலிருந்து பிரத்தியேகமான பிரயோகப் பாடங்களை மாணவர்கள் பின்பற்ற வேண்டியிருக்கும். இதற்காக இக்கல்வி முறைமையில் 26 புதியபிரயோகப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றுள் சில:

குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு (Child Psychology & Care)
உடற்கல்வியும் விளையாட்டும் ( Physical Education & Sports)
மின்மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக்கல்வி ( Electrical Electronic Studies)
பேஷன் வடிவமைப்பு ( Fashion Designing)
தரைஅழகு வடிவமைப்பு ( Landscaping)
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ( Tourism &Hospitality)
இணையத்தள வடிவமைப்பு ( Web Designing)
மென்பொருள் அபிவிருத்தி (Software Development)
கட்டுமானத் தொழில்நுட்பக் கல்லூரி ( Construction Studies)
உணவு பதப்படுத்தல் கல்வி( Food Processing Studies)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள்இவற்றிலிருந்து விரும்பிய மூன்று பாடங்களைத் தெரிவு செய்து தவணை-2, தவணை 3 இல் பின்பற்றுவார்கள். இப்பாடங்கள் சொற்ப அளவிலான அறிமுறைகளாகவும் (Theory) கூடியளவிலான பிரயோகப் பயிற்சிகளாகவும் (Pratical Skills) பாடசாலைக்கு வெளியிலான தொழில் நிறுவனப் பயிற்சிகளாகவும் (Industrial Training ) நடைமுறைப்படுத்தப்படும். இவற்றுடன் தரம் 12 முடிவடையும்.

தரம் 12இல் மாணவர்கள் பின்பற்றிய மூன்று பிரயோகப் பாடங்களிலிருந்து ஏதாது ஒரு பாடத்தை மாணவர்கள் தரம் 13 இன் முதலாம்(01) இரண்டாம்(02) தவணைகளில் பின்பற்றுவார்கள். இப்பாடமும் சொற்ப அளவிலான அறிமுறைகளாகவும், (Theory)கூடியளவிலான பிரயோகப் பயிற்சிகளாகவும் (Pratical Skills) பாடசாலைக்கு வெளியிலான தொழில் நிறுவனப் பயிற்சிகளாகவும் (Industrial Training ) நடைமுறைப்படுத்தப்படும். தரம் 13 இன் உடைய மூன்றாம் தவணையானது மாணவருக்கு அவருடைய பாடம் சார்ந்த பிரயோக ஒப்படை ஒன்று வழங்கப்பட்டு அதனை மேற்கொள்வதற்கான காலமாக இருக்கும்.

இக்கற்கை நெறியின் பின்னர் மாணவர்கள் நேரடியாக தொழிலுலகில் குறிப்பிடத்தக்க திறனுடன் நுழைய முடியும். இல்லாவிட்டால் தொழில்நுட்பக் கல்லூரிகள், இலங்கை வாழ்க்கைப் பல்கலைக்கழகம் எனும் பாதையில் தேசிய தொழிற்றகைமை மட்டம் V,VI ஊடாக பட்டதாரியாகவும் முடியும். அனைத்து மாணவரினதும் 13 வருட கல்வியை உறுதிப்படுத்துகின்றதாகவும், உயர் தொழிற்றிறன்களையும் நல்லாளுமைகளையும் வளர்ப்பதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**Source: www.moe.gov.lk**

கனவு காணுங்கள்
ஆனால் கனவு என்பது
நீ தூக்கத்தில்
காண்பது அல்ல
உன்னைத்
தூங்க விடாமல்
பண்ணுவது ஏதுவோ
அதுவே (இலட்சியம் ) கனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Organic farming and its importance

Organic farming means the production system used to produce food which avoids the use of synthetic pesticides, artificial fertilizers, growth hormones and antibiotics . Organic farming is done using animal and plant materials , degradable materials, natural composts and natural repellant pesticides. In organic farming, farmers maintain limitation for fertilizers as well as pesticides strictly

The modern society is fully adopted with synthetic fertilizers, varieties of pesticide and weedicide to boost the vegetative growth, to control the pest population and to control the weeds respectively for good yield.

Though such farmers obtain the profit, there are many consequences to the consumers. It leads many non – communicable diseases such as colon cancer, Breast cancer, chronic kidney diseases (CKD), and allergic reactions, such as skin ulcers, asthma and auto immune diseases. It not only causes human diseases but also it deteriorates the environmental health. There are huge losses to the biodiversity . For example useful Soil organisms like earth worm, beneficial insects such as honey bee, butterfly, predatory moth and medicinal plants will be eliminated from the environment. Many endangered animals will be eradicated.

Normally the organic products are more nutritional , tastier, inexpensive because they have been produced by non-toxic chemicals. The only answer to solve all these problems are to encourage the organic farming. The natural compost, natural repellents, and good cultivation practices will be best solution and it doesn't cause any disease on human being and an environment too.

There are many benefits gained by intaking and growing them such as free from poison, enhances agro-ecosystem health, increase greenhouse gas emission, conserves bio-diversity and protect the environment. Organic farming helps to prevent environmental degradation and be used to regenerate degraded areas, reduce the need for purchased inputs, improve the soil chemical properties and promote favourable chemical reactions. Like this there are many uncountable advantages we gain from organic farming. Organic farming is very beneficial to Friendly environment.

In organic farming production costs are high because farmers need more workers, food illness may often happen, here farmers can't produce enough food



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for world population to survive. Organic food is made expensive because farmers don't get much of land as conventional farmers. The modern farmers face these disadvantages. But organic farming is the only method to preserve the earth or we shall starve and die.

It is not easy task to do organic farming because there are many methods used such as soil management, weed management, crop diversity and applying integrated pest management.

It is very suitable to do organic farming because it is the only one ingredient in recipe for sustainable food future and it is an ecological management strategy to maintain soil fertility. One can offset the higher cost of organics by growing his or her own vegetables, Organic fertilizer is a good method to lead a happy life forever. Organic farming sustains the healthy environment.

**E. Ubhashagee**
**Grade :- 7 A**

Fight with your strength
Not with other's weakness
because true success lies
in your effort
Not in other's defeat.

Success is when
your "signature"
changes to
"Autograph"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Future Inventions

In the modern globalized world there is a great change in Science and Technology. There are many great inventions . A lot of technologies have been developed n this era. Do you think that our ancestors would have guessed this huge development of technology? So let's look at some predictions about future inventions.

Nobody can deny the fact that some cosmics and story books help the emergence of new modern inventions like robot, rocket etc. I just think of a flying fan which may help us to float in the sky and a door that will take us anywhere we love and wish to go. Can you think about a wonderful time machine which will help us to travel to past or future? I have a crazy idea about a table cloth which will give us food instantly when we wish.

I also imagine a small tablet which may help us to speak with different people who speak different languages even if we don't know any of their languages. What about a simple torch light which makes things big and small when we need. Let's take a look at a smart suit which helps us to become invisible when we wear that suit.

You may think that I have got some strange crazy ideas about future inventions. But we all know that cute and smart robots with different capabilities have been already introduced and there may be more in future with more skills and talents. An important fact that every scientist and inventor should keep in mind is that they should not invent anything which will be harmful to our human society or any other living beings, mainly for our admirable environment . If we ignore this fact we will face a great disaster. So let's invent useful and safety inventions

S.Aruna
Grade : 8 A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Water Crisis

